# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 கார்த்திகை 9 வியாழக்கிழமை (25.11.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 364


# கொழும்புக்கு இன்று வரும் கிருஷ்ணா ஞாயிறன்று கூட்டமைப்புடன் பேச்சு

## அரசியல் தீர்வு, மீள்குடியமர்வுக்கு முக்கியத்துவம்

கொழும்பு,நவம்பர் 24

இலங்கைக்கு நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம்மேற்கொண்டு இன்று மாலை கொழும்பு வரும்இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா, பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்குபற்றவிருக்கிறார். எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை அமைச்சர் கிருஷ்ணா தமிழ்தேசியக் கூட்டமைப்பினருடன் பேச்சு நடத்தவுள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது தமிழ்மக்களுக்கான அரசியல் தீர்வு குறித்து கூட்டமைப்பினர் கிருஷ்ணாவுடன் முக்கியமாகப் பேச்சு நடத்துவார் என்று கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் உதயனுக்குத் தெரிவித்தார்.

மீள்குடியமர்த்தப்பட்டுள்ள மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் வடக்கு கிழக்கின் தற்போதைய நிலைமைகள் குறித்தும் தாங்கள் பேச்சுக்கள் நடத்தவுள்ளதாக சுரேஷ் பிரேமச்சந்திரன் மேலும் கூறினார்.

இலங்கை விஜயத்தின் போது கிருஷ்ணா தமிழ்க் கட்சிகளையும் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான குழுவுடன் ஞாயிறு முற்பகல் 10 மணிக்கு பேச்சு இடம்பெறும்.

தமிழ்க் கட்சிகளின் அரங்கமும்

(24ஆம் பக்கம் பார்க்க)

# எமக்கு உரிமை இல்லாத இடங்களில் விகாரைகளை அமைக்கக் கூடாது

## ஐ.தே. கட்சி எம்.பி. சபையில் தெரிவிப்பு

கொழும்பு, நவ.25

எமக்கு உரிமையில்லாத இடங்களில் தேவையற்ற வகையில் பௌத்த விகாரைகளை அமைக்கக் கூடாது என்று ஐ.தே.கவின் தவிசாளர் காமினி ஜயவிக்கிரம பெரேரா நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

எந்த மதமாக இருந்தாலும் நாம் அதை மதிக்கவேண்டும். எமக்கு உரிமையில்லாத இடங்களில் பௌத்த விகாரைகளை அமைக்க வேண்டிய தேவை எமக்கில்லை. மக்களிடையே குரோதத்தை ஏற்படுத்தி மீண்டும் ஒரு பயங்கரவாதம் உருவாக நாம் இடமளிக்கக்கூடாது.

யுத்தம் முடிவடைந்துள்ள நிலையில் ஏன் அப்படியானதொரு நிலைக்கு அடித்தளமிடுகிறீர்கள்?

இலங்கை சர்வதேச ரீதியில்

(22ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வைக் காண நடவடிக்கை எடுங்கள்

## கிருஷ்ணாவுக்கு முதல்வர் கருணாநிதி கடிதம்

சென்னை,நவ.25

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண, அங்குள்ள முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள இடம்பெயர்ந்த மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்துவதற்கும் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணாவுக்கு தமிழக முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி கடிதம் ஒன்றை எழுதியுள் ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இன்று இலங்கைக்கு வரவுள்ள நிலையில், தமிழக முதலமைச்சர் மு.கருணாநிதி நேற்று இந்தக் கடிதத்தை அனுப்பியுள்ளார்.

கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

இந்திய வெளிவிவகாரச் செயலாளர் நிருபமா ராவ், அண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற்

(24ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையின் நடவடிக்கைகள் குறித்து ஐ.நா. செயலாளர் மூன் கண்டனம்

கொழும்பு, நவ.25

மனிதாபிமான நடவடிக்கைகள் குறித்து இலங்கை அரசு பின்பற்றிவரும் கொள்கைகளை ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கீ - மூன் சாடியுள்ளார்.

அத்துடன் மனிதாபிமான நடவடிக்கைகள் தொடர்பில் இலங்கை அரசு கடைபிடிக்கும் சில கொள்கைகள் திருப்தி அளிக்கக்கூடிய வகையில் அமையவில்லை என்றும் பான் கீ - மூன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஆயுதப் போராட்டங்களின் போது பொதுமக்களைப் பாதுகாப்பது தொடர்பில் ஐ.நா. பாதுகாப்புச் சபை வெளியிட்ட அறிக்கையில் பான் கீ - மூன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஐ.நா. பாதுகாப்புப் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் பான் கீ - மூன் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

(24ஆம் பக்கம் பார்க்க)

# அரசின் கோரிக்கையால் செஞ்சிலுவை அலுவலகங்கள் மூடப்பட்டாலும் மக்களுக்கான பணிகள் தொடரும்

## சர்வதேசச் செஞ்சிலுவைக் குழுவின் இலங்கைப் பேராயத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.25

வவுனியா மற்றும் யாழ்ப்பாணத்திலுள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் அலுவலகங்களை மூடிவிடும்படி அரசு கோரியுள்ளதால் விரைவில் அவை மூடப்படும். எனினும் எம்முடைய சேவையைக் கொழும்புப் பணியகத்தினூடாகத் தொடர்ந்து மேற்கொள்ளுவோம். இவ்வாறு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் இலங்கைக்கான புதிய பேராயத் தலைவர் ஈவ் ஜீயோவனோனி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:- இலங்கையில் 1989ஆம் ஆண்டு முதல்

(24ஆம் பக்கம் பார்க்க)


## உதயனின் வெள்ளி விழா உலா

27.11.2010 இல் மலரும்

உதயன் நாளிதழின் வெள்ளி விழாவை முன்னிட்டு உள்ளே...!

வாசகர் நெஞ்சங்கள் பேசுகின்றன


# இராணுவ ஆட்சியிலிருந்து விடுதலை - இயல்புநிலை இவையே தமிழ் மக்களின் இன்றைய அவசர தேவை

## நாடாளுமன்றில் விநாயகமூர்த்தி எம்.பி. உரை

கொழும்பு, நவ.25

இராணுவ ஆட்சியிலிருந்து விடுதலையும் இயல்பு நிலையுமே இன்று தமிழ் மக்களின் அத்தியாவசிய தேவையாகி உள்ளன என வலியுறுத்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினரான அப்பாத்துரை விநாயகமூர்த்தி, 1990ஆம் ஆண்டளவில் இருந்த நிலைக்கு இராணுவம் பின்தள்ளப்படவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தார்.

நேற்று நாடாளுமன்றத்தில் இரண்டாவது நாளாக நடைபெற்ற வரவு - செலவுத்திட்ட உரை மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே விநாயகமூர்த்தி இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

"இன்று யுத்தம் முடிந்து விட்டது. ஆனால் ஒருலட்சம் அளவிலான இராணுவத்தினர் தொடர்ந்தும் வடக்கில் நிலை கொண்டுள்ளனர். ஆசியாவிலேயே ஆகக்கூடுதலாக இராணுவமயப் படுத்தப்பட்ட நாடாக இலங்கை திகழ்கிறது. இவர்களுக்கு சீன அரசு அங்கு நிரந்தரமாக வீடுகளைக் கட்டிக்கொடுக்கப்போகிறது எனப் பத்திரிகை ஒன்றின் மூலம் அறிந்துகொண்டேன்" - என்றும் சபையில் அவர் சுட்டிக் காட்டினார்.

தொடர்ந்து உரையாற்றிய விநாயகமூர்த்தி எம்.பி. மேலும் கூறியவை வருமாறு:-

வடக்கின் 30 சதவீத பகுதியான வலிகாமம் வடக்கு படையினருடைய ஆதிக்கத்திலுள்ளதுடன் அவை உயர் பாதுகாப்பு வலயத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. 48 கிராம சேவகர் பிரிவுகளைக் கொண்டமைந்த வலிகாமம் வடக்கில் 28 கிராம சேவகர் பிரிவுகள் படையினரின் ஆதிக்கத்துக்குட்பட்டுக் காணப்படுவதுடன் எவரும் சென்று மீளக் குடியமர அனுமதிக்கப்படவில்லை. 12 கிராம சேவகர் பிரிவுகளிலேயே மக்கள் முழுமையாகக் குடியமர்ந்துள்ளனர் என்பதுடன் 05 கிராம சேவகர் பிரிவுகளில் மக்கள் பகுதியாகவே குடியமர்ந்துள்ளனர்.



பலாலி விமான நிலையம், பலாலி ஆசிரியர் கலாசாலை, மயிலிட்டிமீன்பிடித் துறை, மயிலிட்டி மார்புநோய் வைத்தியசாலை, காங்கேசன்துறை துறைமுகம், காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை, கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம், மாவிட்டபுரம் கந்தசாமி ஆலயம், தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலை, தெல்லிப்பழை புற்று

(24ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# விண்ணப்பம் தனிச் சிங்களத்தில் ஆயுள்வேத வைத்தியர்கள் விசனம்

யாழ்ப்பாணம்,நவ.25

ஆயுள்வேத வைத்தியத் துறையில் சேவை புரிந்து வரும் வைத்தியர்களுக்கு விருது வழங்கிக் கௌரவிக்கும் முகமாக தேசிய சுகாதார அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவங்கள் தனிச் சிங்கள மொழியில் அச்சிடப் பட்டுள்ளன.

இதன் காரணமாக தமிழ் ஆயுள்வேத வைத்தியர்கள் விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேசிய ரீதியாக ஆயுள் வேதத் துறையில் தொடர்ச்சியாக 25 வருட காலமாக சேவையாற்றி வரும் வைத்தியர்களுக்கு விருது வழங்கிக் கௌரவிக்க தேசிய சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.



இந்த வருடத்தை ஆயுள் வேத ஆண்டாகப் பிரகடனப் படுத்தி ஜனாதிபதியின் மகிந்த சிந்தனைப்படி இந்த விருது வழங்கப்படவுள்ளது.

இதற்காகத் தேசிய சுகாதார அமைச்சின் கீழுள்ள தேசிய ஆயுள்வேத பாதுகாப்புத் துறையினால் தனிச்சிங்கள மொழியிலான விண்ணப்பப் படிவங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இதன் காரணமாக தமிழ் மொழி மூலமான வைத்தியர்கள் அந்த விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்வதற்காக மொழி பெயர்ப்பாளர்களைத் தேடி அலைய வேண்டியேற்பட்டுள்ளதாகக் கூறுகின்றனர்.

இலங்கையில் தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளும் சம அந்தஸ்துடையவை என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அடிக்கடி கூறிவரும் நிலையில், இவ்வாறு சிங்கள மொழியில் விண்ணப்பங்களை வெளியிடுவது எம்மை வெறுப்படைய வைக்கும் செயலாகும் என பாதிக்கப் பட்டுள்ள வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர். (த-14)

# பிரான்ஸ் நாட்டு யுவதியிடம் ஹசீஸ் போதைப் பொருள்

கொழும்பு,நவ.25

மாத்தறை பொல்ஹேன பிரதேசத்திலுள்ள ஹோட்டலொன்றில் தங்கியிருந்த பிரான்ஸ் நாட்டு யுவதியொருவரின் கைப்பையிலிருந்து ஒரு இலட்சம் ரூபா பெறும தியான ஏழு கிராம் எடை கொண்ட 'ஹசீஸ்' போதை பொருள் மாத்தறைப் பொலீஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதோடு மேற்படி யுவதியும் கைது செய்யப்பட்டுள்ளார்

இது பற்றித் தெரியவருவதாவது:-

பிரான்ஸ் நாட்டு உல்லாசப் பயணத்துறையில் பணியாற்றும் 30 வயதுடைய இந்த யுவதி பிரான்ஸின் மீமோஸாஸ் நகர வாசியாவார். கடந்த ஒக்ரோபர் 10ஆம் திகதி உல்லாச ப் பயணியால் இலங்கை வந்துள்ள இவர் எதிர்வரும் ஜனவரி 07 ஆம் திகதி பிரான்ஸ் செல்லவிருந்தார்.

மேற்படி யுவதி போதைப் பொருள்களைப் பெற்று வருவதாக மாத்தறைப் பொலிஸ் தலைமையத்தின் குற்ற விசாரணைப் பிரிவுக்குக் கிடைத்த தகவல் ஒன்றையடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போதே அவர் வசமிருந்து போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதோடு அவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாத்தறை நீதவான் நீதிமன்றத்தில் இவர் நிறுத் தப்படவுள்ளதாகவும் பொலீஸார் தெரிவித்தனர். (த-22)

# வீட்டு ஜன்னலைப் பட்டப்பகலில் உடைத்து கைதடி வடக்கில் நகைகள் அபகரிப்பு

கைதடி, நவ. 25

வீடொன்றில் ஆள்களில்லாத சமயம் பார்த்துப் பட்டப்பகலில் ஜன்னலை உடைத்து உள்ளே நுழைந்த திருடர்கள் அங்கிருந்த சுமார் 10 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளை அபகரித்துச் சென்றுள்ளனர்.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் இருவரைச் சாவகச்சேரிப் பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது :-

அரச உத்தியோகத்தர்களான கணவனும் மனைவியும் வழமை போல் கடமைக்குச் சென்ற சம யத்தில் இந்தத் திருட்டு இடம் பெற்றுள்ளது.

வீட்டின் பின்புறத்தில் இருந்த ஜன்னலை உடைத்தே திருடர்கள் புகுந்துள்ளனர்.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாகச் சாவகச்சேரிப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து சந்தேகத்தின் பேரில் இருவரைக் கைதுசெய்த பொலிஸார் விசாரணைகளை நடத்திவருகின்றனர் என்று தெரிவிக்கப் பட்டது. (ஒ-9)

# சிவதொண்டன் நிலையம் பாதிப்புறாதவாறு வீதி அகலிப்புப் பணியை மேற்கொள்க!

## ஜனாதிபதிக்கு அனுப்பிய மகஜரில் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், நவ.25

யாழ். கே.கே.எஸ் வீதி அகலிப்புப் பணிகளின்போது அந்த வீதியில் உள்ள "சிவதொண்டன்" நிலையத்துக்கு எந்தவிதப் பாதிப்பும் ஏற்படாத வகையில் வீதி அகலிப்பு இடம்பெற வேண்டும் என்று சிவதொண்டன் நிலையத்தினர் ஜனாதிபதி உட்பட பல தரப்பினரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதுதொடர்பாக அந்த நிலையத்தினர் அனுப்பிவைத்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :-

யாழ்.கே.கே.எஸ் வீதி அகலிப்புப் பணிகள் துரித கதியில் மேற்கொள்வதற்கு முன்னேற்பாடுகள் இடம்பெற்று வருவது அனைவரும் அறிந்த விடயம். அது வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

இந்த நிலையில் இந்த வீதியில் சைவ மக்களின் பாரம்பரியம் மிக்க புனிதமான சமய நிறுவனம் என சிவதொண்டன் நிலையம் அமைந்துள்ளது.

ஈழத்துச் சித்தர்களில் ஒருவரான யோகர் சுவாமியால் நிறுவப்பட்டு அவர் தியானத்தில் மூழ்கியிருந்து ஆயிரக்கணக்கான சைவத்தொண்டர்களை வழிப்படுத்திய புண்ணிய நிலையமாக - இன்றும் சைவமக்களை வழிப்படுத்தி வருகின்ற சிவ தொண்டன் நிலையம் சைவ மக்களின் பாரம்பரிய சொத்தாகும்.

இந்தப் பாரம்பரிய சொத்தை எந்தச் சந்தர்ப்பத்திலும் இழந்துவிடக்கூடாது என்கின்ற மன உறுதியுடன் சைவ மக்கள் உள்ளனர்.

எனவே இதுகுறித்து அதிக 'அக்கறை எடுத்து சைவமக்களின் பாரம்பரிய நிலையமான சிவதொண்டன் நிலையத்தைப் பாதுகாக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறோம் - என்றுள்ளது. (ஒ-9)

# சிங்கள மொழி கற்கைநெறி பிற்போடப்பட்டது

கிளிநொச்சி,நவ. 25

தேசிய கல்வி நிறுவகத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி கல்வி வலய ஆசிரியர்களுக்கு நாளை மறுதினம் சனிக்கிழமை நடத்தப்படவிருந்த 2010 - 2011ஆம் கல்வியாண்டுக்கான மேலதிக மொழிப்பாட(சிங்களம்) அபிவிருத்திக் கற்கைநெறிக்கான திகதி பிற்போடப்பட்டுள்ளது.

இக்கற்கை நெறியானது அடுத்த மாதம் 11ஆம் திகதி சனிக்கிழமை கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரியில் ஆரம்பமாகும் என்று கற்கை நெறிக்கான இணைப்பாளர் பொ.கணேசன் அறிவித்துள்ளார். (ஒ-10-301)

# முல்லைத்தீவில் சிப்பாய்களின் சடலங்கள்; விசாரிப்பதற்கு விசேட குழு நியமனம்

கொழும்பு,நவ.25

முல்லைத்தீவில் கண்டுபிடிக்கப்பட்ட 26 இராணுவ வீரர்களின் சடலங்கள் தொடர்பாகப் பரிசீலிக்க, விசேட விசாரணைக் குழுவொன்றை அனுப்பிவைத்துள்ளதாக இராணுவப் பேச்சாளர் உபய மெதவல தெரிவித்தார்.

இராணுவ வீரர்களின் சடலங்கள் புதைக்கப்பட்டிருப்பதாகக் கிடைத்த தகவல் குறித்துக் கேட்டபோதே இராணுவப் பேச்சாளர் இவ்வாறு குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தின்போது புலிகளால் கைது செய்யப்பட்டு அழைத்துச்செல்லப்பட்ட இராணுவ வீரர்கள் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் நிலவுவதாக ஏ.எப்.பி. நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக ஆராய்வதற்கு மருத்துவ அதிகாரிகளுடன் விசேட புலனாய்வு அதிகாரிகள் அடங்கிய குழுவொன்று வடக்குப் பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் நேற்று முதல் அந்தக் குழு விசாரணைகளை ஆரம்பித் துள்ளது என்றும் இராணுவப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (த)

# யாழ்ப்பாணத்திலும் சூடுபிடிக்கிறது விளம்பரங்களுக்கான படப்பிடிப்பு

யாழ்ப்பாணம்,நவ.25

பல்வேறு செயற்பாடுகளுக்காக விளம்பரங்களைத் தயாரித்து வழங்கும் நிறுவனங்களின் முக்கிய மையமாக யாழ்ப்பாணம் மாறி வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

இங்கு சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதை அடுத்து தமது வியாபார நடவடிக்கைககளை மேம்படுத்துவதற்கு பல நிறுவனங்கள் கவர்சியான விளம்பரங்களை நாடுகின்றன. யாழ்ப்பாணத்தின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை மையமாக வைத்து விளம்பரங்களைத் தயாரிப்பதில் இந்த நிறுவனங்கள் இப்போது மும்முரமாக ஈடுபட்டு வருகின்றன.

வர்த்தக நடவடிக்கைகளை அதிகரிப்பதற்காகவும் மக்களின் நன்மதிப்பைப் பெறுவதற்காகவும் பல நிறுவனங்கள் தமது நிறுவனம் தொடர்பாகவும், உற்பத்தி மற்றும் சேவைகள் தொடர்பாகவும் விளம்பரங்களை நாடுகின்றன.

இந்த விளம்பரங்களை மனதைக் கவரக்கூடிய விதத்திலும்; கவர்ச்சிகரமாகவும் தயாரிப்பதற்காகப் பல்வேறு விளம்பரம் தயாரிக்கும் நிறுவனங்கள் தென்னிலங்கையில் இயங்கி வருகின்றன. நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி நாட்டின் பல இடங்களிலும் விளம்பரங்களை தயாரிக்கும் பணியில் இவை கடந்த காலங்களில் ஈடுபட்டு வந்தன.

இந்த விளம்பரத் தயாரிப்பு நிறுவனங்களின் பார்வை இப்போது யாழ்ப்பாணத்தை நோக்கித் திரும்பியுள்ளது. தாம் ஒப்பந்தம் செய்து கொண்ட நிறுவனங்களின் விளம்பரங்களைத் தயாரிப்பதற்காக நவீன தொழில் நுட்ப சாதனங்களுடன் இவை இப்போது யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ளன.

கடந்த சில வாரங்களாக இந்த விளம்பரத் தயாரிப்புக் குழுவினர் யாழ் நகரப் பகுதியில் தமக்குத் தேவையான காட்சிகளைப் படம் பிடிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இந்தப் படப்பிடிப்புக்களை மேற்கொள்வதற்காக இந்தியாவில் உள்ள பிரபல படப்பிடிப்பு நிறுவனங்களின் நிபுணர்களும் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் பிரசித்தி பெற்ற இடங்களான நல்லூர் கந்தசுவாமி கோயில் யாழ். பொது நூலகம், யாழ்.கோட்டை, சுப்பிரமணியம் பூங்கா, யாழ். வளைவு, ஏ-9 வீதி என்பன விளம்பரத் தயாரிப்புக்கான முக்கிய மையங்களாக அமைகின்றன. இந்த இடங்களில் விளம்பரத்துக்கான நிறுவனத்தின் உடைகளை அணிந்தவாறு இளம் பெண்கள் நடனமாடுவது, இளைஞர்கள் மோட்டார் சைக்கிள் செலுத்துவது, செல்பேசிகளில் உரையாடுவது உட்படப் பல காட்சிகள் படமாக்கப்படுகின்றன.

மிக் முக்கியமாக சில பிரபல செல்பேசி நிறுவனங்கள் நல்லூர் கந்தசுவாமி ஆலயம், யாழ். பொது நூலகம் ஆகியவற்றை வைத்துக் கடந்த சில தினங்களாக விளம்பரப் படப்பிடிப்பில் ஈடுபட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

இந்த விளம்பரப் படங்களில் தோன்றுவதற்காக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளே பயன்படுத்தப்படுவதாகவும், இவர்களுக்கு விளம் [illegible] கத் தெரிவிக்கப்படுகின்றது.(த-26)

# தனியார் துறை ஊழியர் களுக்கு ஜனவரி முதல் ஓய்வூதியம்

கொழும்பு,நவ.25

வரவுசெலவுத் திட்டத்தில் ஜனாதிபதி முன்மொழிந்த தனியார்துறை ஊழியருக்கான ஓய்வூதியத் திட்டம் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும். இத[illegible] 2 மில்லியன் ஊழியர்கள் ந[illegible] யடைவர் என மத்திய வங்[illegible] நர் நிவாட் கப்ரால் தெ[illegible]வித்தார்.

குறைந்த பட்சம் 10 வருடங்கள் தொடர்ந்து ஊழியர் சேமலாபநிதி, ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றுக்கு பங்களிப்பு செய்தவர்கள் இளைப்பாறும் போது மாதாந்த இளைப்பாற்று சம்பளத்திற்கு உரித்துடையவராவர்.

ஓய்வூதிய நிதியத்துக்கு ஊழியர்கள் சம்பளத்தின் 02 சத[illegible]தத் தையும், வேலைக் கொ[illegible]ள்வோர் 02 சதவீதத்தையும் செலுத்த வேண்டும். ஓய்வூதிய திட்டத்திற்கு கூடிய தொகை யைக் கூடிய காலம் பங்களிப்பு செய்யும் ஊழியர் ஓய்வூதிய மாக பெறுவார்.

ஊழியர் விரும்பினால் தன் சேவை முடிவுக்கால பணிக் கொடையை ஓய்வூதிய கொடுப்பனவுக்கு மாற்றி கூடிய ஓய்வூதியம் பெறவும் வழி செய்யலாம்.

இது தவிர தனியார் ஓய்வூதியக் திட்டம் மற்றெல்லா விடயங்களிலும் அரச ஊழியரின் விதவைகள், அநாதைகளின் ஓய்வூதியத் திட்டத்தை ஒத்திருக்கும். 1.2 மில்லியன் அரச ஊழியர்கள் ஓய்வூதியத் திட்டத்தில் உள்ளனர் எனவும் கப்ரால் தெரிவித்தார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்மை பிணையில் விடுவிக்கவாவது ஏதாவது ஏற்பாடு செய்யுங்கள்

## நீதியமைச்சர் ஹக்கீமுக்கு தமிழ் அரசியல் கைதிகள் கடிதம்

கொழும்பு, நவ.25

விசேட ஏற்பாட்டின் கீழ் நாங்கள் பிணையில் செல்வ தற்கு நீங்கள் ஒரு சட்டத்தரணி என்ற வகையில் எமக்கு உதவுங்கள்

இவ்வாறு புதிதாகப் பதவி யேற்றுள்ள நீதியமைச்சர் ரவூப் ஹக்கீமிடம் புதிய மகசின் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் கோரிக்கை. விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர்கள் அமைச்சருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள் ளவை வருமாறு:-

நீங்கள் நீதி அமைச்சராக நிய மிக்கப்பட்டதை அடுத்து மிகுந்த மகிழ்ச்சியடைகின்றோம் அத்துடன் வாழ்த்துக்களையும் தெரி விக்கின்றோம்.

எமது விடயத்தில் இனியாவது நியாயமான தீர்வு கிடைக்குமென நம்புகின்றோம்.

உங்களால் முடிந்தளவு எமது விடயத்தில் கூர்ந்து கவனம் செலுத்தி தற்போதைய சூழ் நிலையில் பிணையில் செல்வ தற்காவது விசேட ஏற்பாடு ஒன்றை உங்கள் தலைமையின் கீழ் ஏற்படுத்தித் தாருங்கள்.

நாட்டில் தற்போது நல்ல சூழல் உருவாகி உள்ளது நாட்டில் சகல மாகாணங்களிலும் தடையின்றி நீதிமன்ற செயற்பாடுகள் நடை பெற்று வருகின்றன. எமது நாட்டில் தற்போது அரச கட்டுப் பாடற்ற பகுதியென ஒன்றில்லை. நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் இயல்பு நிலை திரும்பியுள்ளது. கடந்த காலங்களில் ஜனாதிபதியின் தலைமையின் கீழ் வடக்கு கிழக்கு பகுதிகளில் அபிவிருத்திக் குழுக் கூட்டங்கள் நடைபெற்றன இவை அனைத்தும் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் இல்லை என்பதனைக் காட்டுகின்றன.

எமது பெற்றோர்கள் சகலவற்றையும் இழந்து ஒரு சட்டத் தரணியைக்கூட அமர்த்த முடியாமல் அவர்களிடத்தில் இருந்த எல்லாவற்றையும் இழந்து போய் கண்ணீரே வாழ்க்கையாக்கி வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

சிறைகளில் கர்ப்பிணித் தாய் மார்கள் கைக்குழந்தைகள் அங்கவீனர்கள் வயோதிபர்கள் உள்ளடங்கலாக 765 கைதிகளும் பல விதமான வியாதிகளுடன் மருத்துவ வசதிகூட இல்லாமல் எல்லோராலும் புறக்கணிக்கப்பட்டவர்களாய் வாழ்ந்து வருகின்றோம்.

இதுதான் இன்றைய எமது நிலை இவை இவ்வாறு இருக்க 01.08.2010 அன்று நீங்கள் உங்களின் தலைமைக் காரியாலயத்தில் வைத்து ஒரு ஊடகவியலாளர் மாநாட்டை நடாத்தி இருந்தீர்கள் அதில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விகளுக்குப் பதில் கூறும்போது,

1) அரசியல் கைதிகளின் விடுதலைக்கு நான் நேரடியாக தலையிடுவேன் என்றும் -

2) சிறைச்சாலைகளுக்கு நேரடியாகச் சென்று அரசியல் கைதிகளின் விபரங்களைத் திரட்டி அவர்களின் விடுதலை தொடர்பாகத் தமிழ் தேசிய கூட்டமைப்புடன் இணைந்து நாடாளுமன்றத்தில் குரல் எழுப்புவதாக உறுதிமொழி அளித்திருந்தீர்கள். அவை அனைத்தும் எமது பதிவுகளில் இருக்கின்றது.

நீங்கள் ஒரு சட்டவாளர் என்ற அடிப்படையிலும் எமது பிரச்சினைகளை விளங்கிக்கொள்ளக் கூடியவர் என்ற காரணத்தினாலும் எம் அனைவருக்கும் பிணையில் செல்வதற்கு விசேட ஏற்பாடொன்றை செய்துதரும்படி அனைத்திலங்கை அரசியல் கைதிகளாகிய நாம் உங்களிடத்தில் வேண்டி நிற்கின்றோம் என்றுள்ளது. (த)

## பிரிட்டன் சுற்றுலாப் பயணி வாகன விபத்தில் பலி

கொழும்பு,நவ.25

வாகன விபத்தொன்றில் காயமடைந்த 59 வயதான பிரிட்டன் சுற்றுலாப் பயணியொருவர் நேற்றுப் புதன்கிழமை காலை உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்தில் காயமடைந்த மற்றுமொருவர் ஆபத்தான நிலையில் மொனராகலை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள் ளார்.

யால சரணாலயத்தை நோக்கிப் பயணித்த சுற்றுலாப் பயணிகளின் வாகனமும் எல்ல பிரதேச செயலக அலுவலகத்தின் வாகனமும் நந்தெனிய பகுதியில் நேருக்கு நேர் மோதியதாலேயே இந்த விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்த தம்பதியினர் உடனடியாக மொனராகலை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் நேற்று நீதிவான் விசாரணைகள் நடைபெற்றன (த)

## சம்பத் வங்கியின் நெல்லியடிக் கிளை புதிய இடத்தில்

நெல்லியடி,நவ.25

சம்பத் வங்கியின் நெல்லியடிக் கிளை விசாலமான புதிய அமைவிடத்தில் இயங்கவுள்ளது.

169, யாழ்.வீதி நெல்லியடியில் உள்ள இந்தப் புதிய அமைவிடத்தின் திறப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 7.30 மணியளவில் இடம்பெறவுள்ளது.

வடமராட்சிப் பிரதேசத்தில் பாதுகாப்புப் பெட்டக வசதியைக் கொண்ட வங்கிக் கிளையாக நெல்லியடியில் - புதிய அமைவிடத்தில் சம்பத் வங்கி இயங்கவுள்ளதாக வங்கியின் முகாமையாளர் அறிவித்துள்ளார். (எ)

### விதியின் சதி...



வழியில் ஒரு மரணம்: யானையொன்றைக் காட்டில் விடுவதற்காக வனவிலங்கு அதிகாரிகள் நேற்று லொறியில் ஏற்றிச் சென்றனர். இதன்போது கலிகமுவ, மாக்கலானே எனும் பிரதேசத்தில் வைத்து லொறியின் அடித்தட்டு உடைந்து யானையின் கால் அதில் சிக்குண்டதால் மூச்சுத் திணறி யானை பரிதாபகரமாக பலியானது.

## தமிழ்க் கட்சிகளின் அரங்கம் கிருஷ்ணாவிடம் மகஜர் கையளிக்கும்

கொழும்பு, நவ.25

வடக்கு-கிழக்கு மக்களின் மீள்குடியேற்றம், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை உட்பட தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக தமிழக் கட்சிகளின் அரங்கம் தயாரித்த மகஜர், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடமும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணாவிடமும் நேரில் ஒப்படைக்கப்படும்.

இத்தகவலை தமிழ்க் கட்சிகள் அரங்க முக்கியஸ்தரான எம்.கே. சிவாஜிலிங்கம் நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

தமிழ்க் கட்சிகளின் அரங்கம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைப் பெரும்பாலும் இன்று அல்லது இவ்வாரத்துக்குள் சந்திக்கும் எனவும், இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணாவை எதிர்வரும் 28ஆம் திகதி கொழும்பிலுள்ள இந்தியன் இல்லத்தில் சந்திக்கும்.

தமிழ்க் கட்சிகளின் குழுவில் இதுவரையிலும் ஆராயப்பட்ட வடக்கு-கிழக்கு மக்களின் மீள்குடியேற்றத்தை அர்த்தமுள்ள தாக்குதல், பாதிக்கப்பட்ட பிரதேசங்களான வடக்கு- கிழக்கின் அபிவிருத்திக்கான முன்னுரிமை, இப் பிரதேசங்களில் முழுமையான சிவில் நிர்வாகத்தைக் கட்டியெழுப்புதல், சிறைச் சாலைகளில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுவித்தல் உள்ளிட்ட பிரச்சினைகள் தொடர்பிலும் இனப்பிரச்சினை தீர்வுக்கான பேச்சுகளை ஆரம்பிப்பதற்கான அடிப்படைகளைப் பற்றியும் எழுத்து மூலமான அறிக்கையைக் கையளித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் பேச்சு நடத்தப்படவுள்ளது.

இதேபோன்று இந்தியாவின் பங்களிப்பை வலியுறுத்தி இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணாவுடனும் பேசுவதற்குத் தீர்மானித்துள்ளோம்."- என்றார்.

## சீனாவின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்த இலங்கைக்கு இந்தியா ஆயுத விற்பனை

கொழும்பு,நவ.25

சீனாவின் ஆதிக்கம் இலங்கையில் அதிகரித்து வருவதை அடுத்து இந்தியா இலங்கைக்கு ஆயுங்களை விற்பனை செய்யும் ஏதுநிலை காணப்படுவதாக ஐ.ஏ.என்.எஸ். தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையும் இந்தியாவும் தமக்கிடையிலான பாதுகாப்புத் தொடர்பான பேச்சு அடுத்த வருடத்தில் ஆரம்பிக்கவுள்ளது.

ஐ.ஏ.என்.எஸ் செய்தி சேவையின் தகவல்படி, தமிழீழ விடுதலைப் புலிகளின் பின்னர் மாறியுள்ள பாதுகாப்பு நிலை மைகள் தொடர்பிலே இந்த பேச்சு இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை இந்த விடயம் தொடர்பான ஆரம்ப கலந்துரையாடல் இன்று இலங்கைக்கு வரும் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணாவிற்கும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ எல் பீரிஸிற்கும் இடையில் இடம் பெறலாம் என்றும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் போர் இடம்பெற்ற வேளையில் சீனா இலங்கைக்கான ஆயுத தளபாட விநியோகத்தராகச் செயற்பட்டது. அந்த வேளையில் இந்தியா ஆயுதமற்ற இராணுவ உதவிகளை மாத்திரம் இலங்கைக்கு வழங்கி வந்தது.

எனினும் சீனாவின் ஆதிக்கம் இலங்கையில் அதிகரித்து வருவதை அடுத்தே இந்தியா இலங்கைக்கு ஆயுங்களை விற்பனை செய்யும் ஏது நிலைகள் காணப் படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் இலங்கைக்கு வரும் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா அதிகார பரவலாக்கம் குறித்து அழுத்தம் கொடுப்பார் என்றும் ஐ.ஏ.என்.எஸ் குறிப்பிட்டுள்ளது. (த)

## உள்ளூராட்சி சபை வீதிகள் ஜனவரியில் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,நவ.25

யாழ். மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைகளின் கீழ் நிர்வகிக்கப் படும் பெரும்பாலான வீதிகள் 'நெல்சிப்' திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பொருளாதார அபிவிருத்தியமைச்சின் 'நெல்சிப்' திட்டத்தில் அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் பெரும்பாலான வீதிகளின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

வீதிகளின் தெரிவு விரைவில் இடம்பெறவுள்ளதாகவும் அதனைத் தொடர்ந்து அதற்கான நிதி ஒதுக்கீடு செய்ய ப்படும் எனவும் தெரி விக் கப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைகளினால் நிர்வகிக்கப் படும் வீதிகளில் பல குறைபாடுகள் உள்ளமையைப் பொதுமக்கள் தொடர்ந்தும் சுட்டிக்காட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-15)

## பாரம்பரிய கடற்தொழில் முறையில் மாற்றம் கொண்டுவர 'ஜெய்க்கா' முயற்சி

யாழ்ப்பாணம்,நவ.25

யாழ். குடாநாட்டில் பாரம்பரியமாக மேற்கொள்ளப்படுகின்ற கடற்றொழில் துறையை தற்காலத்துக்கு ஏற்புடையதாக மாற்றியமைக்கும் முயற்சியில் 'ஜெய்க்கா' நிறுவனம் இறங்கியுள்ளது.

இதற்காக, குடாநாட்டில் கடற்றொழில் செய்பவர்களின் தகவல்களைத் திரட்டும் நடவடிக்கைகளை அந்த நிறுவனம் ஆரம்பித்துள்ளது.

கடந்தகால, தற்கால மீன்பிடிச் சட்டங்கள் மற்றும் பாரம்பரியமாகக் கைக்கொள்ளப்படுகின்ற உள்ளூர் நடைமுறைகள் தொடர்பான தகவல்கள், தரவுகள் இதன் போது திரட்டப்படவுள்ளன.

ஜப்பான் நாட்டு நிறுவனமான ஜெய்க்கா, யாழ். மாவட்ட கடற்தொழில் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தினூடாகவே இந்தத் தகவல்களைத் திரட்டுகின் [illegible] பிரதேச [illegible] உள்ள சங்கங்களுடன் இந்த விடயம் தொடர்பாகக் கூடி ஆராயவுள்ளது.

பாரம்பரிய நடைமுறைகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள் தொடர்பாக யாழ். மாவட்ட கடற்தொழில் நீரியல் வள உதவிப் பணிப்பாளர் முன்னிலையில் கடற்தொழில் துறை சார் பிரதிநிதிகள் கூடி ஆராயவுள்ளனர். தற்காலத்துக்கு ஏற்ற முறைச் சட்டங்களாக முன்னர் உள்ளவற்றை மாற்றியமைப்பது குறித்து அவர்கள் இதில் ஆராய்வார்கள்.

இந்தத் திட்டத்துக்கான நிதியுதவி மற்றும் ஏனைய உதவிகளை 'ஜெய்க்கா' நிறுவனமே மேற்கொள்ளவுள்ளது. (த-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அகதி மீது பொலிஸார் வல்லுறவு: உள்துறைச் செயலர், டி.ஜி.பிக்கு நோட்டீஸ்

## சி.பி.ஐ. விசாரணை கோரும் வழக்கில் சென்னை நீதிமன்றம் உத்தரவு

சென்னை, நவ. 25

இலங்கை அகதி பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டது குறித்து சி.பி.ஐ. விசாரணை கோரும் வழக்கில் உள்துறைச் செயலர், டி.ஜி.பி. ஆகியோருக்கு நோட்டீஸ் அனுப்ப சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கரூர் மாவட்டம் ராயனூரில் உள்ள இலங்கை அகதிகள் முகாமைச் சேர்ந்த பி.பத்மாவதி என்பவர் உள்துறைச் செயலர், பொலிஸ் டி.ஜி.பி. ஆகியோ ருக்கு எதிராக சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

நாங்கள் தங்கியிருக்கும் முகாமுக்கு கடந்த மார்ச் மாதம் 7 ஆம் திகதி பி.ப. 1.30 மணிக்கு பசுபதிபாளையம் பொலிஸார் வந்தனர். பொலிஸ் காவலில் இருக்கும் எனது மகள் பத்மாவதியின் கணவர், எனது மகளைப் பார்க்க விரும்புகிறார் எனக் கூறி என்னையும், எனது மகளையும் பொலிஸ் வானில் கரூர் கலெக்டர் அலுவலகத்திற்குப் பின்புறமுள்ள கட்டடத்துக்கு அழைத்துச் சென்றனர்.

பொலிஸார் என்னை வானிலேயே இருக்க வைத்துவிட்டு, எனது மகளை மட்டும் அழைத்துச் சென்றனர். 3 மணி நேரத்துக்குப் பின்னர் என்னை உள்ளே அனுமதித்தனர். அங்கு எனது மகளின் அழுகுரல் கேட்டது. அங்கிருந்து 3பொலிஸார்வெளியே வந்தனர்.

பொலிஸார் எனது மகளிடம், நடந்த சம்பவம் குறித்து யாரிடமும் கூறக் கூடாது. அப்படிச் சொன்னால் உன்னையும், உனது கணவரையும் என்கவுண்டரில் கொன்று விடுவோம். உங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்களைக் கொலை வழக்கில் சேர்த்துவிடுவோம் என்று மிரட்டியுள்ளனர்.

அன்றைய தினம் வீட்டுக்கு வந்தவுடன் எனது மகள் தீ வைத்துக் கொண்டு தற்கொலைக்கு முயன்றார். பின்னர் எனது மகள் சிகிச்சைக்காக கரூர் அரச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். பின்னர் சட்டத்தரணிகள் தமயந்தி, பாரி ஆகியோர் மூலம் சென்னை உயர் நீதிமன்றத்தில் தகவல் தெரிவிக்கப்பட்டது.

உயர் நீதிமன்ற உத்தரவின் படி, கரூர் முதன்மை மாஜிஸ்திரேட் வைத்தியசாலையில் இருந்த எனது மகளின் வாக்குமூலத்தைப் பதிவு செய்தார். வருவாய் கோட்ட அதிகாரி (ஆர்.டி.ஓ.) எனது மகளின் மரண வாக்குமூலத்தைப் பரிசீலிக்காமல் விசாரணை நடத்தினார். இந்த நிலையில், எனது மகள் கடந்த மார்ச் மாதம் 10 ஆம் திகதி இறந்தார். எங்களது சம்மதம் இல்லாமல் எனது மகளின் சடலத்தை பிரேத பரிசோதனை செய்தனர். நாங்கள் சடலத்தைப் புதைக்க வேண்டும் என்று வலியுறுத்தியும், பொலிஸார் அதை எரித்துவிட்டனர்.

இதுவரை குற்றத்தில் ஈடுபட்ட பொலிஸார் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எனவே, சம்பந்தப்பட்ட பொலிஸார் மீது வழக்குப் பதிவு செய்ய வேண்டும். தவிர, இந்த வழக்கை சி.பி.ஐ. விசாரிக்க உத்தரவிட வேண்டும்.

மேலும், எனது மகளின் கணவரும் சிறையில் இருப்பதால் நானும், எனது பேரனும் கஷ்டப்படுகிறோம். ஆகவே, எங்களுக்கு இடைக்கால நிவாரணமாக ரூபா 5 இலட்சம் வழங்க உத்தரவிட வேண்டும்.

- இப்படி அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நீதிபதி சுகுணா முன்னிலையில் நேற்றுமுன் தினம் செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு வந்தது.

அப்போது நீதிபதி, இந்த வழக்கு தொடர்பாக உள்துறைச் செயலரும், பொலிஸ் டி.ஜி.பியும் விளக்கம் அளிக்க வேண்டும் என்று கூறி அவர்களுக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டார்.

### நயன்தாரா, பிரபுதேவாவுக்கு மீண்டும் நீதிமன்று நோட்டீஸ்

சென்னை, நவ. 25

நயன்தாரா, பிரபுதேவா ஆகியோருக்கு மீண்டும் நோட்டீஸ் அனுப்ப சென்னை குடும்ப நல நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பிரபுதேவாவின் மனைவி ரம்லத், நடிகை நயன்தாராவிடம் இருக்கும் எனது கணவரை என்னிடம் சேர்த்து வைக்க வேண்டும் என்று கூறி சென்னை குடும்ப நல நீதிமன்றத்தில் கடந்த மாதம் வழக்குத் தொடர்ந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம், அவர்கள் இருவரையும் நவம்பர் 23 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டது.

பிரபுதேவாவுக்கு அனுப்பப்பட்ட நோட்டீஸ் அவரது வீட்டின் கதவில் ஒட்டப்பட்டது. நடிகை நயன்தாராவுக்கு நடிகர் சங்கம் மூலம் நோட்டீஸ் அனுப்பப்பட்டது.


இந்த நிலையில், இந்த வழக்கு நீதிபதி எஸ்.மீனாட்சி சுந்தரம் முன்னிலையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது நயன்தாரா, பிரபுதேவா இருவரும் ஆஜராகவில்லை.

இதையடுத்து அவர்கள் இருவருக்கும் மீண்டும் நோட்டீஸ் அனுப்ப நீதிபதி உத்தரவு பிறப்பித்தார். வழக்கு விசாரணையை ஜனவரி 21ஆம் திகதிக்குத் தள்ளிவைத்தார்.

**இந்தியச் செய்திகள்**

# தங்க ரதத்தில் சாய்பாபா எழுந்தருளி புட்டபர்த்தியில் பக்தர்களுக்கு ஆசி!

## இந்திய வெளிவிவகார அமைச்சர் கிருஷ்ணா தலைமை வகிப்பு



புட்டபர்த்தி, நவ. 25

சத்திய சாய்பாபாவின் 85 ஆவது பிறந்த நாள் விழாவில், அவர் தங்க இரதத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு ஆசி வழங்கினார்.

சாய்பாபாவின் 85 ஆவது பிறந்த நாள் விழா நேற்றுமுன் தினம் புட்டபர்த்தி ஹில் வியூ சதுர்க்கத்தில் நடந்தது. சாய்பாபா முன்னிலை வகித்தார்.

இவ்விழாவுக்கு, மத்திய வெளிவிவகார அமைச்சர் கிருஷ்ணா தலைமை வகித்துப் பேசியவை வருமாறு -

இறைபணி, கல்வி, சுகாதாரம், மனிதநேயம், சமுதாய மாற்றத்தில் சாய்பாபாவின் பங்கு அதிகமாக உள்ளது. குறிப்பாக, கிராமங்களில் குடிதண்ணீர் வழங்கும் பணியில் பாபா ஈடுபட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

ஆந்திராவில் அனந்தபுர் மாவட்டம் மட்டுமல்லாது, சென்னைக்கு குடிதண்ணீர் வழங்குவதுடன், கல்விச் சேவையிலும் பாபா ஈடுபட்டுள்ளார்.

தமிழகத்தில் ஆழிப்பேரலை, குஜராத்தில் பூகம்பம், ஒரிசாவில் வெள்ளப் பாதிப்பு உட்பட பல்வேறு இடங்களில் ஏற்பட்டுள்ள இயற்கைச் சீற்றத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு பாபா உதவிகளைச் செய்து வருகிறார். இதனால், உலகம் முழுவதும் கோடிக்கணக்கான பக்தர்கள் சாய்பாபாவுக்கு உள்ளனர். இதன் மூலம் உலகம் முழுவதும் ஆன்மிகத்தைக் கொண்டு சென்றுள்ளார். இதனால், இலட்சக் கணக்கான பக்தர்கள் இங்கு வருகின்றனர்.

- இப்படி அவர் கூறினார்.

முன்னதாக பிராந்திய நிலையத்திலிருந்து விழா நடக்கும் ஹில் வியூ சதுக்கத்துக்கு தங்க இரதத்தில் சாய்பாபா எழுந் தருளி பக்தர்களுக்கு ஆசி வழங்கினார். சாய்பாபாவின் கல்விப் பணியை மேலும் மேம்படுத்தும் வகையில், டாடா குழுமத் தலைவர் ரத்தன் டாடா புதிய சாப்ட்வேர் கருவியை சாய் பாபாவிடம் வழங்கினார். விழாவில், ஆந்திர ஆளுநர் நரசிம்மன், முதல்வர் ரோசய்யா, தமிழகத் துணை முதல்வர் ஸ்டாலின், பஞ்சாப் ஆளு நர் சிவராஜ் பாட்டீல், தொழிலதிபர் ரத்தன் டாடா உட்பட முக்கிய பிரமுகர்கள் பலர் பங்கேற்றனர்.


**இந்துவின் மைந்தனுக்கு இதயம் கனிந்த பாராட்டுதல்**



**திரு. சதாசிவம் நிமலன் J.P.**
(Sc.sp. Trd, B.A., SLPS 2-II)

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் விஞ்ஞான ஆசிரியரும், விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியரும், ஐக்கிய தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்டத் தலைவருமான திரு. சதாசிவம் நிமலன் அவர்கள் யாழ். இந்துக் கல்லூரியின் பிரதி அதிபராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

இவரைப் பல ஆண்டுகாலம் சீரும் சிறப் புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

ஐக்கிய தமிழர் ஆசிரியர் சங்கம்,
*யாழ். மாவட்டம்.*

(வி/572545)


### ஈழத் தமிழ் உறவுகளுக்காக

# தீயினில் கருகிய முத்துக்குமாருக்கு சிலை வைக்க நீதிமன்றம் அனுமதி



மதுரை, நவ. 25

இலங்கைத் தமிழர் படுகொலையைத் தடுத்து நிறுத்துமாறு வலியுறுத்தி சென்னையில் தீக்குளித்த முத்துக்குமாரின் மார்பளவுச் சிலையை, தஞ்சையில் திறக்க அனுமதிக்குமாறு உயர் நீதிமன்ற மதுரை கிளை நேற்றுமுன் தினம் உத்தரவிட்டது.

இதுகுறித்து தமிழ்தேசப் பொதுவுடைமைக் கட்சியின் மாநிலப் பொதுச் செயலர் மணியரசன் தாக்கல் செய்த மனுவில் -

இலங்கையில் பல்லாயிரம் தமிழர்களை இலங்கை அரசு படுகொலை செய்யத் தொடங்கியபோது, அதைத் தடுத்து நிறுத்தி தமிழர்களைக் காக்குமாறு மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்தி சென்னையில் முத்துக்குமார் 29.01.2009 அன்று தீக்குளித்து தன்னுயிரை தியாகம் செய்தார்.

அவரின் தியாகத்தைப் போற்றும் வகையில் அவரது மார்பளவு உருவச் சிலையை தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் ஊராட்சியைச் சேர்ந்த சாணூரப்பட்டிக் கிராமத்தில் தனியாரின் இடத்தில் நிறுவ மாவட்ட ஆட்சியரிடம் அனுமதி கேட்டோம்.

ஆனால் அரசிடம் அனுமதி பெறவேண்டும் எனக் கூறி எங்கள் மனுவை ஆட்சியர் நிராகரித்துவிட்டார். எனவே, சிலை வைக்க அனுமதி வழங்க வேண்டும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசியல் கட்சியினர் தியாகியாக மதிக்கும் ஒருவருக்கு சிலை வைப்பதை யாரும் தடுக்க முடியாது. முத்துக்குமாரின் சிலை வைக்க மிரட்டல் உள்ளது என அதிகாரிகள் குறிப்பிடவில்லை. எனவே, தனியார் இடத்தில் சிலை வைக்க அனுமதிக்க வேண்டும்.

- இப்படி நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்தார்.


**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



16-11-2010 அன்று கொழும்பு BMICHஇல் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் உயர் தேசிய தகவல் தொழில் நுட்ப டிப்ளோமா (HNDIT) பட்டம் பெற்ற

**மகாலிங்கசிவக்குருக்கள் கோகுலன்**

அவர்கள் மேலும் பல பட்டங்கள் பெற்று நல்வாழ்வு வாழ வல்வெட்டி வேவில் பிள்ளையார் அருள்புரிய வேண்டி வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர் :-*

மாமா தி. கமலநாதன் ஐயா குடும்பம் (சுவிஸ்),
மாமா தி.விக்னேஸ்வரக் குருக்கள் குடும்பம் - வல்வெட்டித்துறை.

(106483)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# கிருஷ்ணாவின் வருகை பயன்தர.....

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா வரும் 27ஆம் திகதி சனியன்று இலங்கை வரவிருக்கின்றார். அன்றைய தினம் வடக்கில் இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்குவதற்கான இந்திய அரசின் 50 ஆயிரம் வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டத்தை அரியாலை நாவலடியில் அவர் ஆரம்பித்து வைப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்திய உதவியின் முதல் கட்டமான ஆயிரம் வீடுகள் திட்டத்தையே இந்திய அமைச்சர் அன்றைய தினம் ஆரம்பித்துவைக்க இருக்கிறார் என்பது தகவல்.

அமைச்சர் கிருஷ்ணாவின் வட பிரதேசப் பயணத்தின் நிகழ்ச்சித் திட்டத்தின் இன்னொரு அம்சமாக, அன்றைய தினம் வடக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கென நூறு உழவு இயந்திரங்களை (டிராக்டர்களை) வழங்கும் நிகழ்வையும் அவர் ஆரம்பித்து வைக்கவிருக்கிறார். அதுமட்டுமன்றி யாழ்ப்பாணத்தில் இந்திய துணைத் தூதரகத்தையும் அவர் திறந்து வைப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய அமைச்சரின் வருகையும் போரில் பாதிப்புற்ற மக்களுக்காக அவர் இந்திய அரசின் சார்பில் மேற்கொள்ளும் நடவடிக்கைகளும் இப்பிரதேச மக்களின் வரவேற்புக்குரியவையே.

புதிதாக அமைக்கப்படும் வீடுகளும் சரி, வழங்கப்படவிருக்கும் டிராக்டர்களும் சரி உண்மையாகப் பாதிக்கப்பட்ட மற்றும் அவைகள் அவசியம் தேவைப்படுகின்ற மக்களுக்கு கிடைக்க வேண்டும் என்பதே எமது கவனம்.

இடைத்தரகர்கள், அரசியல் வாதிகள் மற்றும் அதிகாரிகளின் தில்லுமுல்லுகள் இதில் இடம்பெறாமல் இருக்கவேண்டும். இந்தப் பணிகளை இந்திய அரச அதிகாரிகளே முன்னின்று அவதானிப்பார்களா அல்லது இலங்கை அதிகாரிகளின் பொறுப்பில் விட்டுவிடுவார்களா என்பது ஒன்றும் தெளிவாகத் தெரியவில்லை. எதுவானாலும் இலங்கை அரசு இதில் தன் மூக்கை நுழைக்காமல் இருக்க மாட்டாது. இது எங்கள் நாட்டு விவகாரம். இதில் நீங்கள் உதவி செய்வது ஒன்றும் பிசகில்லை. ஆனால் எமக்கும் இதில் ஏதோ ஒரு வகையில் தொடர்பிருக்கத்தான் வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தி நிற்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

அவ்வாறான ஒரு நிலை ஏற்பட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்த உதவிகள் சென்றடைவதில் சங்கடம் இருக்கலாகாது என்பதே முக்கியம்.

இந்திய அமைச்சரின் வடபகுதிப் பயணத்தில் இன்னொரு முக்கியமான அம்சம் யாழ்ப்பாணத்தில் துணை தூதரகம் ஒன்றை திறந்து வைப்பதாகும்.

இப்பகுதியில் இருந்து இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்ள விரும்பும் மக்களின் பயண ஆவணங்கள் துரித கதியில் பைசல் ஆவதற்கும், கலை கலாசார பரிவர்த்தனைகளுக்கான நடவடிக்கைகளை விரைவாக முடித்துக் கொள்வதற்கும் இத் துணைத் தூதரகம் உதவியாக இருக்க முடியும்.

மன்னார் துறையில் இருந்து படகுச் சேவைகள் ஆரம்பிக்கப்படவிருப்பதாலும் அமைதிச் சூழ்நிலையைப் பொறுத்து இந்தியாவில் தஞ்சம் கோரிய வடக்கு, கிழக்கு மக்கள் இலகுவாக இலங்கை திரும்புவதற்கும் இத் தூதரகம் உதவியாக இருக்கும் என்று நம்பலாம்.

மேலும் வடக்கு, கிழக்கில் இந்திய அரசின் சார்பான அபிவிருத்தி மற்றும் வர்த்தகப் பணிகளை முன்னெடுக்கவும், இங்குள்ள தமிழ் மக்களின் அரசியல், பண்பாட்டு விவரங்கள், அவர்கள் எதிர் நோக்கும் நெருக்கடிகள் தொடர்பான ஆய்வுகளுக்கும் உதவலாம். மற்றும் யாழ். பல்கலைக்கழகத்தின் விரிவாக்கம் மற்றும் புதிய துறைகளை ஆரம்பிப்பது தொடர்பாகவும் இந்தத் துணைத் தூதரகம் உதவும் என்று எதிர்பார்க்கலாம்.

இந்திய வெளியுறவு அமைச்சர் கிருஷ்ணாவின் இலங்கை விஜயம் இத்துடன் முடிந்து விடுவதாக இருக்க முடியாது.

வேறு ராஜீய, ராஜதந்திர விடயங்கள் பலவும் இதில் அடங்கியிருக்கவே செய்யும்.

போரின் பின்னர் ஒன்றரை வருடங்கள் கழிந்து விட்ட நிலையில் அப் போரில் பாதிக்கப்பட்டு அழிந்து கிடக்கும் பிரதேசங்கள், அங்கே வாழ்ந்து, வாழ்விழந்து போன மக்கள், கொட்டில்களிலும், கூடாரங்களிலும் மீள்குடியேற்றம் என்ற போர்வையில் ‘தறப்பாள்’ கூரைகளுக்குக் கீழே மழையிலும் வெள்ளத்திலும் சீரழிந்து நிற்கும் குடும்பங்கள் இவைகள் பற்றியும் இலங்கை அரசுடன் இந்திய அமைச்சர் பேசவேண்டும் என்று எதிர்பார்ப்பது தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவசியமான, அவசரமான ஒன்றாகும்.

ஏனென்றால், இந்த நிலைமைக்கெல்லாம் காரணமான கொடிய போருக்கு உதவியும் ஒத்தாசையும் புரிந்த நாடு பாரதம். போரில் ஈடுபட்டவர்களை எல்லாருமாகச் சேர்ந்து ஒழித்துக்கட்டிவிட்டீர்கள். அந்தப் போரில் எந்த வகையிலும் சம்பந்தப்படாத மக்கள் பலிக்கடாக்களாக்கப்பட்டார்கள். தப்பியவர்கள் அவலமும் துக்கமும் நிறைந்த வாழ்வுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

நியாயத்தின் பேரால், தர்மத்தின் பேரால் அந்த மக்களின் உரிமைகள் மீளளிக்கப்பட வேண்டும், அவர்களின் பிரதேசம் காப்பாற்றப்பட வேண்டும். அதன் மூலமே அவர்கள் தமது கலை கலாசாரங்களை, சமய சம்பிரதாயங்களை, மொழித் தனித்துவங்களை ஏனைய மக்களைப் போல் பேணிப் பாதுகாத்துக் கொண்டு ஒரே நாட்டில் ஒற்றுமையாகவும் அமைதியாகவும் வாழ்வது சாத்தியமாகும்.

இந்திய அமைச்சரின் வருகை இந்த வகையில் அமையுமெனில் மட்டுமே அது பயனுள்ளதாக அமையும்.

# 8 மாதங்கள் சம்பளம் வழங்காமல் தலைமறைவானது தனியார் நிறுவனம்

## தொழில் திணைக்களத்தில் பணியாளர்கள் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,நவ.25

ஊழியர்களுக்கு எட்டு மாத காலமாக ஊதியம் வழங்காது ஏமாற்றி வந்த தனியார் நிறுவனம் ஒன்று திடீரெனத் தலைமறைவாகிய சம்பவம் ஒன்று அண்மையில் யாழ். நகரில் இடம் பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தால் பாதிக்கப்பட்ட ஊழியர்கள் பலர் யாழ். மாவட்டத் தொழில் திணைக்களத்தின் அலுவலகத்தில் முறைப்பாடுகளைச் செய்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-

தென்னிலங்கையைத் தலைமை அலுவலகமாகக் கொண்ட ‘வேள்ட் வைட் கிறியேசன் டெவலப்மன்ட் சென்ரர்’ என்ற தனியார் நிறுவனம் தனது கிளை நிறுவனத்தைக் கடந்த வருடம் யாழ். மாவட்டத்தில் ஆரம்பித்தது. பிரதேச சபைகளுடன் இணைந்து யாழ் மாவட்டத்திலுள்ள வீதிகளுக்குப் பெயர்ப் பலகைகளை அமைக்கும் பணியில் இந்த நிறுவனம் ஈடுபட்டு வந்தது.

யாழ்ப்பாணம், நுவரெலியா மாவட்டங்களைச் சேர்ந்த எட்டுப் பேர் இந்த நிறுவனத்தில் பணிக்காக இணைந்து கொண்டனர். அவர்களுக்கு எட்டு மாத காலத்துக்கான ஊதியத்தை அந்த நிறுவனம் தொடர்ச்சியாக வழங்காமல் பின்னடித்து வந்துள்ளது. இந்த நிலையில் ஊழியர்களுக்கும் நிறுவன நிர்வாகத்துக்குமிடையில் ஊதிய விடயமாக முரண்பாடுகள் ஏற்பட்டன. அதனைத் தொடர்ந்து ஒரு நாள் அந்த நிறுவனம் தனது செயற்பாடுகளைத் திடீரென இடை நிறுத்திவிட்டுத் தலைமறைவாகிவிட்டது. அத்துடன் நிறுவனத்தின் அதிகாரிகளுடைய கைத்தொலைபேசி இலக்கங்களும் செயலிழந்துவிட்டதாகப் பாதிக்கப்பட்ட ஊழியர்கள் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர். (த-14)

# ஊழியர் சேமலாப நிதி, பணிக்கொடை செலுத்தாத நிறுவனங்கள் மீது நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ. 25

ஊழியர் சேமலாப நிதி, பணிக்கொடை ஆகியவற்றைச் செலுத்தத் தவறும் நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ். மாவட்டத் தொழில் திணைக்களத்தின் உதவித் தொழில் ஆணையாளர் கனகேஸ்வரன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ். மாவட்டத்தில் தற்போது 700 இற்கும் மேற்பட்ட நிறுவனங்கள் ஊழியர் சேமலாப நிதியைச் செலுத்தி வருகின்றன. புதிதாக ஆரம்பிக்கும் நிறுவனங்கள், ஏற்கனவே செயற்பட்டு வரும் நிறுவனங்கள் சில இன்னமும் ஊழியர் சேமலாப நிதியை செலுத்தத் தவறிவிடுகின்றன. அவற்றுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம்.

இந்த வருடம் இரண்டு நிறுவனங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளோம். அந்த நிறுவனங்கள் தொடர்பான விசாரணைகள் தற்போது நீதிமன்றங்களில் நடைபெற்று வருகின்றன என்றார். (த-14)

# அழகியல் கல்வி ஆசிரியர் நியமனம்; குறைந்த எண்ணிக்கையினரே சித்தி

யாழ்ப்பாணம், நவ. 25

அழகியல் கல்வி ஆசிரியர் நியமனப் போட்டிப்பரீட்சையில் மிகக் குறைந்த வீதத்தினர் மட்டுமே சித்தியடைந்துள்ளனர். பரீட்சையில் சித்தியடைந்து 40 புள்ளிகளுக்கு மேல் இரண்டு பாடங்களில் 80 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

அழகியல் பாடத்துறையில் பட்டம் பெற்றவர்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்குவதற்கு நடத்தப்பட்ட போட்டிப்பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் என்ற வகையில் சராசரி 80 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக் கொண்டவர்களின் பட்டியல் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் கல்வி அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. போட்டிப் பரீட்சைக்கு தோற்றியவர்களில் 10 வீதத்துக்கு குறைவானவர்களே பரீட்சையில் சித்தியடைந்திருப்பதாகக் கூறப்படுகின்றது. பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் கொழும்பு கல்வி அமைச்சில் இன்று வியாழக் கிழமை நடைபெறவுள்ளது.

பரீட்சையில் சித்தியடைந்து நேர்முகப் பரீட்சைக்கு தகுதி பெற்றவர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு கல்வி அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையில் 10 வீதத்துக்கு குறைவானவர்களே பரீட்சையில் சித்தியடைந்திருப்பதாகவும் இந்த எண்ணிக்கையில் 100 பேர் மட்டில்தான் தமிழர்கள் என கல்வி அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் எண்ணிக்கைக்கும் அழகியல் கல்வி ஆசிரியர் ஆளணி எண்ணிக்கைக்கும் இடையில் பெரும் இடைவெளி காணப்படுவதால் அழகியல் கல்வி ஆசிரியர் ஆளணியைப் பூர்த்தி செய்வது தொடர்பான தீர்மானம் அமைச்சரவையின் அனுமதியுடன் கல்வி அமைச்சரினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய விடயம் எனக் கூறப்படுகின்றது. (ஐ-11)

# தேர்தல் திருத்தச் சட்ட செயலமர்வு ஞாயிறன்று

யாழ்ப்பாணம், நவ.25

உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்டமூலம் தொடர்பான செயலமர்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நாவலர் வீதியில் அமைந்துள்ள தியாகி அறக்கொடை நிறுவன மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சிந்தனைக்கூடம், யாழ்ப்பாணம் எனும் ஆய்வு அபிவிருத்திக்கான அமைப்பின் ஏற்பாட்டில் ‘அரசியலமைப்புக்கான 18 ஆவது திருத்தமும், உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல் திருத்தச் சட்டமூலமும்’ என்னும் தலைப்பில் செயலமர்வு இடம்பெறவுள்ளது.

இந்தச் செயலமர்வில் காலை 9.30 மணிக்கு அரசியலமைப்புப் பற்றியும், பிற்பகல் 2.30 மணிக்கு உள்ளூராட்சிச் சட்ட திருத்தங்கள் பற்றியும் உரையாடப்படவுள்ளது.

பிரதான உரையை ஜனநாயக உரிமைகளைக் காப்பதற்கான இயக்கத்தின் பணிப்பாளரும், பிரபல அரசியலமைப்பு சட்ட வல்லுநருமான சட்டத்தரணி எஸ்.ஜி.புஞ்சிகேவா நிகழ்த்தவுள்ளார். (ம-311)

## நாளை

| | | |
|---|---|---|
| கார்த்திகை 10 | | 26.11.2010 வெள்ளிக்கிழமை |
| திதி: | : | பஞ்சமி மு.இ.07.05 வரை |
| நட்சத்திரம் | : | புனர்பூசம் மு.ப. 7.51 வரை |

## எங்கு அன்பு உள்ளதோ அங்கு சாந்தி இருக்கும்

மனத்திற்கு மனம்தான் அத்தாட்சி.
உடம்பிற்கு நற்பண்புகள்தான் அத்தாட்சி.
முட்டாள்களுக்கு முட்டாள்தனமே அத்தாட்சி.
எல்லோருக்கும் சுவாமிதான் அத்தாட்சி.
உனது தாய்க்கு மதிப்பளித்தால் பிரபஞ்சத்தாய் உன்னைக் காப்பாள்.
உனது தகப்பனுக்கு மதிப்பளித்தால், எல்லாப் பொருள்களினது தந்தை உன்னைக் காப்பார்.
உனது பெற்றோருக்கு மதிப்பளித்தால், உனது பிள்ளைகள் உனக்கு மதிப்பளிக்கும்.
எங்கே அன்பு உள்ளதோ அங்கு சாந்தி இருக்கும்.
எங்கே சாந்தி உள்ளதோ அங்கு உண்மை இருக்கும்.
எங்கே உண்மை உள்ளதோ அங்கு கடவுள் இருப்பார்.
எங்கே கடவுள் இருக்கிறாரோ அங்கு ஆனந்தம் இருக்கும்.
அன்பு இல்லாத ஒரு உண்மையையோ அல்லது அன்பான ஒரு பொய்யையோ பேசாதீர்கள்.
சொல்லில் தயவு நம்பிக்கையை உண்டாக்கும்.
எண்ணத்தில் தயவு ஆழ்ந்த அறிவை உண்டாக்கும்.
கொடையில் தயவு அன்பை உண்டாக்கும்.



சாயி சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப் பெயர்ச்சி உங்களுக்கு எப்படி?

## 21.11.2010 முதல் 07.05.2011 வரை

வாசகர்களே !
நீங்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த குருப் பெயர்ச்சி வந்து விட்டது. இதுவரை கும்ப ராசியில் சஞ்சரித்து சிறிது காலப்பகுதியில் குருவாசம் செய்து, பின் மீனத்துக்கு அதிகாரமாகச் சென்று, பலா பலன்களைக் கொடுத்து மீண்டும் கும்பத்துக்கு வந்து ஒரு சில நாள்கள் மட்டும் இருந்த குரு இப்பொழுது 12 ஆம் இடமான மீனராசியில் கடந்த 21ஆம் திகதி முதல் சஞ்சரித்து உங்களுக்கான பலாபலன்களை வழங்கவுள்ளார்




நண்பர்களிடம் சிறந்த உறவைப் பேணி வரும்இடபராசி அன்பர்களே! உங்கள் ராசிக்கு பதினொராம் இடத்தில் குருபகவான் மிகுந்த அனுகூலத்துடன் பெயர்ச்சியாகி உள்ளார். அவர் தனது 5, 7, 9 ஆகிய பார்வையால் முறையே ராசிக்கு மூன்றாம் இடமான புகழ், தைரியம், ஐந்தாம் இடமான புத்திர, பூர்வ புண்ணியம், ஒன்பதாம் இடமான களஸ்திர ஸ்தானங்களை பார்க்கிறார். ஆதாய குரு என்கிற நல்ல அமர்வு உங்கள் வாழ்வில் முன்னேற்றத்தைத் தரும். உங்கள் செயலில் மிகுந்த நம்பிக்கையுடன் ஈடுபடுவீர்கள். மனதிலும், உடலிலும் புத்துணர்ச்சி ஏற்படும். பணவரவில் தாராளயோக நிலை உண்டு. சமூகத்தில் கூடுதல் மரியாதை, அந்தஸ்து கிடைக்கும். தம்பி, தங்கைகளின் திருமணத்தை திட்டமிட்டபடி சிறப்பாக நடத்துவீர்கள். வீடு, வாகனத்தில் தேவையான வளர்ச்சி திருப்திகரமாக அமையும். தாயின் அன்பு, ஆசி பெறு வீர்கள். புத்திரர்கள் பெற்றோர் சொல்கேட்டு நடந்து தகுதி, திறமையை நல்லபடியாக வளர்த்துக்கொள்வர். ஆதாய பணவரவு கிடைத்துக் கூடுதல் சொத்து வாங்குவீர்கள். இஷ்ட, குலதெய்வ அருள் பரிபூரணமாகத் துணைநின்று உதவும். உடல் நலம் பலமுடன் திகழும். பணிகளை உற்சாகமுடன் நிறைவேற்றுவீர்கள்.

சிரமம் அணுகாத கௌரவம் நிறைந்த வாழ்க்கை முறை கிடைக்கப்பெறுவீர்கள். கடன்களை பெருமளவில் அடைக்கலாம். தம்பதியர் ஒருவருக்கொருவர் அன்பு, பாசத்துடன் நடந்து சந்தோஷ வாழ்வு நடத்துவர். நண்பர்களின் அன்பு, உதவி திருப்திகரமாகக் கிடைக்கும். கேளிக்கை, விருந்து உபசரிப்புகளில் ஆர்வமுடன் பங்குபெறுவீர்கள்.

சீரானஓய்வு உடல் நலத்தைத் தொடர்ந்து காத்திட உதவும். உங்களின் வெகு நாளைய கனவு திட்டங்கள் எளிதாக நிறைவேறும். மூத்த சகோதரரின் அன்பைப் பெறும் விதத்தில் நடந்து கொள்வீர்கள். வெளிநாடு வேலை வாய்ப் புக்கு முயற்சிப்பவர்களுக்கு பணி கிடைத்து தாராள பணவரவைப் பெற்றுத்தரும். திருமண வயதினருக்கு நல்ல வரன் கிடைத்துத் திருமணம் சிறப்புற நடக்கும்.

தொழிலதிபர்கள்: தொழில் சார்ந்தவகையில் வளர்ச்சி ஏற்படும். இரசாயனப்பொருள்கள், தளபாடம், கட்டுமானப் பொருள்கள் உற்பத்தி செய்யும் தொழிலதிபர்கள் கூடுதல் உற்பத்தியும் அதிக விற்பனையும் அமைந்து தாராள பணவரவு காண்பர். மற்றவர்களுக்கு இவர்களை விட கூடுதல் இலாபம் கிடைக்கும். தொழிலில் கூட்டுச் சேர பலரும் முன்வருவர். மருத்துவமனை, தொழிற்பயிற்சி நிறுவனம் நடத்துபவர்கள் பணியாளர்களின் ஒத்துழைப்பைப் பெறுவர்.

வியாபாரிகள்: அழகு சாதனப் பொருள்கள், உதிரிப்பாகங்கள், கட்டுமானப் பொருள்கள், பால் பொருள்கள், மருந்து, மருத்துவ உபகரணம், மின்சார உபகரணங்கள், தளபாடங்கள், கண்ணாடி, கைவினைப் பொருள்கள், பாத்திரங்கள், வாத்தியக் கருவிகள், தோல் பொருட்கள், வாசனைத் திரவியங்கள், செல்லப்பிராணிகள் விற்பனை செய்பவர்கள் வியாபாரம் சிறந்து அதிக இலாபம் பெறுவர். நகை வியாபாரம் உள்ளிட்ட மற்றவர்களுக்கு இவர்களையும் விட நல்ல இலாபம் உண்டு. கடந்த கால கடன் மிகுதி கிடைத்து தொழிலை அபிவிருத்தி செய்வீர்கள்.

பணியாளர்கள்: அரசு மற்றும் தனியார் துறையில் பணி புரிபவர்கள் செயலில் நேர்த்தியும் உற்சாகமும் பெறுவர். பணி சிறந்து உயர் அதிகாரிகளிடம் பாராட்டைப் பெறுவீர்கள். சம்பள உயர்வு, பதவி உயர்வு, விரும்பிய பணியிட மாற்றம் கிடைக்கும். சக பணியாளர்கள் உதவி மனப்பான்மையுடன் நடந்து கொள்வர். தொழில்நுட்பம், கலை அம்சம் சார்ந்த பணியில் உள்ளவர்கள் கூடுதல் வேலைவாய்ப்பு, ஆகிய நற்பலன்களைப் பெறுவர்.

பெண்கள்: பணிபுரியும் பெண்கள் உற்சாகத்துடன் செயல்புரிந்து பணிகளை திறம்பட நிறைவேற்றுவர். பதவி உயர்வு, எதிர்பார்த்த கடன் எளிதாகக் கிடைக்கும். குடும்பப் பெண்கள் கணவரின் அன்பு, தாராள பணவசதி பெற்று இனிய வாழ்வு நடத்துவர். புத்திரப்பேறு இல்லாதவர்களுக்கு அனுகூல பலன் உண்டு. ஆடை, ஆபரண சேர்க்கை ஏற்படும். சுய தொழில் புரியும் பெண்கள் உற்பத்தி, விற்பனை சிறந்து உபரி வருமானம் காண்பர். நிலுவைப்பணம் எளிதில் வசூலாகும். இளம் பெண்களுக்கு எதிர்பார்த்தபடி நல்லவரன்

**தருபவர் வித்யா**

கிடைத்துத் திருமணம் சிறப்புற நிறைவேறும்.

மாணவர்கள்: கணினி, இதழியல், உல்லாச விடுதி முகாமைத்துவம், மருத்துவம், பொறியியல் நிதி மேலாண்மை, சினிமா தொழில்நுட்ப துறைகளில் பயிற்சி பெறும் மாணவர்கள் ஒருமுகத் தன்மையுடன் படித்துத் தேர்ச்சியில் முன்னேற்றம் காண்பர். ஏனைய துறையில் உள்ளவர்கள் இவர்களையும் விட சிறப்பாகப் படிப்பர். உயர்நிலை, மேல்நிலை மாணவர்களுக்கும் கல்வியில் முன்னேற்றமான ஆண்டாக அமையும். சக மாணவர்கள் படிப்பில் உறுதுணையாக செயற்படுவர். படித்து முடித்தவர்களுக்கு நல்ல சம்பளத்துடன் வேலை வாய்ப்பில் முன்னுரிமை கிடைக்கும். பெற்றோர் அன்புடன் நடந்து கொள்வர்.

விவசாயிகள்: பயிர் வளர்ப்பில் உங்களின் வெகுநாளைய திட்டங்களை சிறப்பாக நடைமுறைப்படுத்துவீர்கள். கூடுதல் நிலபுலன் வாங்குவதற்கு யோகநிலைபலமாக உள்ளது. கால் நடை வளர்ப்புச் சிறந்த பலன் தரும்.

(வளரும்)

**காணியுடன் வீடும் விற்பனைக்கு**

கோப்பாய் தெற்கு, இருபாலை டச்றோட்டில் சுற்று மதில் கூடிய 10 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு. இது இருபாலைச் சந்தி, கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை, இருபாலைக் கற்பக விநாயகர் கோயில் ஆகியவற்றிற்கு அண்மையில் உள்ளது. இங்கு பல பயன் தரும் மரங்களும் உண்டு.

தொடர்பு: 0771553248, 0726994524.

**காணியுடன் வீடும் விற்பனைக்கு**

நவாலி வடக்கு முருகன் கோயிலுக்கு அண்மையில் (ஆண்டாவளவு) 12 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு. இங்கு பல பயன் தரும் மரங்களும் உண்டு. மா, தென்னை, இலுப்பை, பலா, வேம்பு போன்ற பயன்தரும் மரங்கள் உள்ள பெறுமதியான காணி

தொடர்பு:- 0770868517, 0778356074

**7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

பிறப்பு 25.06.1978

இறப்பு 25.11.2003



**இரத்தினேஸ்வரன் சுகுமார் (நிரஞ்சன்)**

அன்பின் திருவுருவே! பாசத்தின் பிறப்பிடமே!
பண்பின் சிகரமே! அணையா விளக்கே!
விரைந்தோடிச் சென்று ஆண்டேழு ஆனதடா
புன்னகை மாறாத உன் திருமுகம்
நெஞ்சில் நிறைந்து நிற்குதடா
பெருமை மிகும் நின் குணத்தை எம்
நெஞ்சமதில் நித்தமும் நினைத்திருப்போம்.

8ஆம் வட்டாரம்,
மண்டைதீவு.

(106390)

குடும்பத்தினர்.

# நாவலர் குருபூசை நிகழ்வுகள்

மன்னார் மாவட்ட அறநெறிப் பாடசாலைகளின் இணையத்தால் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி நாவலர் அரங்கில் நாவலர் குருபூசை விழா நடத்தப்படவுள்ளது. மன்னார் மாவட்ட அறநெறிப் பாடசாலைகளின் இணையத்தின் தலைவர் பிரம்மஸ்ரீ ம.தர்மகுமார சர்மா தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் மன்னார் மாவட்டத்திலிருந்து பிரதம குரு ச.மனோகரக் குருக்கள், மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியத் தலைவர் மு.கதிர்காமநாதன் ஆகியோர் கலந்துகொள்வர்.

மன்னார் மாவட்ட சிவபூமி இந்து இளைஞர் மன்றத்தினால் அறநெறி ஆசிரியர்கள் கௌரவித்தல், சிறப்பு பட்டிமன்றம், கலை நிகழ்ச்சிகள் ஆகியன வும் இடம்பெறவுள்ளன. (ம-313)

**கடை அல்லது வீடு தேவை**

கொழும்பில் இயங்கிவரும் பிரபல கணினி வர்த்தக நிலையம் ஒன்றுக்கு யாழ். நகரப்பகுதியில் அல்லது அருகில் காட்சியறைக்கு வீடு அல்லது கடை தேவை.

தொடர்பு:
0772510994, 0777578277.

මහජන සම්පත
மஹஜன சம்பத
Mahajana Sampatha

23.11.2010

அலுவலக முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2322

வெற்றி எழுத்து: Z
வெற்றி எண்கள்: 5 4 1 6 2 0

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | Z | 5 | 4 | 1 | 6 | 2 | 0 | ரூபா.10,978,994/= | பரிசு - |
| 1 பரிசுகள் | | 5 | 4 | 1 | 6 | 2 | 0 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 02 |
| 2 பரிசுகள் | | | 4 | 1 | 6 | 2 | 0 | ரூபா. 100,000/= | பரிசுகள் 13 |
| 3 பரிசுகள் | | | | 1 | 6 | 2 | 0 | ரூபா. 10,000/= | பரிசுகள் 131 |
| 4 பரிசுகள் | | | | | 6 | 2 | 0 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1251 |
| 5 பரிசுகள் | | | | | | 2 | 0 | ரூபா. 100/= | பரிசுகள் 12653 |
| 6 பரிசுகள் | | | | | | | 0 | ரூபா. 20/= | பரிசுகள் 124734 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசுகள் | | 5 | 4 | 1 | 6 | 2 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 10 |
| 8 பரிசுகள் | | 5 | 4 | 1 | 6 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 114 |
| 9 பரிசுகள் | | 5 | 4 | 1 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 1282 |
| 10 பரிசுகள் | | 5 | 4 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 12542 |
| 11 பரிசுகள் | Z | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 49645 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை Rs. 13,583,180.00

அடுத்த சீட்டிழுப்பிகான சுப்பர் பரிசு Rs. 11,049,462.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000, Hotline: 2433631 மின்னஞ்சல்: www.nlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களுக்குப் பாதிப்பு ஏற்படாமல் பலாலி வீதியின் அகலிப்புப் பணி

## பிரதம பொறியியலாளர் தகவல்

யாழ்ப்பாணம்,நவ.25

மக்களுக்குப் பாதிப்பு ஏற்படாமல் பலாலி வீதி அகலிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் வி.சுதாகர் தெரிவித்தார்.

பலாலி வீதி அகலிப்புத் தொடர்பான கலந்துரையாடல் நல்லூர் பிரதேச செயலகம் முன்னர் இயங்கிய இடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வளர்ந்து வரும் அபிவிருத்திக்கு ஏற்ப எமது வீதிகளை அகலிக்க வேண்டிய தேவை உள்ளது. பலாலி வீதியின் மத்தியிலிருந்து ஒவ்வொரு பக்கமும் 7 மீற்றர் தூரம் அகலிக்கப்படும். அத்துடன் இந்த வீதி "காப்பெற்" வீதியாகவும் அமைக்கப்படவுள்ளது - என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்ட மக்கள் அங்கு கருத்துத் தெரிவிக்கையில்,

இழக்கப்படும் காணிக்குரிய நட்டஈடு வழங்கப்பட வேண்டுமெனக் கோரிக்கை விடுத்தனர்.

இதற்குப் பதிலளித்த பொறியியலாளர், நட்ட ஈடு வழங்கப்பட மாட்டாதெனவும் தெரிவித்தார்.

'எம்மிடமிருந்து காணிகள் வழங்குவதற்கு நாம் உத்தரவாதம் அளிப்பதுபோல, எமக்கு மதில் கட்டித்தரப்படும் என நீங்கள் உத்தரவாதம் தருவீர்களா?' எனப் பொதுமக்கள் கேட்டபோது முதலில் மறுத்த பிரதம பொறியியலாளர் பின்னர் அதற்குச் சம்மதித்தார். பழைய மதில்கள் அகற்றப்படுவதற்கு முன்னர் புதிய மதில்கள் அமைக்கப்படும் எனவும் அதற்கு முன்னர் பழைய மதில்களை அகற்றவிட வேண்டாம் என்றும் அவர் தெரிவித்தார்.




இக்கலந்துரையாடலில் பிரதம பொறியியலாளர் பி.சுதாகர், நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் ஆகியோர் கலந்து கொண்டனர். (த-15-7)

# கொக்குவில் இந்து மயானத்துக்கு கிரியை செய்யச் செல்வோர் சிரமத்தில்

வலிவடக்கு, நவ.25

கொக்குவில் இந்து மயானத்தில் இறுதிக் கிரியைகளை மேற்கொள்ளச் செல்பவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்,எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இறந்தவரின் உடலை எரிப்பதற்கு பணம் கொடுத்தாலே எரிக்க முடியும் என்ற நிலைமை இங்கு ஏற்பட்டுள்ளது.

பிரதேச சபைக்கு மயானத்தில் சடலம் எரிப்பதற்கான பணம் கட்டப்படுகின்ற போதும் மேலதிகமாகவும் பணம் செலவிட வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நல்லூர் பிரதேச சபையின் கீழ் உள்ள இந்த இந்து மயானத்திற்கு பிரதேச சபையால் ஊழியர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் விறகு அடுக்கச் செல்பவர்களிடம் எரிப்பதற்கு ரயர் வாங்க வேண்டும், சாப்பிட வேண்டும் என்று கூறி ஒரு தொகைப் பணத்தைப் பெற்றுக் கொள்கிறார்.

சடலம் கொண்டு செல்லப்பட்டதும் எரிப்பதற்கு மண்ணெண்ணை, சீனி வேண்டும் எனக் கூறி மேலும் ஒரு தொகைப் பணத்தைப் பெற்றுக் கொள்கிறார்.

இவற்றை விட சடலம் எரிக்கவென அறுநூறு ரூபாமுதல் ஆயிரம் ரூபா வரை பெற்றுக் கொள்ளப்படுகிறது.

மறுநாள் கிரியைகளுக்குச் செல்லும் போது இரண்டாயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட தொகை பெறப்படுகிறது. இவற்றைவிட தட்சணை வழங்க வேண்டும் என்றும் கோரப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயம் குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று பாதிக்கப் பட்டவர்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப் படுகின்றது. (ம-86)

# வடமராட்சி கிழக்குப் பகுதியில் காணிகளை அளவிடுவதில் சிரமம்

யாழ்பாணம்,நவ.25

வடமராட்சி கிழக்கு அம்பன் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த மக்கள் தமது காணிகளினை அளவீடு செய்து எல்லைப்படுத்துவதில் பல சிரமங்களை எதிர் கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.


வடக்கின் துரித மீட்சித்திட்டத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக உலக வங்கிப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் அம்பன் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

மீளக்குடியமர்ந்த மக்கள் தமது காணிகளை அளவீடு செய்து எல்லைப்படுத்தப்பட வேண்டியுள்ளதாகவும் இதனைச் செய்வதற்கு நில அளவைத் திணைக்களத்தில் போதிய ஆளணி இல்லை எனவும் அங்கு தெரிவிக்கப்பட்டது.

தற்போது ஒரு கிராம அலுவலர் பிரிவில் மட்டுமே இப்பணி மேற் கொள்ளப்படுவதாகவும் அங்கு தெரிவிக்கப்பட்டது. (த-15)

## கிடைக்குமா புதுப்பொலிவு...



பாதிப்பு:-நெடுந்தீவுக்கான அரசபடகு குமுதினி கூடாரம், ஓட்டுநர் அறைகள் கழற்றி எடுக்கப்பட்ட நிலையில் தனது முன்னைய அழகு மீண்டும் கிடைக்குமா என்ற ஏக்கத்துடன் துறைமுகத்தில் தரித்து நிற்கிறது. (204-7)

# மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்.நவ.25

மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 10 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் பொது மக்களுடன் முக்கிய கருத்தரங்கு ஒன்றினை தென்னிலங்கையைச் சேர்ந்த சுதந்திரத்திற்கான பெண்கள் அமைப்பு நடத்தவுள்ளது.

மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு யாழ்.பொது மக்களுடன் நேரில் கலந்துரையாடி அவர்களுக்கான பிரச்சினைகளைக் கேட்டறியவுள்ளதாக அந்த அமைப்புத் தெரிவித்துள்ளது.

வடக்கு மாகாணப் பொது மக்களுடனும் ஊடகங்களுடனும் இந்த அமைப்பு கடந்த மாதம் கலந்துரையாடலை மேற் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-313-311)

# மாணவன் 'பனடோல்'உட்கொண்ட சம்பவம்; நடவடிக்கை எடுப்பதாக துணைவேந்தர் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.25

யாழ்.பல்கலைக்கழக மாணவன் ராஜேஸ்கண்ணா கடந்த 22 ஆம் திகதி அளவுக்கதிகமாகப் "பனடோல்" வில்லைகளை உட்கொண்ட சம்பவத்துக்குக் காரணமானவர்கள் எனக் கூறப்படுவோர் தொடர்பில் நடவடிக்கை எடுத்து வருகிறேன்.

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக நேற்றுமுன்தினம் காலையில் அவர் தெரிவித்தவை வருமாறு:-

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாகத் துணைவேந்தர் என்ற ரீதியில் நான் நடவடிக்கை எடுத்து வருகின்றேன்.

குறித்த மாணவனின் நலன் சம்பந்தமாகவும் நடவடிக்கை எடுத்து வருகின்றேன். நான் சம்பவதினம் இரவு 11 மணிவரை வைத்தியசாலையில் இருந்து குறித்த மாணவனுக்காக மருந்தைக் கொழும்பிலிருந்து பெற்றுக் கொடுத்தேன்.

மாணவன் அபாய நிலையைத் தாண்டி விட்டார்.

இதுபோன்ற ச்ம்பவங்கள் இனிமேலும் இடம்பெறாமல் தடுக்க கடுமையான நடவடிக்கையை பல்கலைக்கழக நிர்வாகம் எடுத்து வருகின்றது.

இந்த மாணவனின் பிரச்சினைகளை மேலும் பெரிதாக்க அது ஏனைய மாணவர்களுக்கும் இதே உணர்வை ஏற்படுத்த உதவும். எனவே இந்தச் சம்பவம் தொடர்பாக பல்கலைக்கழக துணைவேந்தர் என்ற ரீதியில் பல்கலைக்கழக ஒழுங்குவிதிகளின் கீழ் கடுமையான நடவடிக்கை எடுத்து வருகின்றேன் - என்றார். (ஜ-319)

## யாழ்.பல்கலையில் பகிடிவதை இல்லை

### ஒன்றியச் செயலாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம்,நவ.25

யாழ்.பல்கலைக்கழகத்தில் தற்சமயம் பகிடிவதைச் சம்பவங்கள் இடம்பெறுவதில்லை.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலாளர் எஸ்.சிறிரங்கன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன், மாணவர்களிடையே உள்ள சிறுசிறு முரண்பாடுகள் காரணமாகவே மாணவர்கள் தமக்கிடையே மோதலில் ஈடுபட்டுக் கொள்கின்றார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் கல்வியைத் தொடரும் வன்னிப் பகுதி மாணவர்கள் தாக்கப்படுவதற்கான காரணம் குறித்துக் கேட்ட போது-

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் பகிடிவதை தடைசெய்யப்பட்டதன் பின்னர் எமது பல்கலைக் கழகத்தில் மாணவர்கள் பகிடிவதையில் ஈடுபடுவது தவிர்க்கப்பட்டுள்ளது.

எமது மாணவர் மத்தியில் எந்த விதபாகுபாடும் இல்லை. மாவட்ட வேறுபாடுகள் எதுவும் இல்லை. யாழ்.மாவட்ட மாணவர்களும் ஏனைய மாவட்ட மாணவர்களும் மிகவும் புரிந்துணர்வுடன் செயற்பட்டு வருகின்றனர்.

ஆனால் வெளிமாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் விடுதியில் ஒன்றாகத் தங்கியிருப்பதன் காரணமாக அவர்களிடையே சிறு சிறு முரண்பாடுகள் ஏற்படுவது வழமை. அந்தச் சிறிய முரண்பாடுகள் சில சந்தர்ப்பங்களில் மோதலில் முடிவடைந்து விடுகிறது. அண்மையில் இடம்பெற்ற சம்பவங்கள் இவ்வாறானதே.

வன்னிப்பகுதி மாணவர்கள் சிலரால், வன்னிப்பகுதி மாணவன் ஒருவர் தாக்கப்பட்ட சம்பவம் இடம்பெற்றது.

புதுமுக மாணவர்களுக்கான அறிமுக விழா. பீடாதிபதிகளின் வழிகாட்டலுடன் மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள், மாணவர் நலச் சேவைப் பிரிவின் முன்னிலையிலேயே இடம்பெறுகிறது. [illegible] என்றார். (ஜ-14)

# மரத்தளபாட உற்பத்தியாளர்களுக்கு தேசிய சான்றிதழ் பெற்றுக் கொடுக்க ஏற்பாடு

## கைத்தொழில் பயிற்சி அதிகார சபை நடவடிக்கை

யாழ்ப்பாணம்,நவ.25

மரத்தளபாடம் உற்பத்தி செய்வோர், அலுமினியம் பொருத்துனர் ஆகியோருக்கு தேசிய தொழிற்திறன் சான்றிதழைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கையில் யாழ். மாவட்ட தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளதாக சபையின் மாவட்ட முகாமையாளர் அறிவித்துள்ளார்.

இந்தவிடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மரத்தள பாட உற்பத்தியாளர்கள், அலுமினியம் பொருத்துநர் ஆகிய துறைகளில் தொழில் புரிவோர்களுக்கு எமது சபையினால் நடத்தப்படும் பரீட்சையில் தோற்றுவதன் மூலமே தேசிய தொழிற்திறன் சான்றிதழைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இதற்கென நேர்முகப் பரீட்சையிலும், செய்முறைப் பரீட்சையிலும் தோற்றித் தங்களது தொழிற்திறமைகளை நிரூபிக்க வேண்டும்.

தேசிய தொழிற்திறன் சான்றிதழைப் பெறுவதன் மூலம் ஒருவர் தனது தொழிற்துறையில் பட்டக் கல்விவரை கற்கக் கூடியதாக இருக்கும்.

அத்துடன் அரச,தனியார் துறைகளில் தொழில் வாய்ப்பையும் பெறக் கூடியதாக இருக்கும்

அரச,தனியார் துறைகளில் ஒப்பந்த வேலைகளைப் பெறுவதற்கும், வெளிநாடுகளில் வேலை வாய்ப்புக்களைப் பெறுவதற்கும் உதவியாக இருக்கும்.

எனவே,மேலதிக விபரங்களுக்கும் விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் இல.7 கோவில் வீதி,யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள எமது சபையுடன் தொடர்பு கொள்ள முடியும் என்று மேலும் தெரிவித்துள்ளார். (ம-14)

# குமுதினி டிசெம்பரில் சேவைக்கு வரும்

தற்சமயம் திருத்த சேவ்வகள் மேற்கொள்ளப்பட்டு வரும் குமுதினிப் படகு டிசெம்பர் மாதம் கடைசி வாரத்தில் சேவைக்கு வரும் என்று யாழ். வீதி அபிவிருத்தி அதிகாரசபை பிரதம பொறியியலாளர் கே.சுதாகர் தெரிவித்தார்.

இந்தப் படகு நவம்பர் மாதம் 24 ஆம் திகதி சேவைக்கு வரும் என்று முன்னர் கூறப்பட்டது. எனினும் அதன் திருத்த வேலைகள் இன்னமும் பூர்த்தியடையவில்லை. அது குறித்துக் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். படகுக்குத் தேவையான தேக்குமரப் பலகைக்குப் பதிலாக வேறு பலகைகள் வந்துள்ளதால் அவற்றை விடுத்து தேக்குப் பலகைகளைத் தருவித்து தற்சமயம் வேலைகள் இடம்பெறுவதாகவும் டிசெம்பர் கடைசி வாரத்தில் குமுதினி சேவையில் ஈடுபடும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய இளம் சமுதாயத்தினரின் கைத்தொலைபேசிப் பாவனை.......

சரியானது.. **விவாத மேடை** தவறானது..

இன்றைய கால கட்டத்தில் விஞ்ஞானத்தின் வளர்ச்சியாலும், புதிய கண்டுபிடிப்புகளாலும் உலக நாடுகளில் குறிப்பாக வளர்முக நாடுகளில் கைத்தொலைபேசித் தொடர்பு சாதனங்கள் பல்கிப் பெருகிவிட்டன. அந்த வகையில் தொலைத் தொடர்பாடலில் இளம் சமுதாயத்தினரின் தேர்வுகளில் கைத்தொலைபேசிச் சாதனமும் முக்கிய இடத்தை வகிக்கின்றது. எனவே இன்றைய கால நாகரிகத்தில் கைத்தொலைபேசியும் இளம் சமுதாயத்தினரின் பாவனைக்கு முக்கிய பங்குகாற்றுகின்றன.

முக்கியமாக வேலைத்தலங்களிலும், கல்வி கற்றலுக்கான உபயோகத்திற்கும், விவசாயம், பொருளாதார வளர்ச்சி, வர்த்தகத் துறை அபிவிருத்திக்கும், நேரத்தை சிக்கனப்படுத்துவதற்கும், தொலைத் தொடர்புச் செய்திகளை, குறிப்புகளை ஆவணப் படுத்துவதற்கும் அளப்பரிய பங்காற்றி வருகின்றன.

அந்த வகையில் இளைஞர் சமுதாயத்தில் ஏழை, பணக்காரர்கள் என்ற வேறுபாடின்றிச் சகல மட்டக் குடும்பங்களிலும் அத்தியாவசியச் சாதனமாகக் கைத்தொலைபேசி கையாளப்படுகின்றது.

எனவே இவ்வரிய சாதனத்தை நாட்டின் வளர்ச்சிக்கும், இளம் சந்ததியினரின் எதிர்காலம் ஒளிமயமாகத் துலங்குவதற்கும் சரியான தெரிவாகும் என்பது எனது வாதம்.

கந்த.ஞானமுத்து
கைதடி மேற்கு - 02.

இன்றைய உலகில் கைத்தொலைபேசியை எங்கு பார்த்தாலும் காணக்கூடியதாக உள்ளது. குழந்தை முதல் பொல்லுப் பிடிக்கும் பாட்டன் வரைக்கும் கையடக்கத் தொலைபேசிப் பாவனை விரிவடைந்து காணப்படுகின்றது.

முக்கியமாக இளம் சமுதாயத்தினரிடையே கைத்தொலைபேசிப் பாவனை அதிகரித்து வருகின்றது. அதிலும் பாடசாலை மாணவர் களிடம் அவை அதிகமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனால் மாணவர்களின் கவனம் சிதறி வாழ்க்கை கேள்விக்குறியாகிறது. தப்பான வழிக்குக் கொண்டு செல்லக்கூடிய அளவில் இன்று தொலைபேசி தொல்லைபேசியாக மாறிவிட்டது.

இன்றைய இளைஞர்கள் பெண் பிள்ளைகளை முறையற்ற விதத்தில் வீடியோவில் பதிவு செய்து அதனை வைத்து அவர்களை மிரட்டுவதும், தனக்குச் சாதகமாக அவர்களை அடிபணிய வைப்பதும் இவர்களது பொழுதுபோக்காக மாறிவிட்டது. இதனால் அவர்கள் வெட்கப்பட்டு, அவமானப்பட்டு அவர்களது வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்க நேரிடுகின்றது. அது மட்டுமா? அயலவர்களின் ஏளனப் பார்வையிலும் சிக்கித் தவிக்கும் அவர்கள் சமூகத்திற்கு முகம் கொடுக்க முடியாது தற்கொலை செய்து கொள்கின்றனர்.

இதனால் இன்றைய இளம் சமுதாயம் பக்குவப்படும் வயது வரும் வரைக்கும் கைத்தொலைபேசியைப் பாவித்தல் தவறாகும்.


சி.கயனி
மாதகல்.

## விவாதமேடை

**எமது இளையோரிடத்தில் "எயிட்ஸ்" பற்றிய விழிப்புணர்வு இருக்கிறதா? இல்லையா?**

இளைய சமூகத்தின் விவாதத் திறனுக்கு களம் அமைத்துக் கொடுப்பதற்காக இந்தப் பகுதி ஆரம்பிக்கப்படுகின்றது. எனவே எமது இளையோரிடம் "எயிட்ஸ்" பற்றிய விழிப்புணர்வு இருக்கிறதா? இல்லையா? என்ற விவாதத்துக்கு உங்கள் கருத்துக்களை முன்வைத்து மோதுங்கள். வெற்றியைத் தீர்மானிப்பதும் நீங்களே. வெற்றிபெறும் என நீங்கள் கருதும் அணிக்கு வாக்களிக்க முடியும். வெற்றி பெறும் அணிக்கு வாக்களித்தவர்களில் மூவர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கும் பரிசில் வழங்கப்படும். அத்துடன் சிறந்த விவாதம் அனுப்புவோரில் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுப் பரிசில் வழங்கப்படும்.

விவாத மேடைக்கு விவாதங்களை அனுப்பிய அனைவருக்கும் நன்றிகளும், பாராட்டுகளும். தொடர்ந்து விவாத மேடைக்கு உங்கள் ஆக்கங்களை எழுதி அனுப்புங்கள். வாக்கு எண்ணிக்கையின் முடிவின் படி எந்த அணி வெற்றி பெற்றது என்பதனையும், சிறந்த ஆக்கமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட விவாதத்தை அனுப்பியவரின் பெயரையும் அடுத்த வார இளவல்கள் வட்டத்தில் எதிர்பாருங்கள்.




## பதவி

ஒரு பதவியைச் சுமப்பவர் எவராக இருப்பினும் அவர் பசித்திருக்க, தனித்திருக்க, விழித்திருக்கத் தெரிய வேண்டும். இதனது சுருக்கம் யாதெனில் தன்னை முழுமையாக அர்ப்பணித்தல் என்பதாகும். அவ்வாறு நிகழுமாயின் பதவியும் வெல்லப்படும். பதவிக்குரியவரும் வெல்லவார்.

இன்றைய கால கட்டத்தில் ஒரு பதவியை வெல்ல வைப்பதாயின் சுமாராகப் பத்து மணித்தியாலம் கடமையை ஆற்ற வேண்டியிருக்கும். மிகுதியான நேரம் பதவிக்குரியதான கடமையைப் பற்றிச் சிந்திக்க வேண்டியிருக்கும்.

ஒரு பதவியானது மனிதப் பண்பினால் பிரகாசிக்க வேண்டும். பரிகாசமாக விமர்சிப்பதற்கு இடம் வைக்கக்கூடாது. பதவி தேடி வரவேண்டும். பதவியைத் தேடிப் போவதென்பது ஒரு சண்டித்தனத்திற்கு ஒப்பானதாகும். தரம் இருந்தால் பதவி தானாக வரும். அவரிவரைப் பிடித்து பதவியில் இருந்தால் கூடப் பசித்திருந்து, தனித்திருந்து, விழித்திருந்து அதே தியானமாக உரிய கடமையை ஆற்ற வேண்டும். நேர்த்தியாகச் செய்யாமல் விடுவோமாக இருந்தால், ஒப்பனை செய்த ஒரு நடிகனாக நடிக்கும் ஒரு பாத்திரமாக விமர்சிக்கப்படுவோம். பதவி ஒரு பாத்திரமாக அமையக் கூடாது. பாத்திரமறிந்து தான் பதவி கொடுக்கப்பட வேண்டும். பரமசிவன் கழுத்தில் இருந்து பாம்பு கேட்கலாம். ஆனால் கருட பகவான் யாவுமறிவார். பதவிகள் நிரந்தரமானதா, நிச்சயமற்றதா, நீடிப்பதா என்பதனை விஷ்ணு வாலாயமான கருடன்தான் தீர்மானிப்பார்.

கே.எஸ்.சிவஞானராஜா
கொக்குவில்.

## ஏக்கம்

மனங்களின் பாரம்
மாறாத சோகம்
கணங்களின் காயம்
காயாத தாகம்
கண்களில் தெரிகிறது
கனவுகளின் ஏக்கம்..

சரண்யா குலேந்திரன்
சாவகச்சேரி இந்துக் கல்லூரி 11 E

## அன்னையே..

என்னைச் சுமந்த
அன்னையே!
நீயே என் ஆண்டவன்
உன் அன்புக்கு
இல்லை
எங்குமே ஈடு
உன்னைச் சுற்றி
வருகிறது எனது உலகம்
அன்பெனும்
அமுதத்தை தினமும்
எனக்கு நீ ஊட்டுகின்றாய்
வாழ்வில் என்னையே
உயர்த்தி விடுகிறாய் நீயொரு
ஏணியாகி
வேதங்களில் நீ
ஐந்தாவது
உன் மடியில் ஒருமுறை
இருந்தாலே
வரும் மரணம் விலகி ஓடும்
உன் அன்பே உலகை
இயக்கும் இயந்திரம்
இதையே சொல்ல ஏன்
மறந்தாள் அந்த ஔவை.

சுப்பிரமணியம் ஜெயரூபன்
2ஆம் குறுக்குத் தெரு, பருத்தித்துறை.

## இளவல்கள் வட்டம் வாக்குச்சீட்டு

எமது இளையோரிடத்தில் "எயிட்ஸ்" பற்றிய விழிப்புணர்வு ....

இருக்கிறது | இல்லை

பெயர் :-...............................................
முகவரி:-...............................................
அடையாள அட்டை இல:-...............................................

உங்கள் தீர்ப்புகளை 30.12.2010 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். இவ் வாக்குச் சீட்டுடன் அனுப்பப்படும் வாக்குகள் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புகளையும், ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-...............................................
முகவரி:-...............................................
:-...............................................
திகதி ............... கையொப்பம் ...............

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி.மத்திய கல்லூரி அதிபர் நியமன இழுபறியால் பாடசாலையின் முக்கிய செயற்பாடுகள் தடுமாற்றத்தில்

கிளிநொச்சி, நவ.25

கிளிநொச்சி மத்திய கல்லூரியின் அதிபர் பதவி தொடர்ந்தும் வெற்றிடமாக உள்ளது. இதனால் பாடசாலையின் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளும், பௌதிகவள அபிவிருத்தியும் பாதிக்கப்பட்டுள்ளது எனப் பெற்றோரும் பாடசாலைச் சமூகத்தினரும் கவலை தெரிவிக்கின்றனர்.

புதிய நியமனம் தொடர்பில் ஏற்கனவே கல்வித் திணைக்களத்தால் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்த போதிலும் பிற தலையீடு காரணமாக நியமனம் வழங்குவதில் தாமதம் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. தற்போது இந்த நியமனம் தொடர்பாக ஆளுநரால் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இத்தகைய அரசியல் பின்னணிகளோடு இழுபறி நிலைக்குள் ளாகியிருக்கும் அதிபர் நியமனத்தால் பாடசாலையின் செயற்பாடுகள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

ஏனைய பாடசாலைகள் பல வளங்களையும் உள்ளீர்த்துக் கொண்டிருக்கும் இந்த வேளையிலே இந்தக் கல்லூரி மட்டும் உடைந்த கட்டடங்களிலும், தற்காலிகக் கொட்டகைகளிலும் தொடர்ந்தும் இயங்கி வருகின்றது. இது தவிர கல்லூரியின் நிர்வாகத்தில் இருக்கும் இழுபறி காரணமாக கற்பித்தல் முகாமைத்துவமும் பாதிப்படைந்துள்ளது.

எனவே இந்த அதிபர் நியமனத்தை மேலும் கால தாமதம் செய்யாது பொருத்தமான ஒருவரை நியமித்துக் கல்லூரியின் செயற்பாடுகளைத் தடையின்றிக் கொண்டுசெல்ல வேண்டுமென்று இப்பாடசாலையில் கற்கும் மாணவர்களின் பெற்றோர் வலியுறுத்தியுள்ளனர்.(க-304)

## கலந்துரையாடல்

கிளிநொச்சி, நவ.25

கிளிநொச்சி மாவட்டத்தில் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு சமூக மட்டப் புனர்வாழ்வு தொடர்பான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் எனக் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீநிவாஸன் தெரிவித்துள்ளார்.(ற)

வன்னி வலம்

## அடகு வைத்துத் தொலைந்த நகைகளுக்கு பவுணுக்கு 32 ஆயிரம் ரூபா வழங்கப்படும்

முல்லைத்தீவு மக்கள் வங்கியில் அடகுவைத்த நகைகள் யுத்த சூழ்நிலையில் காணாமல் அல்லது வேறு விதத்தில் தொலைந்திருந்தால் அதற்கான நட்டஈட்டை வழங்க மக்கள் வங்கி முன்வந்துள்ளது. பவுண் ஒன்றுக்கு32ஆயிரம்ரூபா பணமாக வழங்கப்படும் என்று வங்கி அறிவித்துள்ளது..

அடகு வைக்கப்பட்ட நகைகள் யுத்தத்தின்போது தொலைந்திருந்தால் உரிய ஆவணங்களைச் சமர்ப்பிப்போருக்கு இந்தப் பணம் வழங்கப்பட இருக்கிறது. அடகு வைத்த நகைகளுக்கு யுத்த காலம் வரை வட்டி அறவிடப்படும். நகைகளின் பெறுமதி கணிக்கப்பட்டு, அடகு வைத்த பணமும் வட்டியும் கழிக்கப்பட்டு, மீதிப் பணம் வழங்கப்படவிருக்கிறது.

தற்போது இந்த அறிவித்தல் வெளிவந்துள்ளதால் மக்கள் முல்லைத்தீவு மக்கள் வங்கியை நாடியுள்ளனர். (க-500)

## பிரதேச செயலரின் இடமாற்றத்தை ஆட்சேபித்து பொது அமைப்புகளின் ஆர்ப்பாட்டம் 29ஆம் திகதி

கிளிநொச்சி, நவ.25

கரைச்சிப் பிரதேச செயலர் திருமதி சுலோஜினி அவர்கள் இடமாற்றம் செய்யப்படுவதைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்துவதற்குத் தீர்மானித்திருப்பதாகப் பிரதேச கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் எஸ். கிருஸ்ணசாமி அறிவித்துள்ளார்.

''பிரதேச செயலர் திருமதி சுலோஜினி அவர்கள் இடமாற்றம் செய்யப்படுவதைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளோம். இது தொடர்பாக நேற்று அரச அதிபருடன் கூட்டம் ஒன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் கமக்கார அமைப்புகள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், ஆலய நிர்வாகங்கள், பொதுமக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.'' - என்று அவர் கூறினார்.

''கிளிநொச்சி அரச அதிபரோடு நடந்த பேச்சுக்களில் பிரதேச செயலரின் இடமாற்றத்தை, இரத்துச் செய்ய அரச அதிபர் ஒத்துழைக்கவில்லை. இதனால் பேச்சுத் தோல்வியிலேயே முடிவுற்றதை அடுத்து எதிர்வரும் 29ஆம் திகதி திங்கட்கிழமை தாம் கச்சேரிக்கு முன்பாக ஒன்றுகூடி ஆர்ப்பாட்டம் செய்யவுள்ளோம்''- என்றும் தெரிவித்தார். (க-319)

## மீண்டும் இயங்கத் தொடங்கியது கற்சிலைமடு கோப்-சிற்றிக் கிளை

முல்லைத்தீவு மாவட்டத்தில் முத்துஐயன்கட்டுப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மீண்டும் தனது சேவையை ஆரம்பித்துள்ளது.

யுத்தத்திற்கு முன்னர் மக்களுக்குச் சிறந்த சேவையை வழங்கி வந்த இந்தக் கூட்டுறவுச் சங்கம் யுத்தத்தின்போது பல இலட்சக்கணக்கான பெறுமதி வாய்ந்த பொருள்களையும், தளபாடங்களையும், கட்டடங்களையும் இழந்து நிர்க்கதியான நிலையில் இருந்தது. தற்போது மீண்டும் புத்துயிர்பெற்றுத் தனது சேவையைப் பொதுமக்களுக்கு ஆற்றுவதற்குத் தொடங்கியுள்ளது.

முல்லை மாவட்டத்திலேயே முத்துஐயன்கட்டு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் கோப்-சிற்றிக் கிளையை முதன்முதலாகத் திறந்து மக்களுக்குச் சிறந்த சேவையை ஆற்றி வந்தது. ஆனால் யுத்தத்தின் போது கட்டடம் உட்பட அனைத்தும் அழிக்கப்பட்டன. தற்போது மீண்டும் மக்களின் நலன்கருதிக் கட்டடம் புனரமைக்கப்பட்டு கடந்த 22ஆம் திகதி திங்கட்கிழமை விற்பனை நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

சங்கத்தின் தலைவர் நா.ரஞ்சித்குமாரின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஒட்டுசுட்டான் உதவி அரசாங்க அதிபர் திருமதி சுபாஜினி நாடாவை வெட்டிக் கட்டடத்தைத் திறந்து வைத்தார். பெயர்ப் பலகையினை 64ஆவது படைப்பிரிவின் இராணுவ அதிகாரி திரைநீக்கம் செய்து வைத்தார்.

இந்தக் கிளையில் பொதுமக்கள் ஆர்வத்துடன் பொருள்களைக் கொள்வனவு செய்வதைக் காண முடிகின்றது. (க-500)

### மாறியது இடம் ....



காத்திருக்கும் கணங்கள்: கிளிநொச்சி டிப்போவுக்கு முன்னுள்ள பகுதி இந்த மாத ஆரம்பத்திலிருந்து தனியார் பேருந்து நிலையமாகச் செயற்பட்டு வருகின்றது.

## வவுனியா உணவகங்களில் சுகாதார சோதனை குறைபாடுகளை நீக்க கடைகளுக்கு அவகாசம்

வவுனியா, நவ.25

வவுனியா நகர்ப் பிரதேசத்திலுள்ள தேநீர்க் கடைகள், உணவு விடுதிகள், உணவு தயாரிப்பு நிலையங்கள், ஐஸ்கிறீம் விற்பனை நிலையங்கள் ஆகியவற்றில் கடந்த வாரம் திடீர் பரிசோதனைகள் இடம்பெற்றன.

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் சத்தியலிங்கம் தலைமையில் சென்ற இக்குழுவில் பத்துக்கும் மேற்பட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இடம்பெற்றிருந்தனர்.

பல உணவுத் தயாரிப்பு நிலையங்களில் பல்வேறு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன. சில குறைபாடுகளை உடனே நிவர்த்தி செய்ய ஆலோசனை வழங்கப்பட்டது. பெரிய குறைபாடுகளுக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டு அவற்றை நிவர்த்தி செய்யக் கால அவகாசமும் வழங்கப்பட்டது.

அத்துடன் சில உணவு விடுதிகளில் மீதமுள்ள உணவுக் கழிவுகளை உடனடியாக அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. டெங்கு நுளம்பு பெருகும் இடங்கள் அடையாளம் காணப்பட்டு அவற்றைத் துப்புரவு செய்ய உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (க-501)

## கால்நடைகளைக் கொண்டுசெல்ல அனுமதியில்லை முல்லைத்தீவு கால்நடை வளர்ப்போர் கவலை

முல்லைத்தீவு, நவ.25

முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து வெளியே கால்நடைகளைக் கொண்டு செல்வதற்கு அனுமதி வழங்கப்படாமையால் கால்நடை வளர்ப்போர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வன்னிப் பிரதேசங்களில் இருந்து குறிப்பாக முல்லை மாவட்டத்தில் இருந்து கால்நடைகளை வெளியே கொண்டு செல்வதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. இதனால் கால்நடைகளை வளர்ப்போர் பயனில்லாத கால்நடைகளை விற்க முடியாத நிலையில் உள்ளனர். முக்கியமாகக் காளைகளை விற்க முடியாத நிலை நிலவுவதால் களவாக இறைச்சிக்காக இவற்றை வெட்டி இரகசியமாக விற்பனை செய்வதிலும், சட்டவிரோதமான முறையில் வெளியிடங்களுக்கு அனுப்பி வைப்பதிலும் பலர் ஈடுபட்டுள்ளனர். இதனால் பாதிக்கப்படுவது கால்நடை வளர்ப்பாளர்களே.

மாரிகாலம் ஆரம்பித்துள்ளதால் கட்டாக்காலிகளாக அலையும் கால்நடைகள் அழிவுகளை மேற்கொள்ளுகின்றன. இதனால் விவசாயிகள் பெரும் நட்டத்தை எதிர்கொள்கின்றனர்.

ஆகவே கால்நடைகளை வெளியே கொண்டு செல்வதற்கான அனுமதியை வழங்கி அதனைச் சீரான முறையில் அமுல் செய்வதன் மூலம் பயனில்லாத கால்நடைகளை விற்க முடியும். இதன்மூலம் கட்டாக்காலிகளாக அலைந்து திரியும் கால்நடைகளையும் கட்டுப்படுத்த முடியும் எனவும் இங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர். (க-500)

## தீபத் திருநாள்

கார்த்திகைத் தீபத் திருநாள் முல்லைத்தீவு மாவட்டத்தில் உருக்கமான முறையில் நடைபெற்றது.

மன இருளை நீக்கி ஒளி விளக்கேற்றும் இத்தீபத்திருநாளை மீள்குடியேறிய மக்கள் தீபம் ஏற்றிக் கொண்டாடினர். போரில் தமது உறவுகளை இழந்தோர் கதறி அழுது தமது கவலைகளை வெளிப்படுத்தியமையை அவதானிக்க முடிந்தது.

## விசுவமடுவில் தொடரும் கால்நடைகள் திருட்டு

முல்லைத்தீவு, நவ.25


முல்லைத்தீவு மாவட்டம், விசுவமடுப் பிரதேசத்தில் கால்நடைகள் களவு போவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

விசுவமடுக் கிராம மக்கள் விவசாயத்தையும், கால்நடை வளர்ப்பையும் பிரதான தொழிலாகக் கொண்டுள்ளனர். இவையே இவர்களின் வாழ்வாதாரத்தைக் கட்டி எழுப்புகின்றன. இந்த நிலையில் கால்நடைகள் களவுபோகும் நிகழ்வானது மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்கு பெரும் கவலையைத் தோற்றுவித்துள்ளது. தாம் மீளக்குடியேறிய நாளிலிருந்து கால்நடைகளின் களவு ஆரம்பித்ததாகவும் தற்போதும் தொடர்வதாகவும் இவர்கள் கூறுகின்றனர்.

பெரும் போர் ஒன்றுக்கு முகம் கொடுத்து மெல்ல மெல்லத் தமது வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பும் இந்தவேளையிலே இத்தகைய களவுகள் இடம்பெறுவது தம்மை மீண்டும் ஒரு மோசமான நிலைக்குத் தள்ளிவிடுமென இந்த மக்கள் கூறுகின்றனர். (க-406)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர்வேலி செல்லக்கதிர்காம சுவாமி கோயில்




கு.எழிலன்

வலி. கிழக்கு நீர்வேலிப் பதியில் அமைந்துள்ள இந்த ஆலயம் இலங்கையின் மிகப்புகழ் மிக்க கதிர்காமம் கோயிலோடு தொடர்புபட்டதாக விளங்குகின்றது.

இந்த ஆலய வரலாற்றை எடுத்து நோக்கின், நீர்வையம் பதியின் வடபால் செல்லாச்சி அம்மை, சின்னாச்சி அம்மை எனும் இரு பெண்கள் துறவறம் பூண்டு தபஸ்வினிகளாக வாழ்ந்தனர்.

ஆசாபாசம் இலாமலிருந்த இவர்கள் கதிர்காம யாத்திரையில் அங்கு இறையருளால் தமக்குக் கிடைத்த வேல்,யந்திரம் என்பவற்றை தமது ஊரான நீர்வைக்குக் கொண்டு வந்து இறை ஆணைப்படி தாம் வசித்த குடிசையருகில் ஒரு கொட்டில் அமைத்தனர். ''ஆ மலக விருட்சம்'' என்று போற்றப்படும் நெல்லி மரத்தடியில் அமைந்திருந்த அச்சிற்றாலயத்தில் வேல் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

அக்காலப் பகுதியில் இரவில் இவ்விடத்தில் ஒரு ஜோதி தெரிவதாகவும் பல அற்புதங்கள் நிகழ் வதாகவும் கர்ணபரம்பரைக் கதைகள் தெரிவிக்கின்றன.

தபஸ்வினியர் ஊர்தோறும் பாதயாத்திரையாகச் சென்று நிதி பெற்று பக்தர்களின் பேருதவியோடு 1930 ஆம் ஆண்டளவில் ஆகம, சிற்ப, சாஸ்திர விதிப்படி மூலஸ் தானம், அர்த்தமண்டபம், மகா மண்டபம் என்பன நிர்மாணித்து அக்காலத்தில் புகழ்பெற்று விளங்கிய ''சிவாச்சார்ய திலகம்'' பிரம்மஸ்ரீ க.தியாகராஜக் குருக்கள் தலைமையில் 1936 ஆம் ஆண்டு ஆவணி மாத ரேவதி நட்சத்திரத்தில் மகாகும்பாபிஷேகம் செய்தனர். அன்றிலிருந்து தியாகராஜக் குருக்கள் அவர்கள் ஆலய பூசகராகப் பணியாற்றினார். ''நீர்வேலி செல்லக் கதிர்காமம்'' என ஆலயம் அழைக்கப்பட்டது.

இதன்பின்பு சிறிது காலத்தில் தபஸ்வினியர் சமாதியடைந்துவிட்டனர்.

இதனைத் தொடர்ந்து பல்லாண்டுகள் தியாகராஜக் குருக்கள் ஆலயத்தை நிர்வகித்ததோடு பயபக்தியோடு பூசையாற்றினார். குருக்களவர்கள் ஆடித் திருவோண நட்சத்திரத்தையொட்டி அலங்கார உற்சவத்தை ஆரம்பித்து சிறப்புற நடத்திவந்ததாகத் தெரியவருகிறது.




பூஜைப் பணிகளோடு சோதிடம், சங்கீதம், வேதாகமம், மாந்திரீகம் முதலியனவற்றையும் கசடறக் கற்று நல்லொழுக்க சீலராயும் பிராமணோத்தமராயும் திகழ்ந்ததால் ஆலயத்தின் புகழ் ஊரெங்கும் பரவக் காரணமாக இருந்தது.

க.தியாகராஜக் குருக்களுக்குப்பின் ஆலயத்தை ஒருவர் பரிபாலனம் செய்ய வேண்டியிருந்தது. இதனால் கோயில் பராமரிப்பாளர் களாக ஸ்ரீ செல்லாச்சி அம்மை நியமித்திருந்த திருமதி இராசா வன்னிப்பிள்ளையும் அவரது பிள்ளைகளும் ஆலயத்தைப் பராமரிக்க லாயினர்.

ஆலய வளர்ச்சியில் அடுத்த படிக்கல்லாக பிரம்ம ஸ்ரீ கு.தியாகராஜக் குருக்கள் (நீர்வைமணி ஐயா) அவர்கள் அப்பிரதேசத்தில் ஆலயத்தில் மிகுந்த ஈடுபாடு காட்டிய க.அப்பாத்துரை, த.சின்னத்துரை, இ.கந்தசாமி, த.தர்மலிங்கம், பண்டிதை திருமதி சத்தியதேவி துரைசிங்கம், திருமதி இராசா வள்ளிப்பிள்ளை ஆகியோரது பேராதரவால் ஆலயம் புதுப்பொலிவு கண்டது.

இதன்பேறாக 1985ஆம் ஆண்டு பங்குனி ரோகிணி நட்சத்திரத்தில் மகாகும்பாபிஷேகம் செய் யப்பட்டது. அக்காலப்பகுதியில் நாட்டின் குழப்பநிலை காரணமாக கதிர்காம யாத்திரை செய்ய முடியாததால் இந்த ஆலயப் புனரமைப்பு மிகுந்த வேகத்தை எட்டியிருந்தது குறிப்பிடத்தக்கது.

1989 ஆம் ஆண்டு ஆனிமாத விசாக நன்னாளில் தங்கேஸ்ஸின் குடும்பத்தினரால் தனிச் சந்நிதானம் அமைக்கப்பட்டு வள்ளி தேவசேனா சமேத ஆறுமுகப்பெருமனுக்கு பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் நிகழ்ந்தது. அதனைத் தொடர்ந்து 1991 இல் கார்த்திகை மாத அஸ்வினி நட்சத்திரத்தில் நவக்கிரக ஆலயம் அமைக்கப்பட்டது.

இக்காலத்தில் கதிர்காம வழிபாட்டினைப் பின்பற்றி கமுகமரத்தில் கொடியேற்றி வள்ளிக் கொடி நாட்டி ஆடித் திருவோணத்தில் தீர்த்தம் நிகழ 16 நாள்கள் திருவிழா நிகழ்ந்துவரலாயிற்று.

பிரம்மஸ்ரீ கு.தியாகராஜக் குருக்களின் வேண்டுகோளை ஏற்று ந.வீரமணிஐயர் அவர்கள் கதிர் காம சுவாமி மீது பக்திரசம் பொங்கும் கீர்த்தனைகளையும் திருவூஞ்சற் பதிகத்தையும் பாடியுள் ளார். வித்தகன் தெட்சணாமூர்த்தி கோபாலசிங்கம் அவர்களும் அற்புதமான தோத்திரப் பாமாலை பாடியுள்ளார். இவ்வாறு ஆலயம் துரித வளர்ச்சி பெற்று வருகையில் 1995 இல் நாட்டின் அசாதாரண போர்ச்சூழலால் ஆலயத்துக்குப் பலத்த சேதம் ஏற்பட்டதுடன் பொருளழிவும் ஏற்பட்டது.

எனினும் மக்களின் அயராத முயற்சியினால் ஆலயம் மீண்டும் புனரமைப்புச் செய்யப்பட்டது. இந்த வளர்ச்சியில் பிரம்மஸ்ரீ கு.தியாகராஜக் குருக்கள், ஸ்ரீமான் அமரர் த.சின்னத்துரை, திருமதி இராசா ஆகியோரின் பங்களிப்புக் குறிப்பிடத்தக்கது.

இவ்வேளையில் 1997 வைகாசி புனர்பூச நட்சத்திரத்தில் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. இச்சந்தர்ப்பத்தில் ஆலயத்தை ஸ்தாபித்த செல்லாச்சி அம்மையாருடைய சமாதிலிங்கமும் கடம்பமர நிழலில் ஸ்தாபிக்கப்பட்டது.

இவ்வாறு ஆலய வளர்ச்சியின் நிறைவாக 2001 ஆம் ஆண்டு சிவஸ்ரீ கு.தியாகராஜக் குருக்கள் தலைமையில் வருடாந்த பிரம்மோற்சவம் முதன் முதலாக நிகழ்ந்தது.


2003 இல் திருக்குளம் அமைக்கப்பட்டு ஸ்ரீகுமார புஷ்கரணி என திருநாமம் சூட்டப்பட்டது. இவ்வாறு வலி.கிழக்குப் பிரதேச மக்களின் கதிர்காமக் கந்தனாக நீர்வேலி செல்லக்கதிர்காமம் மிளிர்ந்து வருவது சிறப்பானதாக எண்ணி மக்கள் பக்தி பரவசத்துடன் நினைந்து துதிக்கின்றனர்.

# அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி

(சென்றவாரத் தொடர்ச்சி)

வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள ஒரே ஒரு மகளிர் கல் லூரியான அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியில் 1985 ஆம் ஆண்டுக்கு முந்திய காலப்பகுதியில் நாடளாவிய ரீதியில் வெளி மாவட்டங்களிலிருந்தும் கணிசமான அளவு மாணவிகள் கல்வி பயில்வதற்கு முந்திக்கொள்வது உண்டு.

மகளிர் கல்லூரியுடன் இணைந்த நிலையில் அமைந்துள்ள கார்மேல் கன்னியாஸ்திரிகளின் (லங்கா மாதா மடம்) மாணவர் விடுதியில் தங்கியிருந்து கல்வி பயில்வது உண்டு. இந்த வகையில் கிழக்கு மாகாணம், மத்திய மாகாணம், வடமேல் மாகாணம் ஆகிய வற்றைச் சேர்ந்த மாணவிகள் கனிஷ்ட, இடை மற்றும் ஜி.சி.ஈ உயர்தர வகுப்புக்களில் அனுமதி பெற்று விருப்பத்தோடும் கல்வி பயின்றதுண்டு. அந்த வகையில் வலி.கிழக்குப் பிரதேச பெண்களின் கல்வி வளர்ச்சியில் மட்டுமல்ல, நாடளாவிய ரீதியில் தமிழ் மாணவிகளின் கல்வி வளர்ச்சியில் கணிசமான பங்களிப்புச் செய்து உயர்ந்து நின்றது.




கல்விக் கட்டமைப்பில் தரம்- 1 தொடக்கம் தரம்- 13 வரையான வகுப்புக்களைக் கொண்டதாக விளங்கும் கல்லூரியில் தரம் -1 முதல் தரம்- 5 வரையான வகுப்புக்களில் மாணவர்கள் ஆண்,பெண் கலவன் பாடசாலை என்ற வகையிலும் தரம்- 6 இல் இருந்து தரம் -13 வரையான வகுப்புக்கள் பெண்கள் கல்லூரி என்ற வகையிலும் செயற்பட்டு வருகின்றன.

ஆரம்பப் பிரிவு (தரம்-1 தொடக்கம் தரம்-5) மாணவர்களின் கல்வி வளர்ச்சியிலும் அடைவு மட்டத்திலும் வலி.கிழக்கில் முன்னணியில் உள்ளது. இதற்கு எடுத்துக் காட்டாக தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேற்றையும், கோப்பாய் கல்விக் கோட்ட மட்டத்தில் நடைபெறும் போட்டிகளிலும் மாணவர்கள் பெற்றுக்கொள்ளும் வெற்றிகளையும் கருத்தில் கொள்ளலாம். 2010 ஆம் ஆண்டு தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் கல்லூரியில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 13 பேர் சித்திய டைந்துள் ளமை கருத்தில் கொள்ளத்தக்கது. இந்த வகையில் கோப்பாய் கல்விக் கோட் டம் முன்னணியில் உள்ளது.

அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி தற்போதைய அமைவிடத்தில் 1946 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 6 ஆம் திகதி ஸ்தாபிதம் செய்யப்பட்டது. அச்சுவேலி மேற்கு அச்சு நகரைப் பிறப்பிடமாகவும் இலங்கையின் பிரபல வர்த்தகப் பிரமுகருமான பரோபகாரி ''செவிலியர் சேர்.சிற்றம்பலம் ஏபிரகாம் காடினர்'' அவர்களின் தீர்க்க தரிசனமான கல்விப் பணியில் உதயமாகி உயர்ந்து நிற்கின்றது.

செவிலியர் சேர். சிற்றம்பலம் ஏபிரகாம் காடினர் தனிப்பட்ட முறையில் கல்லூரிக்கான காணியை கொள்வனவு செய்து தனது பிறந்த நாளில் பாடசாலையை ஆரம்பித்து ''புனித தெரேசாள் பாடசாலை'' எனப் பெயரும் சூட்டினார்.

பாடசாலையின் முதலாவது அதிபராக திருக்குடும்பக் கன்னியர் சபையைச் சேர்ந்த அருட்சகோதரி மரிய றெஜினா கடமையாற்றினார். மணிவிழாக் கொண்டாடிய கல்லூரி யின் தற்போதைய அதிபராக அருட்சகோதரி மரிய றெசாறியோ கடமையாற்றுகின்றார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவு - செலவுத் திட்டத்தில் அரச ஊழியருக்கு

# வாக்குறுதியளிக்கப்பட்ட 2,500 ரூபாவுக்கு பதிலாக 586 ரூபாவே வழங்கப்பட்டுள்ளது

ஜே.வி.பி.கண்டனம்

கொழும்பு, நவ.25

அரச ஊழியருக்கு 586 ரூபா 50 சதமே வெறும் கொடுப்பனவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல்களின்போது வாக்குறுதியளிக்கப்பட்ட 2,500 ரூபாவோ அல்லது அரச ஊழியருக்கு 9,000 ரூபா அதிகரிக்க வேண்டுமென்ற ஜனாதிபதியின் சூத்திரமோ நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று ஜே.வி.பி. நாடாளுமன்றக் குழுத்தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

ஜே.வி.பியின் செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் காலை ஜே.வி.பியின் பெலவத்தை தலைமையகத்தில் நடைபெற்றது. அங்கு அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. தொடர்ந்து கூறியவை வருமாறு:-

அரச ஊழியர்களுக்கு அதிகரிக்கப்பட்டுள்ள கொடுப்பனவான 586 ரூபா 50 சதத்தில் ஐந்து தேங்காய்களையும், ஒரு பக்கெட் பால்மாவையும், அரைக் கிலோ அரிசியையுமே கொள்வனவு செய்ய முடியும். ஓய்வூதியம் பெறுவோர் ஒரு வாரத்துக்கு ஒரு தேங்காயை மாத்திரமே கொள்வனவு செய்யலாம். வாழ்க்கைச் செலவை மறைமுகமாக அதிகரிக்கும் வரவு - செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்து ஜனாதிபதி அரச ஊழியர்களை மட்டுமின்றி நாட்டு மக்களையும் ஏமாற்றியுள்ளார்.

அமைச்சரவைக்கு 60 அமைச்சர்களை நியமித்து ஜனாதிபதி தமக்குள் சகலவற்றையும் பகிர்ந்து கொண்டுள்ளார். மக்களுக்கு எதுவுமே பகிர்ந்து வழங்கப்படவில்லை

முற்பகல் 11.30 மணிக்கு 59ஆக இருந்த அமைச்சர்களின் எண்ணிக்கை இரவாகும்போது 60 ஆக உயர்ந்துவிட்டது. இந்த எண்ணிக்கை நாளுக்கு நாள் மேலும் அதிகரிக்கலாம். அமைச்சரவைக்குத் தமது மகனைத் தலைவனாக்குவதற்காகத் தமது அடிவருடிகளை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

60 பேர் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளபோதும் 19 அமைச்சுகளுக்கு இந்த வரவு-செலவுத்திட்டத்தில் நிதி ஒதுக்கப்படவில்லை. இந்த அமைச்சுகளுக்கு நிதி ஒதுக்கவேண்டுமானால், கல்வி, விவசாயம் போன்ற அமைச்சுகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியைக் குறைக்க வேண்டியேற்படும்.

தமது அமைச்சர்களுக்கு ஏற்ற வகையில் வரவு-செலவுத் திட்டத்தை முன்வைக்க முடியாத வரையில் மக்களுக்கேற்ற வரவு-செலவுத் திட்டத்தை முன்வைக்க முடியுமா? சீனி, பால்மா உட்பட வாழ்க்கைச் செலவை அதிகரிக்கக்கூடிய ஆலோசனைகள் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ளன.

2011ஆம் ஆண்டு பத்தாயிரம் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படுமென ஜனாதிபதி வரவு-செலவுத் திட்ட உரையில் தெரிவித்துள்ளார். ஆனால், நியமிக்கப்படவுள்ள பட்டதாரிகளுக்கான சம்பளத்துக்கு நிதி ஒதுக்கப்படவில்லை.

வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையருக்குப் புதிய ஓய்வூதிய திட்டமொன்று அறிவிக்கப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் இரண்டு வருடங்கள் பணிபுரியும்போது வருடமொன்றுக்கு 12 ஆயிரம் ரூபா வீதம் இரண்டு வருடங்கள் பணம் செலுத்தினால் ஓய்வூதியம் வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், ஓய்வூதியமாகக் கிடைக்கும் தொகை எவ்வளவு? அது எப் போதிருந்து கிடைக்குமென அறிவிக்கப்படவில்லை.

அத்துடன், வெளிநாட்டு வர்த்தக நிறுவனங்கள் இங்கு தமது வர்த்தக நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பிக்கலாமென வரவு-செலவுத் திட்ட உரையில் ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்த நடவடிக்கை பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும். முன்னர் முதலீட்டு அபிவிருத்திச் சபையின் அனுமதி பெற்றே வெளிநாட்டுக் கம்பனிகள் இங்கு முதலீடு செய்யமுடியும். இப்போது இந்த அனுமதி தேவை இல்லை- என்றார். (ஏ-சி)

## ஊடக மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கல்

யாழ்ப்பாணம், நவ. 25

யாழ்.பல்கலைக்கழகத்தின் ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கைலாசபதி கலையரங்கில் இன்று முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளன.

ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தின் புகைப்படக் கண்காட்சி காலை 8 மணிக்கு இடம்பெற உள்ளமை குறிப்பிடத்தக்கது. (15)

## மழை போதாமையால் விவசாயிகள் பாதிப்பு

ஊர்காவற்துறை,நவ.25

போதியளவு மழை வீழ்ச்சி இன்மையால் தீவுப்பகுதிகளில் பெரும்போக நெற் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் செய்வதறியாத நிலையில் உள்ளனர்.

நெற்பயிர்கள் ஓரளவு வளர்ந்துள்ள போதும் வயல் நிலங்கள் நீர் இன்றி வரண்டு போய் காணப்படுகின்றன.

பயிர்ச்செய்கைக்கு பெருமளவு பணச் செலவினை மேற்கொண்டுள்ள போதும் பருவம் தவறிப் பெய்யும் மழையினால் எதிர்பார்த்த விளைச்சலைப் பெறுவது கேள்விக் குறியாகி உள்ளதாக அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (ம-21)

# சயனைட் குப்பியுடன் திரிந்தவர்கள் இன்று பேனா, பென்சில்களுடன்

கல்வி அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு, நவ.25

''சயனைட் குப்பியுடன் நடமாடிய வடக்கு - கிழக்கு மாகாணத் தமிழ் இளைஞர், யுவதிகள் இன்று பேனா, பென்சில்களுடன் பாடசாலைக்குச் செல்லும் நிலைமையை உருவாக்கி உள்ளோம்'' என்கிறார் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன.

நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போதே கல்வி அமைச்சர் இப்படிக் கூறினார்.

ஐ.தே.க. கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகள் தொடர்பான கேள்வி ஒன்றை எழுப்பினார்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இன்று வரை இயங்கிக்கொண்டிருக்கும் தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு? இப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு? அங்கு கல்வி புகட்டும் ஆசிரியர்கள் எத்தனைபேர் ? அவற்றை முறையாக இயங்கக்கூடிய வகையில் ஆசிரியர்களின் பற்றாக்குறையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படுமா?- இப்படி ரவி கருணாநாயக்க கேள்வி எழுப்பியிருந்தார்.

இக் கேள்விக்குப் பதில் அளித்த கல்வி அமைச்சர், வடக்கு - கிழக்கு மாகாணங்களில் 30 தேசிய பாடசாலைகளும் 978 மாகாணப் பாடசாலைகளும் இயங்குகின்றன.தேசிய பாடசாலைகளில் 2,285 ஆசிரியர்களும் மாகாணப் பாடசாலைகளில் 16,591 ஆசிரியர்களும் கடமையாற்றுகின்றனர்.

தேசிய பாடசாலைகளில் 24 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியரும் மாகாணப் பாடசாலைகளில் 20 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியரும் இருக்கின்றனர் - என்றார்.

கல்வி அமைச்சர் சமர்ப்பித்த கூற்றுகளுக்கு நன்றி. என்றாலும் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தொடர்ச்சியாக இடம்பெற்ற யுத்தத்தினால் கல்வி நிலை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. போதிய ஆசிரியர்கள் இல்லை. தேவையான தளபாடங்கள் இல்லை. இதனைக் கருத்தில் கொண்டு அப்பிரதேச கல்வி அபிவிருத்திக்குக் கல்வி அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா? என்று இணைக் கேள்வி ஒன்றை எழுப்பினார் ரவி கருணாநாயக்க.

நீங்கள் சொல்வது உண்மைதான். முன்பு சயனைட் குப்பிகளுடன் அலைந்தவர்கள் இன்று பேனா, பென்சில்களுடன் பாடசாலைக்குச் செல்லும் நிலையை ஏற்படுத்தியுள்ளோம்.எங்களுடைய வரவு - செலவுத் திட்டத்தில் கல்வி அபிவிருத்திக்கே முன்னுரிமை கொடுத்துள்ளோம்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் மட்டுமல்ல, நாட்டின் சகல பிரதேசப் பாடசாலைகளும் அபிவி ருத்தி செய்யப்படும். அடுத்த ஆண்டு நடுப்பகுதிக்குள் ஆசிரியர் பற்றாக் குறை நிவர்த்தி செய்யப்படும் என்று கல்வி அமைச்சர் பதில் அளித்தார். (ஏ-சி)

# கண்ணிவெடி அகற்றும் பணிகள் இரண்டு ஆண்டுகளில் பூர்த்தியாகும்

இராணுவத் தளபதி

கொழும்பு, நவ.25

இன்னும் இரண்டு ஆண்டுகளில் நிலக்கண்ணி வெடி அகற்றும் நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்ய முடியும் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

தற்போது காணப்படும் வசதிகளை கொண்டு நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் பணிகளைப் பூர்த்தி செய்வதற்கு இன்னும் இரண்டாண்டுகால அவகாசம் தேவைப்படும் என அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்காவினால் இலங்கைக்கு இராணுவ வாகனங்கள் வழங்கப்பட்ட நிகழ்வு கொழும்பில் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நான்கு 'ட்ரக்' வண்டிகளும், ஏழு இராணுவ 'ட்ரக்' வண்டிகளும், ஐந்து 'லாண்ட் குரூசர்' அம்புலன்ஸ் வாகனங்களையும் அமெரிக்கா வழங்கியுள்ளது.

இந்த நிகழ்வு அமெரிக்க தூதரகத்தில் நடைபெற்றது.

வடக்கு மாகாணத்தில் இன்னமும் 10,000 சதுர கிலோ மீற்றர் பரப்பில் கண்ணி வெடி அகற்றும் பணி மேற்கொள்ளப்பட உள்ளதாக இராணுவத் தளபதி குறிப்பிட்டுள்ளார்.

நிலக்கண்ணி வெடி அகற்றும் பணிகள் மிகவும் செலவு மிக்கதெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (த)

மக்களுக்காக......



உதவி: கண்ணிவெடி அகற்றும் பணிகளுக்காக அமெரிக்கா இலங்கைக்கு வாகனங்களை வழங்கியுள்ளது.கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் வைத்து இலங்கைக்கான அமெரிக்க பிரதித்தூதுவர் வலேறி பவுலர் அம்மையார் இராணுவத் தளபதி லெட்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரியவிடம் வாகனங்களைக் கையளிக்கிறார். (த)

## சிறையில் குற்றச் செயல்களைத் தடுக்க விசேட பொலிஸ்

கொழும்பு,நவ.25

சிறைச்சாலைகளுக்குள் நாளாந்தம் பெருகிவரும் பேதைப் பொருள் வியாபாரம் உட்பட்ட பல்வேறு சட்டவிரோதச் செயல்களைக் கட்டுப்படுத்தவென சிறைச்சாலைப் பொலிஸ் பிரிவொன்று அமைக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆலோசனையின் பேரில் இராணுவப் பொலிசருக்குச் சமமான பொலிஸ் பிரிவொன்று சிறைச்சாலைகளில் அமைக்கப்படவுள்ளது.

பொலிஸ் மா அதிபர் கலாநிதி மகிந்த பால சூரிய,முன்னாள் சிறைச்சாலைகள் புனருத்தாபன பிரதியமைச்சர் விஜித் விஜயமுனி ஆகியோருடன் ஜனாதிபதி அலரி மாளிகையில் அண்மையில் நடத்திய பேச்சு வார்த்தைகளின் போதே இம் முடிவு எடுக்கப்பட்டது.

வெலிக்கடை உட்பட நாட்டிலுள்ள சகல சிறைச்சாலைகளிலும் நாளாந்தம் பெருகிவரும் போதைப் பொருள் வியாபாரம், கையடக்கத் தொலைபேசி பாவனை உட்பட்ட பல்வேறு சட்ட விரோத நடவடிக்கைகளை முற்றாக ஒழிப்பதற்காகவே இந்தப் புதிய பொலிஸ் பிரிவு அமைக்கப்படவுள்ளதாகச் சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-5)

## கைத்தொழிலாளர்களுக்கு விருதுகள்

தேசிய அருங்கலைகள் பேரவையினால் நடத்தப்பட்ட 2009, 2010 இற்கான சிறப்பக் கண்காட்சியில் தேசிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட கைத்தொழிலாளர்களுக்கு விருதுகள் வழங்கப்படவுள்ளன.

தேசிய ரீதியில் கைத்தொழில் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்காக இந்த விருது வழங்கும் நிகழ்வு இன்று பத்திரமுல்லையில் உள்ள மக்கள் அருங்கலைகள் மண்டபக அரங்கில், இலங்கை ஜனநாயகக் குடியரசின் கௌ.பிரதமர் டி.எம்.ஜெயவர்த்தன தலைமையில் நடைபெறவுள்ளது.கண்காட்சியில் தேசிய ரீதியில் (2009) தெரிவு செய்யப்பட்ட கைத்தொழிலாளர்களின் விவரம் வருமாறு:

கே.உஷாந்தினி (சண்டிலிப்பாய்), வி.பத்பநாதன் (சங்கானை - 2ஆம் இடம், திருநெல்வேலி), கே.சோதிராஜா (திருநெல்வேலி), பி.அனு கிரிஸ்ரா (ஊர்காவற்றுறை).

தேசிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட 2010 இற்கான விருதுகள் பெறுவோர் விவரம் சு. பாஸ்கரன் (கச்சேரி, யாழ்ப்பாணம்- 2ம், 3ம் இடம்), வி.பத்மநாதன் (சங்கானை), கே.யோகராஜா (சண்டிலிப்பாய்), க.கோபாலசிங்கம் (வட்டுக் கோட்டை). (ம-311-313)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:**
கலகலப்பான அனுபவங்களால் கவலைகளை மறக்கும் நாள். குடும்ப உறுப்பினர்களிடையே சிறு வாக்குவாதங்கள் ஏற்பட்டாலும், சிறிது நேரத்தில் சரியாகிவிடும். பண விவகாரங்களில் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். எதிலும் ஒரு உத்வேகத்துடன் செயற்படுவீர்கள். புதிய வாய்ப்புகள் தேடி வரும் நாள்.

**இடபம்:**
நீண்ட நாள்களாக வராத உறவினர் ஒருவர் உங்களின் வீட்டிற்கு வரலாம். சில விடயங்களில் கூடுதல் செலவு ஏற்பட்டாலும், அதை மற்றொரு வகையில் சரிக்கட்டுவீர்கள். நண்பர்கள் சிலர் மூலம் நல்ல செய்திகளைக் கேட்கலாம். சில வேலைகளில் எதிர்பாராத தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். உதிரி வரவுகள் வரலாம்.

**மிதுனம்:**
பணவரவுகளில் ஏற்பட்ட தடைகள் விலகும். நீண்ட நாளைய பிரச்சினை ஒன்று திடீரென முடிவுக்கு வரும். வியாபாரிகள் புதிய வாடிக்கையாளர்களைப் பெறலாம். பழைய நண்பர்கள் மூலம் புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும். சில வேலைகளை அவசரப்பட்டு செய்து விட்டு, பின்னர் வருத்தம் அடைவீர்கள். ஏமாற்றங்களை தவிர்க்க எச்சரிக்கை அவசியம்.

**கடகம்:**
தெய்வ வழிபாடுகள் மூலம் திருப்தி காண வேண்டிய நாள். சில வேலைகளை அதிக சிரமப்பட்டு முடிக்க நேரிடலாம். திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். வரவுகள் வரும் முன்னரே செலவுகள் காத்திருக்கும் நாள். உத்தியோகத்தர்கள் அதிகாரிகளின் கண்டிப்பிற்கு ஆளாகலாம். தொழில் ரீதியான போட்டி, எதிர்ப்புகளைச் சந்திக்கலாம்.

**சிங்கம்:**
தொழிலில் அதிக அக்கறையுடன் செயற்படும் நாள். பெண்கள் வழியில் பெருமைப்படும் வகையிலான உதவி கிடைக்கும். சுபகாரியச் செலவுகளை எதிர்கொள்ளலாம். தம்பதியர் இடையே ஒற்றுமை அதிகரிக்கும். மற்றவர்கள் மத்தியில் உங்களை பெரிய ஆளாகக் காட்டிக் கொள்ள முற்படுவீர்கள். அடமானமாக வைத்த பொருள்களை மீட்கலாம்.

**கன்னி:**
இனிமையான அனுபவங்களைப் பெறலாம். தாய் மீதான பாசம் அதிகரிக்கும். வெளியூர்களில் இருந்து முக்கியமான செய்திகளைக் கேட்கலாம். எதிர்பாராத பணவரவுகள் கைக்குக் கிடைக்கலாம். நண்பர்கள் வட்டம் விரிவடையும் நாள். உறவினர்கள் சிலருக்குக் கேட்காமலேயே சில உதவிகளைச் செய்வீர்கள். பரபரப்பாகச் செயற்படலாம்.

**துலாம்:**
எதிர்கால நலன் கருதி திட்டம் போடுவீர்கள். கொடுக்கல் வாங்கல்களில் ஏற்பட்ட குளறுபடிகள் மாறும். புதிய முயற்சிகளில் பொறுமை, நிதானம் அவசியம். உங்களுக்கு கிடைத்த வாய்ப்பு ஒன்றை மற்றவர்களுக்காக விட்டுக் கொடுப்பீர்கள். சில வேலைகளை நாளை செய்யலாம் எனத் தள்ளிப் போடுவீர்கள். கனவுத் தொல்லையுண்டு.

**விருச்சிகம்:**
திட்டமிட்ட காரியங்களை எப்படியாவது சாதித்துக் கொள்ள முற்படுவீர்கள். அரசியல்வாதிகள் வீண் பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். உறவினர்களுடன் மனஸ்தாபம் வராமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல்லவும். உதிரி வருமானங்களைப் பெறலாம். உங்களின் மீது அன்பு கொண்ட சிலரை அலட்சியம் செய்து அவர்களின் கோபத்திற்கு ஆளாவீர்கள்.

**தனுசு:**
உறவினர்கள் வழியில் உருவான தொல்லைகள் தீரும். எந்த வேலையையும் உடனுக்குடன் செய்து முடிப்பீர்கள். குழந்தைகள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். மாலை நேரத்தில் மனதிற்கு இனிய செய்திகளைக் கேட்கலாம். கொடுக்கல் வாங்கலில் கவனம் அவசியம். செலவுகளைக் குறைத்து சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள்.

**மகரம்:**
வழக்கமான பணிகளில் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். கனிவான பேச்சுக்களால் காரியங்கள் சாதிப்பீர்கள். சகோதர வழியில் ஏற்பட்ட சிரமங்கள் தீர்வுக்கு வரும். நண்பர்களை நம்பி சில வேலைகளை ஒப்படைப்பீர்கள். முடிவுகள் எடுப்பதில் தடுமாற்றம் உண்டு. சில விடயங்களில் பெருந்தன்மையுடன் நடந்து கொள்வீர்கள்.

**கும்பம்:**
தொழில் லாபத்தை அதிகரிக்க திட்டமிடுவீர்கள். பொதுவாழ்வில் உள்ளோர் பொறுமையாகச் செயற்பட வேண்டும். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளின் பாராட்டுகளைப் பெறலாம். உடன் பணிபுரியும் சிலரால் ஆதாயம் பெறலாம். கடனாகக் கொடுத்த பணம் திரும்பி வரும். கணவன் மனைவி இடையே மோதல் உருவாகலாம்.

**மீனம்:**
மறைமுக எதிர்ப்புகள், போட்டிகளை சந்திக்கலாம். உங்களின் வேலைகளை மற்றவர்களை நம்பி ஒப்படைக்க வேண்டாம். பயணங்களால் அலைச்சல்களுக்கு ஆள்படலாம். கோபம், வேகம் தவிர்க்கவும். வேலையாள்கள் வழியில் தொல்லைகள் உருவாகலாம். அனுபவம் இல்லாத சில காரியங்களில் இறங்கி அவதிப்படலாம். பக்தி நாட்டம் கூடும்.

# சிப்பாயின் 3 ஆவது குழந்தைக்கு ஒரு லட்சம் ரூபா எனில் உயிரிழந்த படையினரின் மனைவியர் என்ன செய்வர்?

## ஜே.வி.பியின் அநுரகுமார எம்.பி வேடிக்கை

கொழும்பு, நவ.25

''படையினருக்கு மூன்றாவது குழந்தை பிறக்கும்போது அரசு ஒரு லட்சம் ரூபாவை வழங்கும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வரவு- செலவுத் திட்ட உரையில் அறிவித்தார். ஆனால் யுத்தத்தின்போது படையினர் பலர் உயிரிழந்துவிட்டனர். எனவே, இவர்களது விதவை மனைவிமார் எப்படி மூன்றாவது குழந்தையைப் பிரசவிப்பர்? இதற்கு ஏதாவது வழிமுறையை அரசு வைத்திருக்கின்றதா?''

- இவ்வாறு வேடிக்கையாகக் கேள்வி எழுப்பினார் ஜே.வி.பி.நாடாளுமன்றக் குழுத்தலைவர் அநுரகுமார திஸாநாயக்க.


நேற்று முன்தினம் நடைபெற்ற ஜேவி பியின் செய்தியாளர் மாநாட்டில் அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

''நாமிருவர் நமக்கிருவர்'' என்ற அடிப்படையில் பலர் இன்று வாழ்க்கை நடத்துகின்றனர். இன்றுள்ள பொருளாதார நெருக்கடியில் இரண்டு குழந்தைகளுக்கு மேல் எண்ணிப்பார்க்கவே முடியாது.

நிலைமை இப்படியிருக்க அரசு, படையினருக்கு இப்படியொரு சலுகையை வழங்கியிருப்பது வேடிக்கை.

குழந்தை பிறக்கும் போது மட்டும் ஒரு லட்சம் ரூபா வழங்கினால் போதாது. அந்தக் குழந்தை வளர்ந்து தொழில் புரியும் நிலை ஏற்படும் வரையும் அவர்களைப் பராமரிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் -இப்படி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். (சி)

## முன்னேற்றம்.....



ஊக்குவிப்பு - புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரியில் உயர்தர கணித- விஞ்ஞான மாணவர் மன்றத்தின் ''துளிர்'' சஞ்சிகை வெளியீடு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. நூலின் முதற்பிரதியை முன்னாள் அதிபர் வ.ஆறுமுகத்திடம் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொண்ட வாகீசன் தம்பதியினர் கையளிக்கின்றனர். (72)

# பூமியில் சொர்க்கம்



ஒருநாள் பெரியவர் ஒருவர் வந்தார். அவர் தியானம் செய்யும் வழக்கம் உள்ளவர். ஒரு பெரிய சந்நியாசியுடன் நெருங்கிப் பழகுபவர். அவரிடம் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தேன்.

அவரிடம் ''உலகம் முழுதும் எங்கே பார்த்தாலும் சண்டை, சச்சரவாகவே இருக்கிறது. எதிர்காலத்தில் மனிதன் நிம்மதியாகவே வாழமுடியாதுபோல் உள்ளதே'' என்று கூறினேன்.

''அதற்கு யார் காரணம் என நினைக்கிறீர்கள்?'' என்று என்னைக் கேட்டார். ''தெரியவில்லையே?''என்றேன். அதற்கு அவர் ''மனிதன்தான் காரணம். மனிதன் மனம் வைத்தால் இந்தப் பூமியைச் சொர்க்கமாக மாற்றமுடியும்.'' என்றதோடு சில விஞ்ஞான உண்மைகளையும் கூறினார்.

ஒரே மாதிரியான இரண்டு தோட்டங்கள். அவற்றில் ஒரு தோட்டத்தில் தோட்டக்காரன் செடி,கொடிகளை மிகவும் அன்பாகவும் கனிவாகவும் கவனித் துக் கொண்டிருந்தான். அதே தோட்டக்காரன் இன்னொரு தோட்டத்தில் உள்ள செடி, கொடிகளை மிகவும் வெறுப்பாகவும் எரிச்ச லாகவும் கவனித்துக்கொண்டிருந்தான்.

அன்பாகவும் கனிவாகவும் கவனித்து வந்த செடி கொடிகள் சீக்கிரமாகவும் வலுவாகவும் வளர்ந்தன. வெறுப்பாகக் கவனித்துவந்த தோட்டம் அந்தளவுக்கு வளரவில்லை.

எனவே மனிதனுடைய எண்ண அலைகள் எந்தவொரு பொருளையும் பாதிக்கும்- பாதிக்கிறது - என்ற உண்மையைத் தெரிந்துகொள்ள முடிகிறது. எனவே ஒரு தனி மனிதனின் எண்ணம் - சொல் - செயல் இந்தப் பிரபஞ்சத்தில் ஒரு பாதிப்பை ஏற்படுத்த முடியும் என்பது திட்டவட்டமான உண்மை.

எல்லோரும் நல்ல எண்ணங்களையே நினைத்தால் உலகில் நன்மைகள் பெருகும், தீமைகள் குறையும். இயற்கையின் விதிகளைப் புரிந்துகொண்டு அதை மீறாமல் அதனுடன் ஒத்துப்போகும் எண்ணம்தான் நல்ல எண்ணம். நமது வாழ்க்கை சங்கிலித்தொடர் போன்று உணர்வுபூர்வமாக இணைக்கப்பட்டிருக்கிறது.

ஒருவரின் உடலுக்கோ - மனதுக்கோ ஏதோ ஓர் அதிர்ச்சியில் பாதிப்பு ஏற்படுகிறது என்றால் அது அவருக்கு இரத்த சம்பந்தமுள்ள அல்லது கடமை உணர்வுள்ள மற்றவர்களின் உடம்பிலும் மனதிலும் ஓரளவு பாதிப்பை ஏற்படுத்தும்.

இயற்கையின் விதிமுறைப்படிதான் எண்ண அலைகள் அடுத்தவரைப் பாதிக்கிறது.

**கோ.சுவாமிநாதன்.**

# வெற்றி மீது வெற்றி வந்து....



சீன அரசர் ஒருவர் தனது அமைச்சரிடம் எமது நாட்டையே சோலையாக்க வேண்டும்... தெருவெங்கும் மரம் நடவேண்டும் என்று தன் விருப்பத்தைத் தெரிவித்தார்.

இந்தப் பெரிய வேலையிலிருந்து நழுவ நினைத்த அமைச்சர், ''மன்னா.. அது பெரிய வேலை. மிகவும் சிரமம், வருடக் கணக்காகக்கூட ஆகலாம்...'' என்று இழுத்தார்.

புத்திசாலியான மன்னரோ ''ஆமாம்! ஆமாம்! நீங்கள் சொல்வது மிகச்சரிதான். இந்த ளவேலை வருடக்கணக்காக ஆகும் என்பதால் ஒரு வினாடிகூடக் காலத்தை வீணாக்காது உடனே தொடங்கவேண்டும். வாருங்கள்.. இப்போதே வேலையை ஆரம்பிப்போம்'' என்றபடி மரம் நடக் கிளம்பிவிட்டார். இப்படிப்பட்ட செயலில் இறங்குவதே இன்றைய சமூகத்தின் அவசியம். அதுவும் அவசரம்.

சென்னைக்கும் கன்னியாகுமரிக்கும் எவ்வளவு தொலைவு என்று உங்களிடம் கேட்டால் உங்களால் பளிச்சென்று பதில் சொல்ல முடியும்.

அதுபோல உங்களுக்கும் வெற்றிக்கும் இடையில் உள்ள தூரம் எவ்வளவு என்று சொல்ல முடியுமா? என்னால் சொல்லமுடியும்.

உங்கள் சிந்தனைக்கும் செயலுக்கும் இடையில் உள்ள தூரம்தான் உங்களுக்கும் வெற்றிக்கும் இடையில் உள்ள தூரம்.


சிந்தைகளைச் செயற்படுத்துங்கள். பேச்சைக் குறைத்து, செயலில் இறங்குங்கள். உலகையே உயர்த்துங்கள். வெற்றுப் பேச்சை விட்டுவிட்டு வெற்றிப் பாதைக்கு வாருங்கள்.

**சுகி சிவம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாகரனுக்குக் கொடுக்க மறுத்ததை வேறு எவருக்கும் கொடுக்க மாட்டோம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடமிருந்து மாத்திரமல்ல அனைத்துத் தமிழ்க் கட்சிகளிடமிருந்தும் நாங்கள் அதிகம் எதிர்பார்க்கிறோம். தமிழ் அரசியல் கட்சிகளினதும் தமிழ் மக்களதும் ஆதரவு எங்களுக்குத் தேவை. பயங்கரவாத வழிமுறைகள் ஊடாகவும் பிரபாகரன் கோரியதை அவர்களால் பெற முடியாது என்பதைத் தமிழர்கள் புரிந்து கொள்ளவேண்டும். பிரபாகரனுக்கு எதை நாங்கள் கொடுக்க மறுத்தோமோ அதை மற்றவர்களுக்கும் வழங்கமாட்டோம் என்பதையும் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.



தமிழகத்தில் இருந்து வெளியாகும் 'த ஹிந்து' பத்திரிகையின் ஆசிரியர் என்.ராமுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வழங்கிய நேர்காணலின் தமிழ்ப் பெயர்ப்பு இது.

*கே:* நீங்கள் எதிர்க்கட்சி வரிசையில் இருந்த காலத்திலும் சரி உங்கள் மொத்த அரசியல் வாழ்க்கையிலும் சரி அரசை எதிர்க்கும் அடிப்படைகளைத்தானே நீங்களும் பின்பற்றினீர்கள்?

*ப:* ஆம். ஆனால், நாட்டுக்குக் கிடைத்த அனுகூலங்களையோ அன்றி உதவிகளையோ நிறுத்தும் வகையில் நான் எப்போதும் செயற்பட்டதுமில்லை; அதற்கு முயற்சித்ததும் இல்லை. இது போன்ற செயலை நாங்கள் ஒருபோதும் விரும்பியதில்லை. நாங்கள் சொல்கிறோம், ''ஆம்! இலங்கையில் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுகின்றன'' - என்று. ஏனென்றால் நான் தான் முதன் முதலில் ஜெனிவாவிற்குச் சென்று இலங்கையில் மனித உரிமை மீறல்கள் உண்டு என்று முறையிட்டவனே நான்தான். இருப்பினும் இலங்கை மக்களுக்கு நன்மையளிக்கும் வகையிலமைந்த உதவித்திட்டங்களை மீளப்பெறுமாறு நாம் எந்த வெளிநாட்டு அரசுகளுக்கும் அழுத்தம் கொடுக்கவில்லை.

*கே:* ஒன்றிணைந்த இலங்கைக்குள் கொண்டுவரப்படும் தீர்வுத் திட்டம் ஒன்றைத் தாம் ஏற்றுக்கொள்வார்கள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அல்லது கூட்டமைப்பில் இப்போது அங்கம் வகிப்பவர்கள் முதன் முதலாகக் கூறியிருக்கிறார்கள். இது தொடர்பில் உங்களின் கருத்து என்ன?

*ப:* இது ஒரு நல்ல முன்னேற்றம். ஏனெனில் முன்னர் அவர்களுக்கு வேண்டியிருந்தது தனிநாடுதான். அதனால் இது உண்மையில் மிக நல்ல முன்னேற்றம். இப்போது நாங்கள் அவர்களுடன் பேச்சுக்களை ஆரம்பிக்க முடியும்.

*கே:* நீங்கள் அவர்களிடமிருந்து அதிகம் எதிர்பார்க்கிறீர்களா?

*ப:* தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடமிருந்து மாத்திரமல்ல. நாட்டினது அனைத்துத் தமிழ்க் கட்சிகளிடமிருந்தும் நாங்கள் அதிகம் எதிர்பார்க்கிறோம். தமிழ் அரசியல் கட்சிகளினதும் தமிழ் மக்களதும் ஆதரவு எங்களுக்குத் தேவை. இது மிகவும் முக்கியமானது. துப்பாக்கிகளையும் ஆயுதங்களையும் கொண்டும் பயங்கரவாத வழிமுறைகள் ஊடாகவும் பிரபாகரன் கோரியதை அவர்களால் பெறமுடியாது என்பதைத் தமிழர்கள் புரிந்து கொள்ள வேண்டும். பிரபாகரனுக்கு எதை நாங்கள் கொடுக்க மறுத்தோமோ அதை மற்றவர்களுக்கும் வழங்கமாட்டோம் என்பதையும் அவர்கள் புரிந்துகொள்ளவேண்டும். ஆதலினால் அவர்கள் யதார்த்தமாகவும் திறந்த மனதுடனும் இந்தச் செயற்பாடுகளில் பங்கேற்க வேண்டும். மற்றையவர்களின் உணர்வுகளையும் தமிழர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

*கே:* என்ன ஒழுங்கில் இவையெல்லாம் நடக்கப் போகின்றன என்பதுதான் இங்கு கேள்வி. இந்த அரசியல் உடன்பாட்டுக்கு நீங்கள் வருவதற்கு முன்னர், அதிகாரப் பங்கீடு தொடர்பிலான அரசியல் ஒருமைப்பாட்டுக்கான தேடல் இருக்கிறது. எனவே ஏன் வட மாகாண சபைத் தேர்தலை நடத்தக் கூடாது? தேர்தலை நடத்த வேண்டும் என்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே தீவிரம் இல்லாதிருப்பது போன்று தோன்றுகின்ற நிலையில் நீங்கள் ஏன் அதனைச் செய்யக் கூடாது.

*ப:* ஆம். ஏனென்றால், இடம்பெயர்ந்து வசிக்கும் மக்களை மீள்குடியமர்த்துவது தான் முதன்மையான பணியாக இருக்கிறது. அவர்களுக்கு அடிப்படை வசதிகளைப் பெற்றுக் கொடுக்கப்படுவது கட்டாயம் என்பதுடன் இவர்களது வாழ்வாதாரமும் கட்டியெழுப்பப்படவேண்டும்.

*கே:* ஆனால், இந்த மக்கள் முகாம்களில் இருந்தபோதுதான் ஜனாதிபதித் தேர்தலிலும் நாடாளுமன்றத் தேர்தலிலும் வாக்களித்திருந்தார்கள். அப்படி இருக்கையில் இப்போது மட்டும் இவர்கள் முழுமையாக மீள்குடியமர்த்தப்படும் நாளுக்காக நீங்கள் காத்திருக்கத்தான் வேண்டுமா?

*ப:* அங்கு வாக்காளர் இடாப்பைப் புதுப்பிக்கவேண்டிய தேவை ஒன்றுள்ளது. 1981ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட குடிசன மதிப்பீடுகளுக்கு அமைய நாங்கள் தேர்தல்களை நடத்த முடியாது. கிழக்கிலிருந்து புலிகள் வெளியேற்றப்பட்டதைத் தொடர்ந்து அங்கு நாங்கள் மாகாண சபைத் தேர்தலை நடத்தியிருந்ததை நீங்கள் அறிவீர்கள். ஆனால் வடக்கில் மக்கள் முகாம்களில் வசித்துவரும்போது மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு நான் விரும்பவில்லை. இது தவறான பார்வையை ஏற்படுத்திவிடும்.

எனினும், கூடிய விரைவில் வட மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கே நான் விரும்புகிறேன். அடுத்த ஆண்டு இந்தத் தேர்தலை நடத்த முடியும் என நம்புகிறேன்.

எங்களைக் குறை கூறுபவர்கள் எப்போதுமே எங்களைக் குறை கூறிக் கொண்டேதான் இருப்பார்கள். இந்த நிலையில் அவசரப்பட்டு வடமாகாண சபைத் தேர்தலை நடத்தி அதில் வாக்களிப்பு வீதம் குறைந்தால் அதற்கும் எங்கள் மீதுதான் குறைகூறுவார்கள். எது எவ்வாறிருப்பினும் 1981ஆம் ஆண்டினது குடிசன மதிப்பீட்டுக்கு அமைய நாங்கள் தேர்தல்களை நடத்த முடியாது.

*கே:* இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுவரும் அளவில்பெரிய உட்கட்டுமான அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் அனைவரும் பேசுகிறார்கள். கண்ணிவெடியகற்றும் பணிகள் இடம்பெற்று வரும் பகுதிகள் தவிர்ந்த, இலங்கையின் அனைத்துப் பகுதிகளும் அபிவிருத்தியில் போட்டி போடுகின்றன. அப்படியாயின் எல்லாம் நன்றாகவே போய்க்கொண்டிருக்கின்றன. இந்தத் துரித அபிவிருத்தி நடவடிக்கைகளைத் தக்க வைத்துக் கொள்ளும் வகையில் அரசியல் தீர்வு முயற்சிகளையும் விரைவுபடுத்த முடியாதா?

*ப:* துரதிர்ஷ்டவசமாக, இது போன்ற அரசியல் முனைப்புக்களில் தற்போது பங்கெடுப்பதற்கு அனைவரும் தயாராக இல்லை. அரசியல் முனைப்புக்களை நாங்கள் ஆரம்பித்தால் எதிர்க்கட்சியினரும் அதற்கு ஒத்துழைக்க வேண்டும். எல்லோரும் அதனை அங்கீகரிக்க வேண்டும் - அது ஒன்றும் எனது தனிப்பட்ட தீர்வாக இருக்க முடியாது. அது மக்களின் தீர்வாக இருக்க வேண்டும். அந்தத் தீர்வு அடிமட்டத்தில் இருந்து வரவேண்டும். அது இறக்குமதி செய்யப்படக் கூடாது. பலாத்காரமாகத் திணிக்கப்படக் கூடாது. அவர்களிடம் இருந்தே அது வரவேண்டும். அத்தகைய ஒரு தீர்வே நாம் வேண்டுவது.

தற்போது, ஒரே தேசம் ஒரு நாடு என்பதையே அனைத்து மக்களும் விரும்புகிறார்கள். நான் வடக்கிற்குப் பயணம் செய்திருக்கிறேன். எங்களது இளைய நாடாளுமன்ற உறுப்பினர்களும் போயிருக்கிறார்கள். அங்கே நாம் பல பில்லியன் ரூபாவைச் செலவிட்டிருக்கிறோம். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நாங்கள் செலவிட்ட தொகையளவுக்கு நாங்கள் ஏனைய மாகாணங்களில் செலவிடவில்லை. அதை ஒப்பிட்டுப் பார்த்தீர்களானால், வடக்கு மற்றும் கிழக்கில் மிகப்பெரியளவில் முதலிட்டிருக்கிறோம் என்பது தெரியவரும்.

*கே:* நான் அந்தக் கேள்வியை ஏன் கேட்டேன் என்றால், அரசியல் உடன்பாடு ஏற்பட்டுவிட்டால் இலங்கையில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. 2002 ஆம் ஆண்டு போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட நாள் முதல் போர் முடிவுக்கு வரும் வரையிலான காலப் பகுதியில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் பொறுப்புக் கூறும் வகையிலும் பொருத்தமான பரிந்துரைகளைச் செய்யும் வகையிலும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. இதைப்போன்ற வெற்றிபெற்ற தென்னாபிரிக்க மாதிரி (Model) - உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றுண்டு. இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் செயற்பாடுகள் குறித்து நீங்கள் எப்படி மதிப்பிடுகிறீர்கள்?

*ப:* ஆணைக்குழுவினது செயற்பாடுகள் திருப்திதரும் வகையில் சிறப்பாக உள்ளன. ஆணைக்குழு தனது இடைக்காலப் பரிந்துரைகளை வழங்கியிருக்கிறது. அதனை நடைமுறைப்படுத்துவதற்காக அதிகாரிகளிடம் கையளித்திருக்கிறேன். இதற்காக குழுவொன்றும் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆணைக்குழு கொழும்பில் மட்டும் விசாரணை நடத்தவில்லை. வடக்குக்குச் சென்றிருக்கிறது. கிராமங்களுக்கும் செல்கிறது. அவர்கள் மக்களிடம் சென்று விசாரணை செய்கிறார்கள். மக்கள் தங்களைத் தேடி வரும் வரைக்கும் காத்திருப்பதில்லை. வெகுஜனங்களிடம் அவர்கள் செல்கிறார்கள். அது தான் வித்தியாசம். '

ஆணைக்குழுவின் முன்னால் சாட்சியளிக்கு அனைத்துலக மனித உரிமை அமைப்புகளுக்குக்கூட அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. ஐக்கிய நாடுகள் சபையினருக்குக் கூட அழைப்பிதழ் அனுப்பப்பட்டது. ஆனால் தங்களது நலன்களை முன்நிறுத்திச் செயற்படும் குறிப்பிட்ட சில தரப்புகள் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பாக வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருக்கின்றன.

**கூட்டமைப்பினரிடமிருந்து மாத்திரமல்ல, அனைத்துத் தமிழ்க் கட்சிகளிடமிருந்தும் அதிகம் எதிர்பார்க்கிறோம். தமிழ் அரசியல் கட்சிகளினதும் தமிழ் மக்களதும் ஆதரவு எங்களுக்குத் தேவை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகஷ்டப் பிரதேசப் பாடசாலைகளை தரம் உயர்த்த அனைவரும் உதவவேண்டும்

## மக்கள் வங்கிக் கிளை முகாமையாளர் உரை

யாழ்ப்பாணம், நவ.25

அதிகஷ்டப் பிரதேசங்களில் அமைந்துள்ள பாடசாலைகளின் வளர்ச்சிக்குப் பல்வேறு தரப்பினரும் உதவிகளைப் புரிந்து அதனுடைய தரங்களை உயர்த்தவேண்டும்.

மக்கள் வங்கியின் கொடிகாமம் கிளை முகாமையாளர் க.சிறீதரன் இவ்வாறு தெரிவித்தார்.

ஈ.எஸ்.டி.பி. (ESDP) நிதி ஒதுக்கீட்டின்கீழ் பூர்த்தி செய்யப்பட்ட அலுவலகக் கட்டடத் தொகுதித் திறப்பு விழா கடந்த 8ஆம் திகதி பாடசாலையின் அதிபர் பொ. நடேசலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஒவ்வொரு கிராமங்களிலும் உள்ள பாடசாலைகளின் வளர்ச்சிக்கு அந்தந்தச் சமூகத்தைச் சார்ந்த மக்கள் தம்மாலான பங்களிப்பினைச் செய்ய வேண்டும்.

அத்தகைய பங்களிப்பின் மூலம் அந்தப் பாடசாலைகளின் வளர்ச்சி பல்வேறு பரிணாமங்களைப் பெற்றுக்கொள்கின்றன.

அதன் மூலம் அந்தக் கிராமமும் நிறைவான கல்வியறிவுள்ள சமூகமாக மாற்றம் அடை[illegible]

மாணவர்களின் ஆரோக்கியமான கல்விக்கு அவர்கள் கற்கின்ற சூழல் மிகவும் இன்றியமையாத ஒன்றாகும்.

குறிப்பாக அழகான கட்டடங்கள், பசுமையான மரங்கள் இவை யாவும் கல்வி கற்கும் மாணவர்களின் மனங்களை இதப்படுத்தி கற்றல் செயற்பாடுகளில் அதிக கவனம் செலுத்த வகை செய்யும். (ம-9)

## ஜனாதிபதியின் பதவி ஏற்புக்காக வல்லையில் பனம் விதை நடப்பட்டது

யாழ்ப்பாணம்,நவ.25

ஜனாதிபதியின் இரண்டாவது பதவி ஏற்பை முன்னிட்டு அச்சுவேலி- வல்லை வீதியில் பனம் விதைகள் நடப்பட்டன.

வலி.கிழக்குப் பிரதேச செயலர் சம்பிரதாய பூர்வமாகப் பனம் விதைகள் நடும் நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நிபுங்க, அச்சுவேலி முளக்கன் இராணுவ முகாம் பொறுப்பதிகாரி எஸ்.குமார, வர்த்தக சங்கத் தலைவர் எஸ். ரகீம்ராஜ், இளைப்பாறிய மாவட்ட நீதிமன்றப் பதிவாளர் எஸ்.சந்திரலிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டனர். (201-236)

## துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

கொழும்பு,நவ.25

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானதாகச் சந்தேகிக்கப்படும் குடும்பஸ்தரின் சடலம் வீரகெட்டிய குடாபிபூல பிரதேசத்தில் பாழடைந்த பகுதியொன்றில் இருந்து மீட்கப்பட்டதாக வீரகெட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

மிக்தெனிய ஓக்கன்தயாயவில் வசித்து வந்த பெருவளலியனகே சுஜித் பிரியந்த (வயது 30) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நண்பரொருவரது வீட்டின் நடக்கும் நிகழ்வு செல்வதாகக் கூறி கடந்த வெள்ளிக்கிழமை தனது வீட்டைவிட்டு இவர் புறப்பட்டுச் சென்றுள்ளார் எனத் தெரியவருகிறது.

மரண விசாரணையை மேற்கொண்ட வலன்முக்ல மாவட்ட நீதிவான் சந்திம லியனகே சடலப் பரிசோதனையை மாத்தளை வைத்தியசாலையில் மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இக்கொலை சம்பந்தமாக இருவர் மீது சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் வீரகெட்டிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி என்.பி சூரியாராட்சி தெரிவித்தார். (ம-5)

### கண்ணீர் அஞ்சலி

நுணாவிலைப் பிறப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்து வந்தவருமான

**செல்லையா குமாரசாமி**

(நுணாவிற்குளம், கண்ணகை அம்மன் ஆலய தர்மகர்த்தாவும் ஆலய பரம்பரைத் தலைவரும்)
அவர்களின் மறைவையிட்டு அதிர்ச்சியடைவதோடு, அவரின் துயரினால் துன்புறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கைதடி, நுணாவில்,
சாவகச்சேரி.
(106472)

ஆலய பரம்பரைப் பிரதம குருவும்,
சிவகடாட்ச சர்மா குடும்பத்தினரும்.


# சுவர்ணமஹால்

## பினான்ஸியல் சேர்விஸஸ் லிமிடட்

யாழ் மக்களுக்கு ஒரு பொன்னான சந்தர்ப்பம்

03 மாத நிலையான வைப்புக்கு ஆண்டு ஒன்றிற்கான வட்டி வீதம்

# 14.00%

**(A.E.R.14.75%)**

(சிரேஸ்ட பிரஜைகளுக்கு)

இந்த அரிய வாய்ப்பு எமது கிளை யாழில் தடம் பதிக்கும் நாளான
06.12.2010 அன்று மட்டுமே
இல. 338, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு : டிலாணி 077 22 68 555
: ராகுலன் 077 22 68 723

*எமது பிரதான சேவைகள்*

- நிலையான வைப்புகள்
- சேமிப்பு வைப்புகள்
- தங்க நகை அடகு சேவை
- வாடகை கொள்வனவு
- நிதிக்குத்தகை (லீசிங்)

SES

சுவர்ணமஹால்
பினான்ஸியல் சேர்விஸஸ் லிமிடட்

A trust etched in gold

இல: 654, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 0112 556160-4
தொலைநகல் : 0112 595062/2589823 மின் அஞ்சல்: infor@sfs.lk இணையத்தளம்: www.sfs.lk

*பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்:*

கலாநிதி சோமா எதிரிசிங்க (அவைத்தலைவி) ஜே.எச். எதிரிசிங்க (பிரதி அவைத்தலைவர்) ஏ.டி.. எதிரிசிங்க (பணிப்பாளர்) என்.பி. எதிரிசிங்க (பணிப்பாளர்) ஏ.எஸ்.எதிரிசிங்க (பணிப்பாளர்) சுனில் அபேரட்ன (பணிப்பாளர்) FCA (SL), FSCMA (UK), FCMA (SL), CMA (AUS) மஹேந்திர டி சில்வா (பணிப்பாளர்) MBA, FCA, FSCMA (AUS) சமீர கனேகொட (பணிப்பாளர்/நிறைவேற்று அதிகாரி) ACA, B.B.Mgt. (Acc), ASCMA.

இலங்கை மத்திய வங்கியின் நாணய சபையினால் 1988ம் ஆண்டின் 78ம் இலக்க நிதி கம்பனிகள் சட்டத்திற்கமைவாக நிதிக்கம்பனியாக பதிவு செய்யப்பட்டுள்ளது
பதிவு இல : PB 594


### தொல்லியற் திணைக்களம், யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணக் கோட்டையை மீள்புனர்நிர்மாணம் செய்வதற்கு வேண்டிய பொருள்களை வழங்குவதற்கான

### கூறு விலைகோரல் விண்ணப்பம்- 2011

யாழ்ப்பாணப் பிராந்திய தொல்லியற் திணைக்கள விலைகோரல் சபையின் தலைவர் அங்கீகாரம் பெற்றவர்களிடமிருந்து யாழ்ப்பாணக் கோட்டையை மீள் புனர் நிர்மாணம் செய்வதற்குரிய கோறல் கல் (செப்பனிடப்பட்டது, செப்பனிடப்படாதது), சுண்ணாம்புக் கல், செங்கல், சல்லி, ஆற்று மணல், ஊரி ஆகிய பொருள்களுக்கான முத்திரையிட்டப்பட்ட கூறு விலைகோரல் விண்ணப்பத்தை 10.12.2010 வரை ஏற்கவுள்ளார்.

மேலதிக விவரங்களை இல.160, கோயில் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள பிராந்திய அலுவலகத்தில் வேலை நாள்களில் காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். 15.12.2010 அன்று பிற்பகல் 2 மணிக்கு கூறுவிலை கோரல் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு முடிவெடுக் கப்படும். அதில் விண்ணப்பித்தோர் அல்லது அவர் பிரதிநிதி நேரில் சமுகமளிக்க அனுமதிக்கப்படுவர்.

| | |
|---|---|
| விளம்பரதாரர் | தலைவர், |
| கலாநிதி செனரத் திஸநாயக்கா, | கூறு விலைகோரல் சபை, |
| இயக்குநர், | பிராந்திய அலுவலகம், |
| தொல்லியல் திணைக்களம், | தொல்லியல் திணைக்களம், |
| மார்க்கஸ் பெர்னாண்டோ மாவத்தை, | இல.160, கோயில் வீதி, |
| கொழும்பு-07. (சி/572526) | யாழ்ப்பாணம். |

### அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



விகிர்தி வருடம் ஐப்பசி மாதம் 25ஆம் நாள் (11.11.2010) வியாழக்கிழமை அன்று இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவர்

**அமரர் குட்டிஐயா யோகீஸ்வரன்**
**(முத்துலிங்கம்)**

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (25.11.2010) வியாழக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (26.11.2010) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகைதந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

முதலியார் ஒழுங்கை,
கோப்பாய் வடக்கு, கோப்பாய். (106381) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டு. கச்சேரி சிற்றூழியர்களில் நால்வர் மட்டுமே தமிழ் பேசுவோர்

## பொன். செல்வராசா ஜனாதிபதிக்கு கடிதம்

கொழும்பு, நவ.25

மட்டக்களப்பு மாவட்ட கச்சேரியில் அண்மையில் நியமனம் பெற்ற சிற்றூழியர்களில் அதிகமானோர் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த பெரும்பான்மை இனத்தவர்கள். மிகக் குறைவானோரே தமிழ் பேசும் இனத்தவர்களாவர் எனத் தெரிவித்து, மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா ஜனாதிபதிக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இந்த நியமனத்தில் இன விகிதாசார முறைமை கூட பின்பற்றப்படவில்லை என்றும் அவர் தம் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பாக பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரத்னவை, அவரது அமைச்சில் சந்தித்து தாம் பேச இருக்கிறார் என்றும் இந் நியமனத்தை உடன் நிறுத்தும்படி அமைச்சரை தாம் கோரவுள்ளார் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், "கடந்த வாரம் மட்டக்களப்பு கச்சேரியில் 21 சிற்றூழியர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இவர்களில் 17 பேர் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த வெளி மாவட்டத்தவர்கள். 4 பேர் மட்டுமே மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்" எனத் தெரிவித்துள்ளார்.

''அதிகளவு தமிழ் பேசும் மக்களைத் தன்னகத்தே கொண்டுள்ள மட்டக்களப்பில் இதே மாவட்டத்தைச் சேர்ந்த வேலையற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்காமல், பிற மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு இந்நியமனம் வழங்கப்பட்டமை கண்டிக்கத்தக்கதொரு விடயமாகும்'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸி)

# வயோதிப பெண் கொலை சந்தேக நபர் இரு வருடங்களுக்குப் பின் கைது!

காத்தான்குடி, நவ. 25

காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்லடி பிரதேசத்தின் சரவணா வீதியில் 68 வயது வயோதிபப் பெண்ணொருவரை இரு வருடங்களுக்கு முன் கழுத்தை வெட்டிக்கொலை செய்தவர் என்ற குற்றச்சாட்டின் பேரில், கடந்த திங்கட்கிழமை மாலை, பெண்ணொருவர் காத்தான்குடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி ஜி.பி, ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

2009 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் கல்லடி பகுயிலுள்ள வீடொன்றினுள் புகுந்து ரி.நல்லம்மா என்ற வயோதிப பெண்ணின் கழுத்தை வெட்டி அவரைப் படுகொலை செய்துவிட்டு, கழுத்திலிருந்த நகைகளைக் கொள்ளையடித்துக் கொண்டு மேற்படி பெண்தப்பிச் சென்றுள்ளார் எனப் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு இருதயபுரம் பகுதியைச் சேர்ந்த பூ. இட்சுமியம்மா என்ற பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்




கொண்டுள்ளனர். அத்துடன் சந்தேகநபர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பெண்ணியல் வாதியான நளினி ரட்ணராஜாவின் தாயே இவ்வாறு கொல்லப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-21)

# கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு புதிய பதிவாளர் நியமனம்

மட்டக்களப்பு, நவ.25

நீண்ட காலமாக இழுபறியில் இருந்து வந்த பதிவாளர் பிரச்சினைக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்ற பேரவைக் கூட்டத்தில் முடிவு காணப்பட்டது எனக் கிழக்குப் பல்கலைக்கழக பதில் உபவேந்தர் கலாநிதி பிரேம்குமார் தெரிவித்தார்.

இந்தப் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் இலங்கை நிர்வாக சேவையின் தரம் ஒன்றைச் சேர்ந்த மாணிக்கவாசகர் தயாபரன் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் அடுத்த மாதம் முதலாம் திகதி கடமையைப் பொறுப்பேற்கவுள்ளார்.

இவர் கிழக்கு மாகாண உள்ளூராட்சி உதவி ஆணையாளராக நீண்டகாலம் பணியாற்றியவர். தற்போது மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் திட்டப் பணிப்பாளராகப் பணியாற்றி வருகிறார்.

பல்வேறு பிரச்சினைகளுக்குள்ளாகியுள்ள கிழக்குப் பல்கலைக்கழகத்தில், பதிவாளர் நியமனம் நடைபெற்றுள்ளமை பல்கலைக்கழக அபிவிருத்திக்கு உகந்த ஒரு காரியமாகும் என கல்வியாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (ஸி)

# மஹ்மூத் கல்லூரிக்கு இந்தியா பஸ்

அம்பாறை, நவ.25

இலங்கை-இந்திய நட்புறவுத் திட்டத்தின் கீழ் கல் முனை மஹ்மூத் மகளிர் கல்லூரிக்கு பஸ் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

இதனைக் கையளிக்கும் வைபவம் அண் மையில் கல்லூரி அதிபர் ஐ.எல்.ஏ.மஜீட் தலை மையில் நடைபெற் றது. இதில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிச் செயலாளர் நாயகமும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான நிஸாம் காரியப்பர் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். (ஸி)

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு வவுணதீவில் வீடுகள்

மட்டக்களப்பு, நவ.25

மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவுப் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பகுதியில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து மீள்குடியேற்றப்பட்ட 45 குடும்பங்களுக்கு, கரிட்டாஸ் எகெட் நிறுவனத்தால் 22.5 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட வீட்டுத்தொகுதி கையளிக்கப்பட்டது.

எகெட் கரிட்டாஸ் நிறுவன இயக்குனர் அருட்தந்தை பேராசிரியர் சிறிதரன் சில்வஸ்டார் தலைமையில் கையளிப்பு வைபவம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் என்.வில்லரெத்தினம், பிரதேசசபைத் தவிசாளர் பா.சுப்பிரமணியம், ஆயித்திய மலை தேவாலய அருட்தந்தை ஜி.அம்புருஸ் ஆகியோர் இதில் கலந்துகொண்டு வீட்டுத் தொகுதியைத் திறந்து வைத்தனர். அத்துடன் பயனாளிகளிடம் வீட்டு ஆவணங்களையும் கையளித்தனர். (ஸி)

# ஒரே அமைச்சுப் பதவி மீண்டும் கிடைப்பதற்கு ஜனாதிபதி என் மீது வைத்த நம்பிக்கையே காரணம்

## அமைச்சர் ஆறுமுகன் தெரிவிப்பு

கொழும்பு,நவ. 25

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ என்மீது உள்ள நம்பிக்கை காரணமாகத்தான் நான் ஏற்கனவே வகித்துவந்த இதே அமைச்சை மீண்டும் எனக்குத் தந்துள்ளார் - என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார்.

திங்கட்கிழமை மு.ப 10.30 மணியளவில், புதிய அமைச்சரவையில் மீண்டும் கால்நடைவள மற்றும் கிராமிய, சமூக அபிவிருத்தி அமைச் சராக ஜனாதிபதி முன்னிலை யில் 'பதவிப் பிரமாணம் செய்து கொண்டு அமைச்சில் தனது பொறுப்புகளையும் ஏற்றுக் கொண்ட வேளையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

கடந்த காலங்களில் இந்த அமைச்சின் ஊடாக முன்னெடுத்த பல்வேறு பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும். பால் உற்பத்தியை மேலும் மேம்படுத்தும் பொருட்டு ஐந்தாண்டுகால வேலைத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இதவேளை, வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் பால் உற்பத்தியை அதிகரிக்க பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வெளிநாடுகளிலிருந்து பாலை இறக்கு மதி செய்வதைத் தவிர்த்து உள்நாட்டு உற் பத்தியை மேற்கொண்டு தன்னிறைவு காண வேண்டும்




என்பதே எமது நோக்கமாகும் - இவ்வாறு அமைச்சர் ஆறுமுகன் தெரிவித்தார். (ஸி)

# ஏழு சிறுமிகள் மீது துஷ்பிரயோகம்; ஹற்றனில் தொண்டர் ஆசிரியர் கைது

கொழும்பு,நவ. 25

தரம் ஐந்தில் கற்கும் மாணவிகள் ஏழுபேரை வல்லுறவுக்குட்படுத்தினார் எனக் கருதப்படும் தொண்டர் ஆசிரியர் ஒருவரை நோட்டன் பொலிஸார் திங்கட்கிழமை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

டிக்கோயாவுக்கும் நோட்டனுக்கும் இடைப்பட்ட பிரதேசத்திலுள்ள தமிழ்ப் பாடசாலை ஒன்றில் தொண்டர் ஆசிரியராகச் சேவைபுரிந்த 25 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் குறித்து பெற்றோர் நோட்டன் பொலிஸில் தெரிவித்த முறைப்பாட்டைத் தொடர்ந்தே இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து குறித்த ஆசிரியரால் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கலாமெனக் கருதப்படும் - ஒன்பது தொடக்கம் பத்து வயதுடைய ஏழு சிறுமிகள் மருத்துவ பரிசோதனைக்காக நாவலப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மருத்துவ பரிசோதனை அறிக்கையின் பின்னரே குறிப்பிட்ட ஆசிரியருக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நோட் டன் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ஸி)

# மஹியங்கனையில் ஆற்றுப்பாலம் உடைந்ததில் குடும்பஸ்தர் பலி

மஹியங்கனைப் பகுதி ஆறு ஒன்றுக்கு குறுக்காகப் போடப்பட்டிருந்த மரப்பாலம் உடைந்து வீழ்ந்ததில் அதில் நடந்து சென்ற மூன்று பிள்ளைகளின் தந்தை பரிதாபமாக மரணமானார்.

இந்த மரப்பாலத்துக்குப் பலியான நான்காவது நபர் இவர் எனப் பிரதேசவாசிகள் தெரிவித்தனர். இந்த மரப் பாலத்தின் வழியாக நாளாந்தம் சுமார் 400 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் பயணிக்கின்றனர்.

1987 ஆம் ஆண்டு முதல் சேதமடைந்துள்ள இப்பாலத்தைப் புதுப்பித்துத் தருமாறு அதிகாரிகளிடம் விடுத்த வேண்டுகோள் உதாசீனம் செய்யப்பட்டதனாலேயே இவ்வாறு மரணங்கள் சம்பவிக்கின்றன என பிரதேசவாசிகள் விசனம் தெரிவிக்கின்றனர். (ஸி)

# வீட்டுக்காரர் உறங்கும் வரை ஒளித்திருந்த திருடன் கட்டிலுக்குக் கீழே நித்திரை

வியாபாரி ஒருவரின் வீட்டுக்குள் புகுந்த திருடன் வீட்டுக்காரர்கள் உறங்கும் வரை கட்டில் ஒன்றுக்கு அடியில் மறைந்திருந்து ஆழ்ந்த நித்திரையில் ஈடுபட்டதால் வசமாக சிக்கிக் கொண்டார். இச்சம்பவம் கடுகண்ணாவை பகுதியில் நடைபெற்றுள்ளது. இது பற்றி மேலும் தெரியவருவதாவது:-

சம்பவ தினம் மாலை 7 மணியளவில் வீட்டுக்குள் நுழைந்த திருடன் வீட்டில் உள்ளவர் உறங்கும் வரை அங்கிருந்த கட்டிலொன்றின் கீழ் பதுங்கி இருந்துள்ளான். அதன்போது தன்னையறியாமலே நித்திரையில் ஆழ்ந்த திருடன் அதிகாலை 2 மணியளவில் விழித்தெழுந்து தான் இருக்கும் இடத்தை உணராமலே வீட்டுக்குள் நடமாடத் தொடங்கியுள்ளான். திருடன் நடமாடும் சத்தம் கேட்டு விழித்த வீட்டுக்காரர்கள் அவனை மடக்கிப் பிடித்து, அயலவரின் உதவியுடன் கடுகண்ணாவை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

திருடனின் உடல் அடிகாயங்களால் வீங்கியிருந்ததால் விளக்க மறியலுக்குப் பதிலாக வைத்தியசாலையில் பொலிஸ் காவலுடன் சேர்க்கப்பட்டுள்ளான். (எ)

# எட்டியாந்தோட்டையில் குடும்பஸ்தர் கொலை வீட்டின் பின்புறத்திலிருந்து சடலம் மீட்பு

கொழும்பு,நவ. 25

எட்டியாந்தோட்டை பிரதேசத்தில் நேஸ்மியர் பகுதியில் மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவர் வெட்டியும், குத்தியும் கொலை செய்யப்பட்ட நிலையில் அவரது வீட்டின் பின்புறத்திலிருந்து சடலமாக மீட்கப்பட் டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

38 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 19 ஆம் திகதி திருமண வைபவமொன்றுக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பியுள்ளார்.

சம்பவ தினமான 20ஆம் திகதி அவரது மனைவியும், குழந்தையும் மனைவியின் பெற்றோர் வீட்டில் தங்கியிருந்தபோதே இந்தக் கொலை நடந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைதாகவில்லை. விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (ஸி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச்சுடர்
## O/L மாவட்ட வலம் - 2010
### க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

கல்வி உலகின்ஊடக முன்னோடி உதயன்

நன்றிக்குரிய ஆசிரியர்:
கல்விச்சுடர் வளவாளர்,
ACA கல்வி நிலையம்,
திருகோணமலை.
தொ.பே.இ: 077-2267801

G.C.E.(O/L) விசேட வலம் 1

## கணிதம் I — 2 மணித்தியாலங்கள்

பகுதி A


ஐந்து வினாக்களுக்கும் விடை தருக.

01. 3.26<u>7</u>98 என்ற எண்ணில் கீழ் கீறிடப்பட்ட எண் குறிக்கும் பெறுமானம் என்ன?

02. சுருக்கி தசமவடிவில் எழுதுக. $30.78 \div 10^4$

03. சிக்கல் பின்னத்தை சுருக்குக. $\dfrac{\frac{1}{5}}{10}$


04. X இன் பெறுமானத்தைக் காண்க.




05. வாகனமொன்று 36 செக்கன்களில் 200m பயணம் செய்தது. இதன் கதியை km/h இல் தருக.

06. குறித்த 7 எண்களில், முதல் 4 எண்களின் கூட்டுத்தொகை 76, இறுதி 3 எண்களின் கூட்டுத் தொகை 78 ஆகும் எனின், இவ் எண்களின் இடை யாது?

07. அருகிலுள்ள சாய்சதுரம் PQRS இல் நிழற்றிய பகுதியின் பரப்பளவு யாது?




08. இருசமபக்க செங்கோண முக்கோணி ஒன்றின் செம்பக்கத்தின் மீள்ள சதுரத்தின் பரப்பளவு 98cm². எனின், செங்கோணத்தை அடைக்கும் பக்கமொன்றின் நீளம் யாது?

09. நாற்பக்கலொன்றின் அகக் கோணங்கள் 3 : 4 : 6 : 7 என்ற விகிதத்தில் அமைந்துள்ளன எனின். மிகப் பெரிய கோணத்தின் பருமனைக் காண்க.


10. $x + y = 3$ ஆகும்போது $(y+3)(y-3)$ இன் பெறுமானத்தை x இல் தருக.

11. காரணியாக்குக. $(x^2 - ab) + (a - b)x$

12. 8 ஆண்கள் அல்லது 12 பெண்கள் ஒரு வேலையை 25 நாட்களில் செய்துமுடிப்பர். அதே வேலையை 6 ஆண்களும், 11 பெண்களுமாக செய்ய எத்தனை நாட்கள் தேவை?

13. தீர்க்குக. $\frac{1}{2} - \frac{x-2}{5} = \frac{2x-3}{10}$


14. அருகிலுள்ள சதுரம் ABCD இல் AE = DF ஆகுமெனின், DE = CF எனக் காட்டுக.




15. கனவுரு வடிவ பனிக்கட்டி ஒன்றின் பரிமாணங்கள் 4cm, 15mm, 25mm ஆகும். இதன் அடர்த்தி 0.92g/cm எனின், அதன் திணிவைக் காண்க.

16. $x/a + x/b = c$ எனும் சமன்பாட்டில் x ஐ எழுவாயாக மாற்றுக.

17. $y = 7 - 6x - 2x^2$ என்ற சமன்பாட்டின் வளையியை வரையாது
   1) சமச்சீர் அச்சின் சமன்பாடு.
   2) திரும்பற் புள்ளியின் ஆள்கூறு
   என்பவற்றைக் காண்க.





18. x, y இன் பெறுமானங்களைக் காண்க.

19. $\frac{4}{9}a^2 - \frac{2a}{3}$ எனும் கோவையை நிறைவர்க்கமாக்குவதற்கு கூட்டப்பட வேண்டிய ஒருமை உறுப்பை எழுதி, அதனை நிறைவர்க்கமாகக் காட்டுக.


20. மடகஸ்கார் என்பவர் வீடொன்றினை 2010 ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் திகதி ரூ. 50 மில்லியனுக்கு வாங்கினார். அவ்வீட்டின் பெறுமதி ஒவ்வொரு ஆண்டு தொடக்கத்திலும் 10% அதிகரித்துச் செல்கின்றது எனின், 2016 ஆம் ஆண்டு ஜனவரி 1இல் அதன் பெறுமதி யாது?

வகுப்பொன்றில் 35 மாணவர்கள் உள்ளனர். அதில் ஆண், பெண்களுக்கிடையிலான விகிதம் 3 : 2 ஆகும். இதிலிருந்து ஒருவர் எழுமாற்றாக வினாடி வினா போட்டிக்கு தெரிவு செய்யப்படின்.
   1) அவர் பெண்ணாக இருப்பதற்கான நிகழ்தகவு யாது?
   2) இரண்டாவதாக இன்னொருவர் தெரியப்படும்போது அவரும் பெண்ணாக இருப்பதற்கான நிகழ்தகவுகளைக் காண்க?

22. அருகிலுள்ள ABC, PQR என்பவை இயல்பொத்தவை இங்கு < A = < P, < C = < R ஆகும். AC = 4cm, PR = 3cm ஆகவும், ΔPQR இன் பரப்பளவு 4.5cm² ஆகவுமிருப்பின், முக்கோணி ABC இன் பரப்பளவு யாது?





23. உருளையொன்றின் முனைகளில் சம விட்டமுள்ள அரைகோளங்கள் கொண்ட கூட்டுகுளிசை (Capsule) ஒன்று காட்டப்பட்டுள்ளது. இதன் மொத்த மேற்றளப்பரப்பளவினை n,d,h சார்பில் தருக.




24. பகுதி எண்ணை விகிதமுறு எண்ணாகத் தருக.

$$\frac{1}{\sqrt{17}} - \frac{1}{\sqrt{13}}$$

25. அருகிள் காட்டப்பட்டடுள்ள நீச்சல் தடாகத்தின் கனவளவைக் காண்க.




26. சுருக்கி நேர்ச்சுட்டியாக தருக. $21a^{-3}b^{-1} \div 3a^2b^{-4}c^{-8}$

27. பின்வரும் சமனிலியைத் தீர்க்குக. $x(x-2) < r(2-x)$

28. $A = \{x : x = 2^n, n \leq 6, n \in N\}$ ஆகவும்
$B = \{x : x = 4^n, n \leq 4, n \in N\}$ ஆகவும் இருப்பின் AnB எனும் தொடையை எழுதுக.


29. கூட்டல் விருத்தி ஒன்றில் n 38 என்பவற்றுக்கிடையில் n கூட்டல் இடைகளைப் புகுத்தும் போது, இவ் விருத்தியின் உறுப்புக்களின் கூட்டுத் தொகை 200 ஆகின்றது எனின், n இன் பெறுமானத்தைக் காண்க?

30. (4, 5) என்ற புள்ளியினூடாகவும், $2x - 3y = 7$ என்ற மேல் கோட்டுக்கு செங்குத்தாகவும் செல்லும் நேர்கோட்டின் சமப்புள்ளி யாது?

பகுதி B

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

01. முக்கோணி ABC ஐ அடியாகக் கொண்ட முக்கோண கூம்பகம் (நான்முகி) ஒன்றின் உரு அருகில் காட்டப்பட்டுள்ளது. < CBA = 90⁰, AB = AC = 8cm. D ஆனது A இற்கு நேர்மேலே உள்ளது. AD = 4cm ஆகும். எனின், பின்வருவனவற்றைக் காண்க.





   1) BD இன் நீளம்?
   2) <DBA இன் பெறுமானம் யாது?
   3) BC இன் நீளம் யாது?
   4) முக்கோண வடிவக் கூம்பகத்தின் கனவளவு யாது?
   5) < DCA இன் பெறுமானம் யாது?

02. 'A' எனும் நிகழ்ச்சி நடைபெறுவதற்கான நிகழ்தகவு 'a' எனவும், 'B' எனும் நிகழ்ச்சி நடைபெறுவதற்கான நிகழ்தகவு 'b' எனவும் தரப்படுகிறது. இங்கு A, B என்பன சாராத நிகழ்ச்சிகளாகும். எனின், பின்வருவனவற்றிற்கான நிகழ்தகவுகளை a, b சார்பில் காண்க
   1) நிகழ்ச்சிகள் A, B இரண்டும் நடைபெறுதல்.
   2) நிகழ்ச்சிகள் A, B இரண்டும் நடைபெறாதிருத்தல்.
   3) நிகழ்ச்சி A நடக்கும்போது நிகழ்ச்சி B நடைபெறாதிருத்தல்.
   4) நிகழ்ச்சி B நடக்கும்போது நிகழ்ச்சி A நடைபெறாதிருத்தல்.
   5) நிகழ்ச்சி B நடைபெறாதிருத்தல்.


03. சிட்டி என்பவர் ரூ. 15,250 பணத்தை 5% வருடவட்டி வீதம் வழங்கும் வங்கியொன்றில் 2008 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8ஆம் திகதி தொடக்கம் அதே ஆண்டின் ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி வரை கடனாகப் பெற்றார் எனின்,
   1) வங்கியானது வட்டி அறவிடவேண்டிய நாட்களின் எண்ணிக்கை யாது?
   2) வினா 1 இற்குரிய விடையை வருடத்தின் பின்னமாகத் தருக.
   (வருடமொன்றில் 365 நாட்கள் எனக் கொள்க)
   3) 5% ஆண்டு வட்டி என்பதால் நீர் விளங்குவது யாது?
   4) சிட்டி, வங்கிக் கடனில் இருந்து விடுபட வேண்டுமாயின் செலுத்த வேண்டிய மொத்தத் தொகை யாது?

04.



   1) மேலே காட்டப்பட்டுள்ள பல்கோணிகளின் உச்சிகளை இணைப்பதனால் உண்டாகும் மூலைவிட்டங்களின் எண்ணிக்கையை தொடராக எழுதுக.
   2) இத் தொடரைக் கூர்ந்து ஆராய்ந்து அடுத்து வரும் உருப்புக்களையும் எழுதுக.
   3) இத் தொடரின் n ஆம் உறுப்புக்கான கோவையை எழுதுக. இங்கு n என்பது பல்கோணிகளின் பக்கங்களின் எண்ணிக்கையாகும்.
   4) 1. 170 மூலைவிட்டங்களை கொண்ட பல்கோணியின் பக்கங்களின் எண்ணிக்கை யாது?
      2. ஒழுங்கான பல்கோணியொன்றின் அகக்கோணம், புறக்கோணத்திற்கும் இடையிலான விகிதம் 3 : 2 எனின், அகக்கோணியின் மூலைவிட்டங்களின் எண்ணிக்கை யாது?

05. இங்கு 6cm பக்கங்களுடைய சமபக்க முக்கோணி ABC காட்டப்பட்டுள்ளது. இதில் மையம் A ஆகவும் 6cm ஆரையையும் கொண்ட வட்டத்தின் விற்களானது B, C யினூடாக செல்கின்றது. இதேபோன்று C யிலிருந்தும் B யிலிருந்தும் 6cm ஆரையில் வரையப்பட்ட வட்ட விற்கள் முறையே A, B யினூடாகவும், A, C யினூடகவும் முறையே செல்கிறது. R எனும் நிழற்றிய பகுதியானது AB,BC,AC எனும் மூன்று விற்களால் சூழப்பட்டதாகும். எனின் பின்வரு வனவற்றினை கிட்டிய 2ஆம் தசமதானத்துக்கு தருக.




   1) முக்கோணி ABC யின் பரப்பளவு யாது?
   2) நிழற்றிய பகுதி (R) இன் பரப்பு யாது?

## கணிதம் II — 2 மணித்தியாலங்கள்

பகுதி A

ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01. 1) ஒருவர் ரூ. 40.625 ஐ செலவு செய்து "ASL" கம்பனியில் ஒவ்வொன்றும் 18% உடைய ரூ. 10 கொண்ட பங்குகளை வாங்கினார். பங்குகளில் இருந்து அவர் பெற்ற வருட வருமானம் ரூ. 4,500 ஆகும். இவர் ரூ. 10 கொண்ட பங்குகளை வாங்கிய விலையைக் காண்க?

   2) A, B ஆகியோர் மட்டும் போட்டியிடும் ஜனாதிபதி தேர்தலில் பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களில் 40% ஆனோர் வாக்களிக்கவில்லை. அளிக்கப்பட்ட வாக்குகளில் 5/6 ஐப் பெற்ற 164,000 பெரும்பான்மை வாக்குகளால் வெற்றி பெற்றார். வாக்குகள் ஒன்றும் நிராகரிக்கப்படவில்லை எனின்.
      1. மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை யாது?
      2. பதிவு செய்யப்பட்ட மொத்த வாக்காளர்கள் எண்ணிக்கை யாது?
      3. பெற்ற வாக்காளர்களின் எண்ணிக்கை யாது?

02. மாணவர் விடுதியில் வசிக்கும் 120 மாணவர்களின் உணவு விருப்புக்களை அறிவதற்கு சேகரிக்கப்பட்ட தரவு பின்வருமாறு. (அனைவரும் மீன், இறைச்சி, முட்டை என்பவற்றில் எவையேனும் ஒன்றையாவது உண்பர்.)
   1) 1/10 பங்கு மாணவர்கள் மீன், இறைச்சி அல்லது முட்டை ஆகியவற்றில் எதையேனும் உண்பர்.
   2) 22 மாணவர்கள் மீனும் இறைச்சியும் மாத்திரம் உண்பர்.
   3) முட்டையும் இறைச்சியும் மாத்திரம் உண்ணும் மாணவர்களின் எண்ணிக்கை முட்டையும் மீனும் மாத்திரம் உண்ணும் மாணவர்களின் இரு மடங்காகும்.
   4) 1/6 மாணவர்கள் மீனும் முட்டையும் மாத்திரம் உண்பர்.
   5) 9 மாணவர்கள் இறைச்சி மட்டும் உண்பர்.
   6) 1/5 மாணவர்கள் மீன் மட்டும் உண்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய பிரதி சபாநாயகராக சந்திம வீரக்கொடி தெரிவு

கொழும்பு, நவ.24

புதிய பிரதி சபாநாயகராக ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீர கொடி நேற்று முன்தினம் நியமிக்கப்பட்டார்.

இதற்கு முன் பிரதி சபாநாயகராகக் கடமையாற்றிவந்த பிரியங்க ஜயரட்ன அமைச்சராக நியமிக்கப்பட்டமையால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கே சந்திம நியமிக்கப்பட்டார். அமைச்சரும் சபை முதல்வருமான நிமால் சிறிபால டி சில்வா சந்திமவின் பெயரை முன்மொழிந்தார். எதிர்க்கட்சி பிரதம கொறடா ஜோன் அமரதுங்க வழி மொழிந்தார்.

பிரதி சபாநாயகர் பதவிக்கு வேறு எவரினாலும் பெயர்கள் முன்மொழியப் படாததால் சந்திம வீரகொடியை பிரதி சபாநாயகராக நியமிப்பதாக சபாநாயகர் சமல் ராஜபக்ஷ கூறினார். எதிர்க்கட்சியின் சார்பில் சந்திமவுக்கு ஜோன் அமரதுங்க வாழ்த்துகளைத் தெரிவித்தார். அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா அரசின் சார்பில் வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

சந்திம வீரகோடி பக்கசார்பின்றி செயற்படுவார் என்று தாம் உறுதியாக நம்புவதாகவும் நிமால் கூறினார். (சி)

# பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தி மக்கள் மத்தியில் பணப்புழக்கம்

## இது வரவு செலவுத் திட்டத்தின் நோக்கமாம்

வரவு-செலவுத் திட்டத்தில் ஏதாவது ஒன்றைக் கொடுப்பதைவிடவும் பொருளாதார வளர்ச்சியை ஏற்புடுத்தி அதனூடாக மக்கள் மத்தியில் பணப்புழக்கத்தை ஏற்படுத்துவதே இந்த வரவு- செலவுத் திட்டத்தின் ஒரே நோக்கம் என்று அமைச்சர் சரத் அமுனுகம நேற்று முன்தினம் கூறினார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

அரசு மேற்கொள்ளும் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி எதிர்க்கட்சியினர் பேசுவதில்லை. சொற்ப விடயங்களை மாத்திரம் பிடித்துக்கொண்டு அரசை விமர்சிக்கின்றனர்.

வரவு-செலவுத் திட்டத்தில் எதையாவது சொல்வதைவிட பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தி மக்கள் மத்தியில் பணப்புழக்கத்தை ஏற்படுத்துவது நல்லது. அதையே நாம் இந்த வரவு-செலவுத்திட்டத்தின் ஊடாகச் செய்கிறோம்.

வரவு-செலவுத் திட்டத்தின் பற்றாக் குறையை 7 சதவீதத்தைவிடவும் குறைவாக வைத்திருப்போம் என்று எவரும் நினைக்கவில்லை. ஆனால் நாம் அதைச் செய்துள்ளோம்.

பொருளாதார, வளர்ச்சியை 8 சதவீதமாகத் தக்கவைத்துக்கொள்ள நாம் மிகுந்த நம்பிக்கையுடன் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் எதிர்பார்க்கின்றோம்.

தற்போது 2,400 அமெரிக்க டொலராக இருக்கும் தனிநபர் வருமானத்தை இருமடங்காக்குவதே எமது நோக்கம்.

இவற்றின் ஊடாக வறுமையை ஒழித்து இன, பேதமற்ற மனிதாபிமான மிக்க ஒரு நாடாக நாம் இந்த நாட்டை மாற்றுவோம். - என்றார். (சி)

# ஜனாதிபதி மஹிந்தவுக்கு நாடாளுமன்றில் ஆசனம்

கொழும்பு, நவ. 25

நாடாளுமன்றில் இதுவரை காலமும் பிரதமிழருக்காக ஒதுக்கப்பட்டிருந்த முன் வரிசை ஆசனத்தை நேற்று செவ்வாய்க்கிழமை அமுலுக்கு வரும் வகையில் ஜனாதிபதிக்கென ஒதுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி நேற்றுமுன்தினம் முழுவதும் அந்த ஆசனம் வெறுமையாக இருந்தது. அந்த ஆசனத்திற்கு இடப்பக்கமாக அமைந்துள்ள ஆசனத்தில் பிரதமர் அமர்ந்திருந்தார்.

அண்மையில் நிறைவேற்றப்பட்ட அரசமைப்பின் 18 ஆவது திருத்தத்துக்கு அமைவாக ஜனாதிபதி எந்நேரமும் நாடாளுமன்றத்துக்கு வந்து நாடாளுமன்ற விவாதத்தில் கலந்துகொள்ள முடியும்.

அதற்காகவே இவ்வாறு ஜனாதிபதிக்காக ஆசனத்தை ஒதுக்கி வைக்க நாடாளுமன்றம் தீர்மானித்தது என்று நாடாளுமன்ற அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நாடாளுமன்ற நிலையியல் கட்டளையை மாற்றாது இவ்வாறு ஜனாதிபதிக்கு ஆசனத்தை ஒதுக்கமுடியும் - என்றும் அந்த அதிகாரி கூறினார். (சி)

# கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ. 25

நலிவுற்ற மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக யாழ்.எயிட் நிறுவனம் மேற் கொண்டு வரும் திட்டத்தின் கீழ் குட்யப்புலம் அ.த.க. படசாலையில் கல்வி கற்றும் நலிவுற்ற மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் மற்றும் காலணிகளும் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு வழங்கப்படவுள்ளன. பாடசாலை அதிபர் எஸ்.கந்தசாமி தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ் வில் தெல்லிப்பழைக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.கைலாசநாதன் பிரதம விருந்தினராகவும். மத்திய வங்கியின் வட மாகாண முகாமையாளர் எல்.சிறிதரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (ம-311)

03. 1) சார்பு $y = x^2 + x - 2$ இன் வரைபை வரைவதற்கு ஏற்ற y இனதும், x இனதும் பெறுமானங்களைக் கொண்ட பூரணமற்ற அட்டவணை கீழே காணப்படுகிறது.

| x | -4 | -3 | -2 | -1 | 0 | 1 | 2 | 3 |
|---|---|---|---|---|---|---|---|---|
| y | 10 | 4 | | -2 | | 0 | 4 | 10 |

1. இவ் அட்டவணையை உங்கள் விடைத்தாளில் பிரதிசெய்து அதிலுள்ள வெற்றிடங்களை நிரப்புக.
2. வரைபுத்தாளில் x அச்சு குறிக்க 10 சிறு பிரிவுகளையும், y அச்சு வழியே இரு அலகுகளைக் குறிப்பதற்கு 10 சிறு பிரிவுகளையும் கொண்ட அளவிடையைத் தெரிந்து சார்பின் வரைபை வரைக?

2) உங்கள் வரைபைப் பயன்படுத்தி,
1. சார்பின் இழிவுப் பெறுமானம் யாது?
2. சார்பு மறையாக (Negatively) இருக்கும் x இன் பெறுமானவீச்சை எழுதுக?
3. $x^2 + x - 1 = 0$ எனும் சமன்பாட்டின் மூலங்களை அதே வரைபுத்தாளில் தக்க ஏகபரிமாண வரைபு வரைந்து காண்க?


04. cm / mm அளவிடையைக் கொண்ட ஒரு நேர்விளிம்பு, ஒரு கவராயம் ஆகியவற்றை மாத்திரம் பயன்படுத்தி அமைப்புக் கோடுகளை தெளிவாகக் காட்டி
1) AB = 6cm, BC = 8cm, CA = 7cm ஆக அமையும் வண்ணம் முக்கோணி ABC எனும் முக்கோணியை அமைக்குக.
2) BD = 4.4cm ஆகும் வண்ணம் BC இல் D எனும் புள்ளியைக் குறிக்குக.
3) DE = EA ஆகவும் AD இல் B அமைந்துள்ள பக்கத்தில் E அமையும் படியும் ABD எனும் முக்கோணியின் பரப்பளவுக்குச் சமனான AD இல் ADE எனும் முக்கோணியினை அமைக்குக. (குறிப்பு :- எல்லை அமைக்கும் கோடு தெளிவாக காட்டப்படல் வேண்டும்)
4) வரையப்பட்ட முக்கோணி ADE இன் உச்சிகளைத் தொடுமாறு செல்லும் வட்டத்தினை வரைக.
5) அதன் ஆரையை அளந்து எழுதுக.
6) நீர் வரைந்த உருவத்தின் முக்கோணி ABC இற்கு சமனான பரப்பு கொண்ட நாற்பக்கல் எது என்பதை இனங்கண்டு எழுதுக.

05. 1) காரணிப்படுத்துக. $a^3 - 9a$

2) தீர்க்குக.
$$3a + c = 4$$
$$3a - c = 8$$
$$2a - 5b + 4c = 9$$

3) தந்தையின் வயது மகனின் வயதின் மூன்று மடங்கிலும் 3 வருடங்கள் கூடவாகும். மகனின் வயதை x என வைத்து தந்தையின் வயதை x சார்பாகத் தருக. தந்தையினதும் மகனினதும் வயதுகளின் பெருக்கம் 720 எனின், x இலான இருபடிச் சமன்பாடொன்றை ஆக்குக. இச்சமன்பாட்டை தீர்ப்பதன் மூலம் தந்தையினது வயதைக் காண்க.

06. பெட்டி ஒன்றில் ஒரே அளவான 3 சிவப்பு மணிகளும், 2 நீல மணிகளும், ஒரு பச்சை மணியும் உள்ளன, எழுமாற்றாக ஒரு மணி வெளியே எடுக்கப்பட்டு, அதன் நிறம் அவதானிக்கப்பட்ட பின் அது மீண்டும் உள்ளே இடப்பட்டு மேலும் ஒரு மணி வெளியே எடுக்கப்பட்டது. இந்நிகழ்வுகளின் பேறுகள் மாதிரி இங்கு காட்டப்பட்டுள்ளது.




1) இங்கு A இனால் குறித்துக் காட்டப்பட்டுள்ள முடிவுகள் எவ்வகையாகும்?
2) இரு தடவைகளிலும் ஒரே நிறமான மணிகளை எடுப்பதற்கான நிகழ்தகவு யாது?
3) ஒன்று சிவப்பு மணியாகவும், மற்றையது வேறு நிறமானதாகவும் இருப்பதற்கான நிகழ்தகவு யாது?
4) எடுக்கப்பட்டவற்றுள் ஒன்றாயினும் வெள்ளை நிறமானதாக இருப்பதற்கான நிகழ்தகவு யாது?

## பகுதி B

ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

07. 1) ஒரு சிறுவன் தினமும் 10, 15, 20 ..... ஆகுமாறு தினமும் ஓர் உண்டியலில் இட்டு வருகிறான். (சீரானமுறையில்) அவன் தனது சேமிப்பை 10 ரூபாவில் இருந்து ஆரம்பிக்கிறான்.
1. இச் சிறுவனது சேமிப்பு எவ்வகை விருத்தியாகும்?
2. 30 ஆம் நாள் இச்சிறுவன் உண்டியலில் இடும் பணம் எவ்வளவு?
3. 30 நாட்களில் அவ் மாணவன் சேமித்த பணத்தைக் காண்க?
4. அவ் மாணவன் 450 ரூபாவை சேமிக்க எத்தனை நாட்கள் தேவை?


2) ஒரு பெருக்கல் விருத்தியின் மூன்றாம் உறுப்பு 20, 5ஆம் உறுப்பு 80 ஆகும்
1. பொது விகிதம் யாது?
2. முதலாம் உறுப்பு யாது?
3. முதல் 10 உறுப்புக்களின் கூட்டுத்தொகை யாது?

08. 1) முக்கோணி ஒன்றினுடைய ஒரு பக்கத்தின் நடுப்புள்ளிக்கு ஊடாக இன்னுமொரு பக்கத்திற்குச் சமாந்திரமாக வரையப்படும் கோடு மூன்றாம் பக்கத்தை இருசமகூறிடும் என நிறுவுக.

2) உருவில் PQR ஓர் இரு சமபக்க முக்கோணி. அதில் PQ=PR=QR இன் நடுப்புள்ளி M ஆகும். MQ=RS ஆகுமாறு PR ஐ S வரை நீட்டப்பட்டுள்ளது MN,QR இற்குச் சமாந்தரமாக வரையப்பட்டுள்ளது. QR உம், MS உம் Z இல் இடைவெட்டுகின்றது எனின், பின் வருவனவற்றை நிறுவுக?

PQ = NR　　MZ = ZS

2RZ = 1/4 QR





09. ஒரு குறித்த தொகையான மாணவர்கள் ஒக்டோபர் மாதத்தில் கணினி கற்பதில் செலவளிக்கும் மணித்தியால எண்ணிக்கை பின்வரும் அட்டவணை காட்டுகிறது.


| மணித்தியால எண்ணிக்கை | 1-9 | 10-18 | 19-27 | 28-36 | 37-45 | 46-54 | 55-63 | 64-72 |
|---|---|---|---|---|---|---|---|---|
| மாணவர் எண்ணிக்கை | 4 | 8 | 5 | 12 | 24 | 13 | 5 | 10 |

1) இப்பரம்பலின் ஆகாரவகுப்பு யாது?
2) ஆகாரவகுப்பின் நடுப்பெறுமானத்தை உத்தேச இடை எனக் கொண்டு மாணவன் ஒருவன் கணினி கற்றலில் செலவழிக்கும் மணித்தியால எண்ணிக்கையின் இடையத்தைக் காண்க.
3) எழுமாறாக மாணவன் ஒருவன் தெரியப்பட்டால் கணனி கற்பதில் அவன் நாளொன்றிற்கு சராசரி ஒரு மணித்தியாலத்திற்கு மேல் செலவழிக்கக்கூடிய நிகழ்தகவு என்ன?

10. புறத்தேயுள்ள புள்ளி ஒன்றில் இருந்து ஒரு வட்டத்திற்கு இரு தொடலிகள் வரையப்படலாம்.
1) அவை நீளங்களில் சமனானவை எனவும்,
2) புறத்தே உள்ள புள்ளியின் வட்டத்தின் மையத்தையும் இணைக்கும் கோடு தொடலிகளுக் கிடையேயுள்ள கோணத்தை இரு சமகூறிடும் எனவும் நிறுவுக.





11. 1) 12cm நீளமுள்ள சதுர அடியைக் கொண்ட செங்கூம்பகத்தின் உயரம் 8cm ஆகும்.





1. முக்கோண முகமொன்றின் செங்குத்து உயரத்தைக் காண்க.
2. இதன் மொத்த மேற்பரப்பளவு யாது?

2) 25cm ஆரையுடைய ஒரு பந்தானது அதன் உச்சி ஒரு குளத்தின் ஒப்பமான மேற்பரப்பிலிருந்து 1cm உயரத்திலிருக்குமாறு மிதக்கின்றது.



1. பந்து நிலமட்டத்தை தொட்டுக் கொண்டிருக்கும் பகுதியால உணடாககபபடும வட்டத்தின் ஆரை எவ்வளவு?
2. முழுமேற்பரப்பளவின் எப்பின்னம் அமிழ்ந்துள்ளது?
3. அமிழ்ந்துள்ள பகுதியின் மேற்பரப்பளவைக் காண்க.

12. A, B, C, D ஒரு தளத்தில் அமையுமாறும் B, C, D ஆகிய புள்ளிகள் 20° ஏற்றக் கோணத்தில் நேர்கோட்டில் அமையும் புள்ளிகளாகவும் உள்ளன. A இலிருந்து C இன் ஏற்றக் கோணம் 12° உம், D இன் ஏற்றக் கோணம் 17° உம் ஆகும். CD = 124cm A யும் B யும் தரைமட்டத்திலுள்ள புள்ளிகள். பின்வருவனவற்றைக் காண்க.
1) ADB
2) ACB
3) D இலிருந்து AC இற்கான செங்குத்துத் தூரம் DM.
4) AD இன் நீளம்.
5) தரைமட்டத்திலிருந்து இன் உயரம்.




(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பின்னந் தலையில் பலமாக அடி விழுந்ததால் ஹந்துன்நெத்திக்கு மூளை குழம்பிவிட்டது?"

ஐந்து வீத சம்பள உயர்வை வழங்கி எட்டுவீதம் மின்சாரக் கட்டணத்தை அதிகரித்து வறிய மக்களின் வயிற்றில் அடித்து விட்டது மஹிந்த ராஜபக்ஷ அரசு என்று சாடினார் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினரான ரவி கருணாநாயக்க.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது இரண்டாவது ஆறாண்டு நிறைவேற்று ஜனாதிபதிப் பதவியை ஏற்றுக்கொண்டபின் சமர்ப்பித்த முதலாவது பட்ஜெட் மீதான விவாதத்தை ஆரம்பித்துப் பேசும்போதே ரவிகருணாநாயக்க மேற்கண்டாவறு விமர்சித்தார்.

நாடாளுமன்றம் வழமைபோல் நேற்று முன்தினம் துங்சிகாலை சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கூடியது.

இதுவரை காலமும் பிரதி சபாநாயகராக இருந்த பிரியங்கர ஜயரட்ண நேற்றுமுன்தினம் அமைச்சராகப் பதவியேற்றதைத் தொடர்ந்து புதிய பிரதி சபாநாயகராக இளம் சட்டத்தணியான சந்திமா வீரக்கொடி ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

ஆளும் தரப்பில் சபை முதல்வர் நிமல் சிறிபால டி சில்வா சந்திமா வீரக்கொடியின் பெயரை முன்மொழிய எதிர்க்கட்சி பிரதம கொரடாவான ஜோன் அமரதுங்க அதனை வழிமொழிந்தார்.

### ஜோன் வேண்டுகோள்

இதன்போது ஜோன் அமரதுங்க ஒரு வேண்டுகோளையும் முன்வைத்தார். பாரம்பரியமாக நாடாளுமன்ற வரலாற்றில் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் நாடாளுமன்ற முக்கிய பதவிகளில் சில வழங்கப்படுவது வழக்கம். இதனைக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும் நேற்று முன்தினம் தெரிவித்தோம்.

பிரதி சபாநாயகர், குழுக்களின் பிரதித் தலைவர் போன்ற பதவிகளையே நான் குறிப்பிடுகின்றேன் - என்று ஜோன் அமரதுங்க சூட்சகமாகக் கூறினார்.

### ஆளுந்தரப்பு ஆட்சேபம்

இதனை ஆளும்தரப்பு உறுப்பினர்கள் ஒட்டுமொத்தமாக ஆட்சேபித்துக் கோஷமிட்டனர். சபையில் ஒரே சத்தம். சபாநாயகர் சிரமப்பட்டு சபையில் அமைதியை ஏற்படுத்தினார்.

தொடர்ந்து தனது உரையைத் தொடர்ந்த ஜோன் அமரதுங்க "ஐயா இவர்கள் எப்போதும் இப்படித்தான் எதையும் கேட்டுப்பேசமாட்டார்கள். அரை வேக்காடுகள். நான் பதவிகளைக் கேட்கவில்லை. வழமையான சம்பவத்தைத்தான் நினைவு படுத்தினேன்.

இதைக்கூட இவர்களால் புரிந்துகொள்ள முடியாவிட்டால் நான் என்ன செய்யமுடியும். என்றாலும் பிரதி சபாநாயகராக முன்மொழியப்பட்ட சந்திமா வீரக் கொடியின் பெயரை நான் வழிமொழிகின்றேன் எனக்கூறினார் ஜோன் அமரதுங்க.

இதனைத் தொடர்ந்து விமல் வீரவன்ஸ ஒழுங்குப் பிரச்சினை, ஒழுங்குப் பிரச்சினை என்று குரல் எழுப்பினார். என்றாலும் இதற்கிடையில் ஜோன் அமரதுங்க தனது உரையை முடித்துக்கொண்டு அமர்ந்தார்.

எனினும் எல்லாம் முடிந்த பின் அமைச்சர் விமல் வீரவன்ஸவின் ஒழுங்குப் பிரச்சினை என்ன என்று கேட்டார்சபாநாயகர்.

"ஐயா கௌரவ ஜோன் அமரதுங்க, நாடாளுமன்ற உயர் பதவிகளில் ஒன்று எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு வழங்கப்படவேண்டும் என்கிறார். அதன்படி நாடாளுமன்றத்தில் மூன்றாது பெரிய பதவியான எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வழங்கியுள்ளோம்'' என்றார் விமல் வீரவன்ஸ. சபையில் சிரிப்பொலி அதிகரித்தது.

இதில் ஏதும் ஒழங்குப்பிரச்சினை இல்லையே என்றார் சபாநாயகர்.

இந்த வேளையில் சபையில் கேலிப் பேச்சுகளுக்கும் குறைவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரான தயாசிறி ஜயசேகர கிழக்கு மாகாண பாதை அபிவிருத்தி தொடர்பாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார். வினாக்களுக்கு விடைய ளித்துக் கொண்டிருந்த அமைச்சர் தினேஷ் குணவர்த்தன இக் கேள்விக்குப் பதில் அளிக்க இரண்டு வாரகால அவசாசம் கேட்டார்.

## சபையில் கேட்டவை

### தயாசிறி ஜயசேகராவின் கிண்டல்

அப்போது அமைச்சரின் ஒலிவாங்கி வளைந்து காணப்பட்டது. இதனை அவதானித்த தயாசிறி ஜயசேகர கௌரவ அமைச்சர் அவர்களே நீங்கள் கால அவகாசம் கேட்டால் பாதகம் இல்லை. நீங்களும் வளைந்து உங்கள் மைக்கும் வளைந்து போய்விட்டதே. எல்லாம் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை பறிப்பால் ஏற்பட்ட மாற்றமோ என்று கூறிவிட்டு என்ன செய் வது வயதாகிவிட்டதல்லவா என்றார் தயாசிறி.

நீங்கள் வயதாவதைப் பற்றி இங்கே கூறக்கூடாது. எதிர்க் கட்சித் தலைவருக்கும் எனக்கும் ஒரே வயதுதான் என்று அமைச்சர் தினேஷ் கூற சபையில் கலகலப்பு ஏற்பட்டது.

### புஸ்வாண பட்ஜட்

எதிர்க் கட்சிகளின் சார்பில் விவாதத்தை ஆரம்பித்த ரவி கருணாநாயக்க ஜனாதிபதியின் வரவு - செலவுத் திட்டம் ஒரு புஸ்வாணம். யுத்தம் முடிந்த நிலையில் மக்கள் பெரிதும் எதிர்பார்ப்புடன் இருந்தனர். ஆனால் பெரும் ஏமாற்றமாகி விட்டது.

வெளிநாட்டு உல்லாசப் பயணிகளை குஷிப்படுத்துவதற்காக களியாட்டக்கிளப்புகளுக்கு, சூதாட்டத்திற்கும் சட்டரீதியாக அங்கீகாரம் வழங்கியுள்ள அரசு. வறுமையில் வாடும் மக்களுக்கு எந்த விமோசனமும் வழங்கவில்லை.

தேர்தலின்முன் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றவில்லை. அமைச்சரிகளின் எண்ணிக்கை 25 இற்கு மட்டுப்படுத்தப்படும் என்றனர். ஆனால் இப்போது 90 ஐயும் தாண்டிவிட்டது. இது நாட்டையோ, நாட்டு மக்களையோ அபிவிருத்தி செய்யும் பட்ஜெட் இல்லை. தனி நபர்களையும், குடும்பத்தையும் அபிவிருத்தி செய்வதற்கான பட்ஜெட் என்று விவரித்து தனது பேச்சை முடித்துக் கொண்டார் ரவி கருணாநாயக்க.

### அரச ஊழியர்களுக்கு ஏமாற்றம்

விவாதத்தில் சர்ச்சையையும் சூட்டையும் கிளப்பியது ஜே.வி.பி. உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தியின் பேச்சு.

அரச ஊழியர்களையும் ஓய்வூதியம் பெறுபவர்களையும் பட்ஜெட் பெரிதாக ஏமாற்றி விடடது. ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள தொகைக்கு ஆறு தேங்காய்களைக் கூட வாங்கமுடியாது.

யுத்தத்தை முடித்துவிட்டோம், நாட்டில் சமாதானம் நிலவுகிறது, அபிவிருத்திதான் எங்கள் நோக்கம் என்று கூறும் அரசு, பாதுகாப்புக்கு பட்ஜெட்டில் நான்கில் ஒரு பங்கை ஒதுக்கியுள்ளது ஏன் என்று கேள்வி எழுப்பினார் சுனில் ஹந்துன்நெத்தி.

### ஹந்துன்நெத்திக்கு பதிலடி

இவருக்குப் பதில் அளித்தார் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே. "அதாவது சுனில் ஹந்துன்நெத்தி யாழ்ப்பாணம் சென்றபோது தலையில் கடுமையாகத் தாக்கப்பட்டதால் நரம்புகள் மாறிப் பொருத்தப் பட்டுவிட்டன.

அதனால் அவருடைய மூளை குழம்பிப் போய் விட்டது. அதனால்தான் சம்பந்தம் சம்பந்தம் இல்லாததை எல்லாம் இங்கு பேசுகின்றார் எனக் கூறினார் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே.

### அஸ்வர் சொற்சிலம்பம்

நாடாளுமன்றத்தில் தனது மும்மொழிப் பாண்டித்தியத்தை வெளிப்படுத்தும் ஏ.எச்.எம். அஸ்வர் மூன்று மொழிகளிலும் உரையாற்றி சபையை அசரடித்துவிட்டார்.

பட்ஜெட் உரையில் ஜனாதிபதியின் செயற்பாடுகள் தொடர்பாகவும் ஏனைய சகோதரர்களின் செயற்பாடு பற்றியும் பாராட்டினார். அதேவேளை எதிர்க் கட்சியினரையும் சாடத் தவறவில்லை. அவர் உரையாற்றியதைத் தொடர்ந்து குழுக்களின் பிரதித் தலைவர் முருகேசு சந்திரகுமார் அஸ்வர் எம்.பியை சபைக்குத் தலைமை தாங்கும்படி அழைத்தார்.

உதயன் சபைச் செய்தியாளர்:
இரா.புத்திரசிகாமணி

அப்போது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலர் அப்பாடா தொல்லை தீர்ந்தது. தொப்பி தலைமை தாங்கப்போகின்றது என்றனர்.

### தலதாவுக்கு ஆட்சேபம்

இரத்தினபுரி மாவட்ட உறுப்பினரான தலதா அத்துகோரன ஆளும் கட்சியின் பக்கம் பார்த்து தொப்பி தலைமை தாங்கப் போகிறது என்றார்.

நீங்கள் அப்படிச் சொல்லக் கூடாது. தொப்பி என்று கூறாமல் அவரது பெயரைக் குறிப்பிட்டுப் பேசவேண்டும் என்றனர் ஆளும் தரப்பினர். இப்போது அஸ்வர் எம்.பி. தலைமை தாங்க எதிரணி உறுப்பினரான ஹரின் பெர்னாண்டோ உரையாற்ற அழைக்கப் பட்டார்.

### அஸ்வர் ராஜபக்ஷ

ஹரின் பெர்னாண்டோ தனது பேச்சை ஆரம்பிக்கும்போது, "தலைமை தாங்கும் உறுப்பினர் அவர்களே! எனக்கு முன் ஆளும் தரப்பில் இருந்து அஸ்வர் ராஜபக்ஷ'' என்ற ஒரு உறுப்பினர் பேசினார். இப்போது நான் பேச்சை ஆரம்பிக்கின்றேன் என்றே கூறினார். அது தலைமை தாங்கிய அஸ்வருக்கு தர்மசங்கடமான நிலையை ஏற்படுத்திவிட்டது.

நாட்டு மக்கள் பட்ஜெட் தொடர்பாகப் பேசிக் கொண்ட போதிலும் நாடாளுமன்றத்தில் விவாதம் சோபை இழந்தே காணப்பட்டது. சில உறுப்பினர்கள் சென்று நாற்காலிகளைப் பார்த்தே பேசவேண்டியதாக இருந்ததும் குறிப்பிட் டுக் காட்டவேண்டிய ஒன்றாகும்.

ஹரின் பெர்னாண்டோ அவரது பேச்சின்போது, ஜனாதிபதி இராணுவவீரர்களின் குடும்பத்தில் பிறக்கும் மூன்றாவது பிள்ளைக்கு ஒரு லட்சம் ரூபா வழங்கப்போகின்றார்.

இனிமேல் எல்லோரும் சுறு சுறுப்பாகத் தொழிற்பட ஆரம்பித்துவிடுவார்கள் என்று கூறியது தூங்கியிருந்த சபை யைத் தட்டியெழுப்பிவிட்டது.

## முதல்நாள் அமர்வின்போது.....

நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வருகையை எதிர்க்கட்சியினர் திங்கட்கிழமை ஒட்டுமொத்தமாகப் புறக்கணித்தனர். ஜனாதிபதி சபைக்குள் வந்தபோது கண்டும் காணாதது போல் தமது ஆசனங்களிலேயே அமர்ந்திருந்தனர். இதனால் சபையில் சிறிது சலசலப்பு ஏற்பட்டது. ஜனாதிபதியின் பார்வையால் அப்படியே அடங்கிவிட்டது.

நாடாளுமன்றம் பி.ப. 1.30 மணிக்கு வரவு செலவுத் திட்ட விவாதத்திற்காக சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கூடியது.

நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி வரவு - செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்தார். நாடாளுமன்றத்தில் வழமையை விடப் பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

பி.ப. 1.30 மணிக்கு நாடாளுமன்ற அழைப்பு (கோரம்) மணி ஒலிக்கப்பட்டது.

சரியாக 1.37 மணிக்கு பிரதான வாயில்வழியாகப் படைக்கல சேவிதர் செங்கோல் ஏந்திவர சபாநாயர் சமல் ராஜபக்ஷ சம்பிரதாய உடையுடன் சபா பீடத்தில் வந்து அமர்ந்தார்.

ஆளும் கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எழுந்து நின்று கௌரவம் அளித்தனர்.

சபை நிகழ்வுகளில் முதல் கட்டமாக பிரதமர் பட்ஜெட் ஒதுக்கீட்டு சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பை சபையில் முன்மொழிந்தார்.

### ஜனாதிபதி பிரவேசம்

அதனைத் தொடர்ந்து 1.40 மணிக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பட்ஜெட் உரை அடங்கிய கோவையுடன் சபைக்குள் பிரவேசித்தார்.

அப்போது ஆளும் கட்சி உறுப்பினர்கள் எழுந்துநின்று மேசைகளைத் தட்டி தமது மகிழ்ச்சியைத் [illegible]

### எதிர்க்கட்சியின் மௌனம்

எதிர்க்கட்சித் தலைவர ரணில் விக்கிரமசிங்க உட்பட அனைத்து எதிரணி உறுப்பினர்களும் ஜனாதிபதி வந்ததைக் கண்டும் காணாததுபோல் தத் தமது ஆசனங்களில் அமர்ந்திருந்தனர்.

இதனால் வெறுப்படைந்த ஆளும் தரப்பு உறுப்பினர்கள் நாட்டில் தலைவர் ஒருவர் சபைக்கு வரும்போது மரியாதை செய்யக் கூட தெரியாதா என்று சத்தமிட்டனர். இதனை அவதானித்த ஜனாதிபதி இடைநடுவில் நின்று திரும்பிப் பார்த்தார். இதனால் ஆளும் தரப்பினர் 'கப்சிப்'.

வழமைபோல் கொண்டு வரப்படும் பட்ஜெட் இரகசிய கறுப்புப் பெட்டி இம்முறை காணப்படவில்லை. சாதாரண ஒரு பைல் மட்டுமே காணப்பட்டது.

ஜனாதிபதி தனது பட்ஜெட் உரையை 1.40 மணிக்கு ஆரம்பித்தார்.

ஜனாதிபதியின் சகோதரரான சமல் ராஜபக்ஷ சபாநாயகராக இருக்க, ஜனாதிபதி தனது தந்தையின் நாமத்தையும் உச்சரித்து பட்ஜெட் ரகசியங்களை வெளியிட்டார்.

ஜனாதிபதி தனது இரண்டாவது பதவிக்காலத்தில் முதலாவது பட்ஜெட்டை விவரித்த போது ஆளும் தரப்பு உறுப்பினர்கள் அடிக்கடி மேசைகளைத் தட்டி ஆரவாரம் செய்தனர்.

எதிரணியினரோ எதுவுமே நடக்காததுபோல் அமர்ந்திருந்தனர்.

நாடாளுமன்றத்தில் பார்வையாளர்கள் கலரியில் அழைக்கப்பட்ட பிரமுகர்கள் மட்டுமே நிறைந்திருந்தனர். பாதுகாப்புக் காரணங்களுக்காக பொதுமக்கள் எவரும் அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை.

வழமையாகவே நாடாளுமன்றத்திற்கு வரும் ஊடகவியலாளர்களும் அரசதகவல் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டு ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவினரால் பரிசோதனை நடத்தப்பட்டபின்னர் விசேட வாகனங்களில் நாடாளுமன்றத்திற்கு அழைத்துவரப்பட்டனர்.

ஜனாதிபதி இரண்டாவது பதவிக் காலத்தை ஆரம்பித்த வேளையில் அமைச்சரவையிலும் விஸ்தரிப்பு மேற்கொள்ளப் பட்டிருந்தது. இதனால் புதிய அமைச்சர்களும் பெருமிதத்துடன் சபையில் காணப்பட்டனர்.

இந்த அமைச்சரவை மாற்றத்தால் சபையில் அமைச்சர்களினதும் உறுப்பினர்களினதும் ஆசனங்களில் மாற்றம் செய்யப் பட்டது.

ஸ்ரீ.ல.மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம் அமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டதால் அவருக்கு முன்வரிசையில் ஆசனம் ஒதுக்கப்பட்டிருந்தது.

ஹெல உறுமய உறுப்பினரான வண. அத்துரேலிய ரத்தின தேரருக்கும் அமைச்சர் விமல் வீரவன்ஸவுக்கும் இடையிலேயே அமைச்சர் ரவூப் ஹக்கீம் அமர்ந்திருந்தார்.

### ஹக்கீமுடன் ரிஷாத் வலியப் பேச்சு

வழமையாகவே ஏட்டிக்குப் போட்டியாக இருந்த அமைச்சர் ரிஷாத் பதியுதீன் ரவூப் ஹக்கீமிடம் வந்து புன்சிப்புடன் பேசிக் கொண்டிருந்ததையும் காணமுடிந்தது.

ஆரம்பம் முதல் 'உம்' என்றிருந்த எதிரணி உறுப்பினர்கள் கடைசிக் கட்டத்தில் வாய் திறந்தனர்.

மின்கட்டணம், சிகரெட், மதுபானவரி அதிகரிப்புத் தொடர்பாக ஜனாதிபதி விவரித்த போது எதிர்க்கட்சியினர் ஏதோ கேட்க, இப்பொழுது கேட்பதற்கு கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கும், கவலைப்படாதீர்கள், எல்லாம் போகப் போகச் சரியாகிவிடும் என்றார் ஜனாதிபதி.

பட்ஜெட் உரையைத்தொடர்ந்து ஜனாதிபதி மஹிந்த அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் விருந்தினர்களுக்குத் தேநீர் விருந்தளித்தார்.

சபைக்குள் எதிரும் புதிருமாக இருந்த அந்த உறுப்பினர்கள் தேனீர் விருந்தின்போது வாய் விட்டுப் பேசிச் சிரித்துக் கொண்டமை விருந்தினர்களையும் வியப்பில் ஆழ்த்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்போடியாவில் நெரிசலில் சிக்கிப் பலியானோர் எண்ணிக்கை 378 ஆக உயர்வு; 755 பேர் காயம்

## இறந்தவர்களுக்காக இன்று துக்க தினம் அனுஷ்டிப்பு

நாம்பென் (கம்போடியா),நவ.25

கம்போடிய தலைநகர் நாம் பென்னில் திங்கட்கிழமை நடைபெற்ற நீர்த்திருவிழா நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 378 ஆக அதிகரித்துள்ளது. உயிரிழந்தவர்களில் 240 பேர் பெண்கள். இச்சம்பவத்தில் 755 பேர் காயமடைந்துள்ளனர்.



இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக இன்று தேசிய துக்கதினம் அனுசரிக்கப்படுகிறது. இது மிகப் பெரிய தேச துயரம் என்று பிரதமர் குறிப்பிட்டுள்ளார். இந்தச் சம்பவம் குறித்து விரிவான விசாரணை நடத்தவும் அவர் உத்தர விட்டுள்ளார்.

1970ஆம் ஆண்டு சர்வாதிகாரி குமெர் ரூஜ் ஆட்சியின்போதுதான் மிக அதிக எண்ணிக்கையிலான மக் கள் உயிரிழந்தனர். அதற்குப் பின்னர் இந்த அளவுக்கு மக்கள் உயிரிழந்த சோக சம்பவம் இதுவே என்றும் ஹூன் சென் குறிப்பிட்டுள்ளார்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கு 1,250 அமெரிக்க டொலர் அளிக்கப்படும் என்றும், காயமடைந்தவர்களுக்கு 250 டொலர் அளிக்கப்படும் என்றும் பிரதமர் அறிவித்துள்ளார்.

கடந்த 40 ஆண்டுகளில் நிகழ்ந்த மிக மோசமான துயரச் சம்பவம் இதுவாகும். நாம்பென்னில் உள்ள ஆற்றில், மழைப் பருவம் முடிந்ததைக் கொண்டாட பெருவாரியான மக்கள் திரண்டனர். இதில் ஏற்பட்ட தள்ளு முள்ளுவில் பலர் நீரில் மூழ்கியும், பெரும்பாலோர் நெரிசலில் சிக்கியும் இறந்தனர்.

மூன்று நாள்கள் திருவிழாவின் இறுதி நாளான திங்களன்று இங்குள்ள டைமண்ட் தீவுக்குச் செல்ல மக்கள் முயன்றனர். அத்தீவில்தான் இசை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தீவிற்குச் செல்வதற்கான பாலத்தில் மக்கள் கூட்டமாக ஏறி கடக்க முற்பட்டனர்.

தீவில் கூட்டம் அதிகமானதால் அங்கிருந்து மறு பகுதிக்கு வர மக்கள் முற்பட்டபோது நெரிசல் ஏற்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக நாட்டு மக்களுக்கு மூன்று முறை தொலைக் காட்சியில் பிரதமர் ஹூன் சென் உரை நிகழ்த்தியுள்ளார்.

ஆற்றின் பெரும்பாலான பகுதிகள் முழுவதும் சடலங்கள் மிதந்தன. உயிரிழந்தவர்களின் காலணிகள் ஆங்காங்கே ஆற்றில் மிதந்து வந்ததாக சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

பாலம் முழுவதும் சடலங்கள் காணப்பட்டன. மேலும் உயிரிழந்தவர்களின் சடலங்களை மீட்கும் பணியில் மீட்புப் பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

தலைநகரிலுள்ள கால்மெட் வைத்தியசாலையில் காய மடைந்தவர்கள் பெருமளவில் குவிந்தனர். காயமடைந்தவர்களில் பெரும்பாலோரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

ஆண்டுதோறும் மூன்று நாள்கள் நடைபெறும் இந்தத் தண்ணீர் திருவிழாவில் பங்கேற்க 40 இலட்சம் மக்கள் திரள்வார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. இந்நிகழ்ச்சியின் முக்கிய அம்சமாக படகு போட்டி நடைபெறும். இதில் கடைசி கட்டப் படகுப் போட்டி திங்கட்கிழமை மாலை நடைபெற்றது.

இச்சம்பவத்தில் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் எவரும் உயிரிழந்தனரா என்ற விவரம் தெரியவில்லை.

## குறைந்து வரும் ஒபாமாவின் செல்வாக்கு

வாஷிங்டன், நவ. 25

அமெரிக்காவில் சமீபத்தில் இடைத் தேர்தல் நடந்தது. இதில் ஆளும் ஜனாதிபதி ஒபாமாவின் ஜனநாயக கட்சி தோல்வியடைந்தது.

இதைத் தொடர்ந்து கடந்த 8ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை ஜனாதிபதி ஒபாமாவின் செல்வாக்கு குறித்து மக்களிடையே கருத்து வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதில், 'வாஷிங்டன் ரைம்ஸ்' பத்திரிகை நடத்திய வாக்கெடுப்பில் ஒபாமாவுக்கு எதிராக 49 சதவீதம் பேர் வாக்களித்தனர். அவர்கள் எதிர்வரும் 2012ஆம் ஆண்டு மீண்டும் அவர் ஜனாதிபதியாகக் கூடாது எனத் தெரிவித்துள்ளனர். 41 சதவீதம் பேர் மட்டுமே அவர் மீண்டும் ஜனாதிபதியாக ஆதரவளித்துள்ளனர்.

அதேபோல குன்னிபியாக் பல்கலைக்கழகத்தின் தேர்தல் பிரிவு மாணவர்கள் நாடு முழுவதும் தொலைபேசி மூலம் கருத்து வாக்கெடுப்பு நடத்தினர். 2, 424 பேரிடம் நடத்திய வாக்கெடுப்பிலும் இதே கருத்துதான் நிலவியது.

இதன் மூலம் ஜனாதிபதி ஒபாமாவின் செல்வாக்கு குறைந்துள்ளமை தெரிய வந்துள்ளது. இதற்கிடையே எதிர்க்கட்சியான குடியரசு கட்சியைச் சேர்ந்த மிட் ரோம்னி, மிக் ஹீகாய ஆகியோர் ஒபாமாவுக்குப் போட்டியாகத் திகழ்கின்றனர்.

உலக அரங்கில்

# வட கொரியா–தென் கொரியா இடையே பீரங்கிச் சண்டை; இரு சிப்பாய்கள் பலி

சியோல், நவ. 25

வட கொரியா - தென் கொரியா ஆகிய இரு நாடுகளுக்கிடையே செவ்வாய்க்கிழமை கடும் மோதல் வெடித்தது. இரு நாடுகளும் மாறி மாறிப் பீரங்கித் தாக்குதலை நடத்தின. இதையடுத்து இரு நாடுகளின் எல்லைப் பகுதியில் பதற்றம் நிலவுகிறது. வட கொரியா - தென் கொரியா ஆகிய இரு நாடுகளுக்கிடையே பிரச்சினைக்குரிய பகுதிக்கு அருகில் யோன்பி யோங் தீவு உள்ளது.

இந்தத் தீவு தென் கொரியாவுக்கு சொந்தமானது. இந்தத் தீவில் சுமார் 1,000 பேர் வசித்து வருகின்றனர். தென் கொரியா இங்கு இராணுவத் தளத்தை அமைத்துள்ளது.

தென் கொரியாவுக்கு இராணுவ ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் தீவின் மீது வட கொரியா செவ்வாய்க்கிழமை மதியம் திடீரெனப் பீரங்கித் தாக்குதல் நடத்தியது.

இந்தச் சண்டை சுமார் ஒரு மணி நேரம் நீடித்தது. இதில் தென் கொரியாவைச் சேர்ந்த இரு சிப்பாய்கள் உயிரிழந்தனர். 3 பேர் பலத்த காயமடைந்தனர். 10 பேர் சிறு காயங்களுக்கு உள்ளாகினர்.

தாக்குதலில் யோன்பியோங் தீவில் சில வீடுகள் இடிந்து விழுந்ததுடன், தீப்பற்றி எரிந்தன என்றும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் தாக்குதலை வட கொரியா தான் முதலில் நடத்தியது என தென் கொரியா தெரிவித்துள்ளது. ஆனால், வட கொரியாவோ தென் கொரியாதான் முதலில் தாக்குதல் நடத்தியதாகக் கூறியுள்ளது.



தென் கொரியா, வடகொரியா இடையே போர் மேகம் சூழ்ந்துள்ளது. இரு நாடுகளும் பீரங்கி குண்டுகளை வீசித் தாக்குதலில் ஈடுபட்டன. இதையடுத்து, தென்கொரிய ஜனாதிபதி லீமையோங், இராணுவ அமைச்சர் கிம்டியோயோங், இராணுவ உயரதிகாரிகள் ஆகியோருடன் ஆலோசனை நடத்த வருகிறார்.

# பிரிட்டிஷ் இளவரசர் வில்லியமுக்கு ஏப்ரல் 29ஆம் திகதி திருமணம்



லண்டன், நவ. 25

பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸ் - டயானா தம்பதியின் மூத்த புதல்வர் இளவரசர் வில்லியம் (வயது - 28). இவர் நீண்ட நாள்களாக கேத் எட்டில்டன் (வயது - 28) என்ற பெண்ணை காதலித்து வருகிறார்.

இவர்களின் திருமணம் கடந்த வாரம் என அறிவிக்கப்பட்டது. ஆனால், திகதி அறி விக்கப்படாமல் இருந்தது.

இந்த நிலையில் இவர்களது திருமணம் அடுத்த ஆண்டு (2011) ஏப்ரல் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும் எனச் செவ்வாய்க்கிழமை அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பை இளவரசர் வில்லியமின் தனிச் செயலாளர் ஜாமி லோதர்-பிங்கர்டன் தெரிவித்துள்ளார்.

இவர்களின் திருமணம் மத்திய லண்டனிலுள்ள வெஸ்ட் மின்ஸ்டர் அப்பே கிறிஸ்தவ தேவாலயத்தில் நடைபெறும். இது சுமார் 1000 ஆண்டுகள் பழைமை வாய்ந்தது. இங்குதான் தற்போதைய மகாராணி எலிசபெத்தின் திருமணம் 1947 ஆம் ஆண்டு நடந்தது.

மேலும் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நடந்த கார் விபத்தில் மரணமடைந்த இளவரசர் வில்லியமின் தாயார் டயானாவின் இறுதிச்சடங்கும் இங்குதான் நடந்தது.

எனவே, தான் தனது திருமணத்தை இங்கு நடத்த இளவரசர் வில்லியம் முடிவு செய்தார் எனக் கூறப்படுகிறது. திருமணத் திகதி அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அரச குடும்பத்து திருமண விழாவை வரவேற்க பிரிட்டிஷ் மக்கள் ஆர்வத்துடன் இப்போதே தயாராகிவிட்டனர்.

மேலும், திருமண ஏற்பாடுகளும் தீவிரமாக நடைபெறத் தொடங்கிவிட்டன. இதற்கான பணிகளில் அரச குடும்பத்தினர் இப்போதே இறங்கிவிட்டனர்.

# அடுக்குமாடி இடிந்ததில் பாகிஸ்தானில் 13 பெண்கள் உயிரிழப்பு

பெஷாவர், நவ. 25

பாகிஸ்தானின் வடமேற்குப் பகுதியில் கைபர் - பக்துன் காவா மாகாணம் உள்ளது. இங்குள்ள புனேர் மாவட்டம் ஜோர் என்ற மலை கிராமத்திலுள்ள அடுக்குமாடி கட்டிடம் இடிந்தது. இதில் சிக்கி 13 பெண்கள் உயிரிழந்துள்ளனர். 14 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்த அனைவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெறுகின்றனர். இந்த அடுக்குமாடிக் குடியிருப்பின் மேல்தளத்தில் சுமார் 50 பெண்கள் கூடி இருந்தனர்.

ஆனால், அதன் கொங்கிரீட் தளம் மிகவும் பலவீனமாக இருந்ததால் இடிந்து இச்சம்பவம் ஏற்பட்டது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்

1245 நீலம்

மேடம்

21 34 46 52

23-11-2010

ஜக்பொட் பரிசு ரூபா. 5,559,750/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 228,607 | 20/- | 4,572,140/- |
| 2 இலக்கங்கள் | 21,012 | 40/- | 840,480/- |
| 1 இல. + லக்கினம் | 20,808 | 60/- | 1,248,480/- |
| 2 இல. + லக்கினம் | 1,904 | 200/- | 380,800/- |
| 3 இலக்கங்கள் | 561 | 1000/- | 561,000/- |
| 3 இல. + லக்கினம் | 48 | 10,000/- | 480,000/- |
| 4 இலக்கங்கள் | 04 | 200,000/- | 800,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 5,559,750/- | - |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 8,882,900/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 611 | | 604,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 273,555 | | 9,486,900/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 6,070,375/-

## இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்

தனுசு

20 27 33 51

ஜக்பொட் பரிசு ரூபா. 600,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 608 | 500/- | 304,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 600,000/- | - |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 611 | | 604,000/- |

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 700,000/-


# மரண அறிவித்தல்கள்

## திருமதி சிவசோதியம்மா சிதம்பரநாதன்



இடைக்காடு, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சிவசோதியம்மா சிதம்பரநாதன் 22.11.2010 திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் இடைக்காட்டைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - நாகரத்தினம் தம்பதியரின் பாசமிகு மகளும், வளலாய், அச்சுவேலியைச் சேர்ந்த சிதம்பரநாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வைரமுத்து - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகளும் சிவநாதன் (கனடா), தில்லைநாதன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், கஜந்தினி (கனடா), அனுஷியா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியும், சகானாவின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற கதிர்காமசுந்தரலிங்கம் மற்றும் சிவனேஸ்வரி (கனடா), காலஞ்சென்ற (சுந்தரவேல்) மற்றும் சிவபாக்கியவதியம்மா(கனடா), சிவமங்களவதியம்மா (இடைக்காடு), சந்நிதிவேல் (கனடா), சிவமலர் (கனடா), நடராசபதி (கனடா), சிவயோகராணி (கொழும்பு), சிவமனோகரி (கனடா), சிவயோகேஸ்வரி (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற பொன்னம்மா மற்றும் இராசரத்தினம் (கனடா), உதயநாயகி (கனடா), காலஞ்சென்ற துரைசிங்கம், மற்றும் சோதிமுருகேசு (இடைக்காடு), இராஜேஸ்வரி (கனடா), சண்முகபாரதி (கனடா), சிவரஞ்சினி (கனடா), ஸ்ரீதரன் (கொழும்பு), சிவபாலன் (கனடா), கணேசலிங்கம் (கனடா) காலஞ்சென்றவர்களான கதிர்காமநாதன், சன்நிதிநாதன் மற்றும் கந்தசாமி, இராசேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் அன்னலட்சுமி, காலஞ்சென்ற சிதம்பரம் மற்றும் சரோஜினிதேவி, தியாகராஜா (கனடா) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.11.2010) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் சந்நிதிவீதி, வறணன், அச்சுவேலியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி சி.சோதிமுருகேசு (சகோதரி)

*சந்நிதி வீதி, வறணன், அச்சுவேலி.* (106484)

## ஆறுமுகம் இராசம்மா

(நிற்சாமம், சங்கானை.)



சங்கானை, நிற்சாமத்தைப் பிறப்பிடமாகவும், காரைநகர், விக்காவிலை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் இராசம்மா (22.11.2010) திங்கட்கிழமை நிற்சாமத்தில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வன்னியர் - சின்னப்பிள்ளை தம்பதியரின் அருமை மகளும், காலஞ்சென்ற ஆறுமுகத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம், சின்னத்தம்பி, குமரேசு, சிவக்கொழுந்து மற்றும் மகேஸ்வரி, நாகேஸ்வரி, இரத்தினபூபதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் நாகராசா (ஜேர்மனி), புனிதலிங்கம், சந்திரன் (ஜேர்மனி), மகேன் (பிரான்ஸ்), அசோகன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது நிற்சாமம் எனும் முகவரியில் இன்று (25.11.2010) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

*நிற்சாமம், சங்கானை.* (106480)

### குடாநாட்டில் காணாமல் போனவர்களை

# கண்டுபிடித்துத் தர உதவுமாறு பொலிஸ்மா அதிபருக்கு மகஜர்

### தென்னிலங்கை பெண்கள் அமைப்பு வழங்கியது

குடாநாட்டில் காணமற்போனவர்களைக் கண்டுபிடித்துத் தர உதவுமாறு பொலிஸ்மா அதிபரிடம் தென்னிலங்கை சுதந்திரத்திற்கான பெண்கள் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக ஐந்து கோரிக் கைகள் கொண்ட மகஜரை அந்த அமைப்பு பொலிஸ்மா அதிபரிடம் சமர்ப்பித்துள்ளது.

அக்கோரிக்கைகள் வருமாறு:-

* யாழ். மாவட்டத்தில் காணமல் போனோரைக் கண்டுபிடித்துத் தாருங்கள்.
* நலன்புரி முகாம்களில் இருக் கும் பொதுமக்களுக்கு சுகாதார வசதிகள், அடிப்படை வசதிகள் என்பவற்றை ஏற்படுத்திக் கொடுக்கவும்.
* யாழ். மாவட்டத்தில் ஜே. வி.பி. உறுப்பினர் தாக்கப்பட்டமையை வன்மையாகக் கண்டிக்கிறோம். இது போல் தொடர்ந்து வன்முறைச் சம் பவங்கள் தொடராமல் தடுக்கவும்
* அரச உத்தியோகத்தர்களுக்கு சம்பளங்களை உயர்த்தவும்.
* அத்தியாவசியப் பொருள் களின் விலை ஏற்றங்களைக் குறைக்கவும். இந்த ஐந்து கோரிக்கைகளுமே பொலிஸ்மா அதிபருக்கு இந்த அமைப்பு வழங்கியுள்ளது. (ம-313-311)

# ஆலயப் பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், நவ.25

வயாவிளான் தெற்கு, ஞானவைரவர் ஆலயத்தின் நிர்வாக சபைப் பொதுக்கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வாயாவிளான் மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்படவுள்ளதால் பொதுமக்கள் அனைவரையும் கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு ஆலய பரிபாலன சபைத் தலைவர் மு.விநாயகமூர்த்தி தெரிவித்துள்ளார்.

அத்துடன் அன்று காலை 11.30 மணிக்கு வயாவிளான் ஆதி மானம்பிராய் பிள்ளையார் கோயில் பரிபாலனசபையின் பொதுக் கூட்டமும், நிர்வாக சபைத் தெரிவும் இடம்பெறவுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (ற)

# புதையல் தோண்டச் சென்றோர் கிராமவாசிகளிடம் சிக்கினர்

கொழும்பு, நவ.25

மதவாச்சி, உடும்புகலப் பிரதேசத்திலுள்ள வீடொன்றில் இருந்து திடீரெனக் காணாமற்போன சிறுவன் ஒருவனைத் தேடிப் பகல் நேரத்தில் அங்குள்ள காட்டுக்குச் சென்ற கிராமவாசிகளிடம் அங்கு புதையல் தோண்டும் முயற்சியில் ஈடுபட்டிருந்த மூவர் சிக்கினர். மேலும் சிலர் தப்பியோடிவிட்டனர்.

சிறுவனைக் காணாமல் கலவரமடைந்திருந்த அவர்கள் புதையல் திருடர்கள் அவனை நரபலி கொடுத்துவிட்டதாகச் சந்தேகப்பட்டதால் உண்மையை வரவழைக்க அவர்கள் மூவரையும் நையப்புடைத்து மதவாச்சிப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் போது சிறுவனைப் பற்றி தங்களுக்கு எதுவும் தெரியாதென அவர்கள் கூறியுள்ளனர்.

சில மணி நேரத்திற்குப் பின்னர் காட்டில் ஒளிந்திருந்த சிறுவன் தானாகவே கிராமத்துக்கு வந்துசேர்ந்துள்ளான்.

கைதான நபர்கள் மூவரும் அவிசாவளை, கம்பஹா மற்றும் வவுனியாப் பிரதேசவாசிகள் எனவும் வவுனியாவாசி சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் என்றும் தெரியவருகின்றது.

மதவாச்சிப் பொலிஸ் பொறுப்பதிகாரி கிஹான் அதரசூரியவின் தலைமையில் மேலதிக விசாரணைகள் நடைபெறுகின்றன. (ம-5)


**Institute of Certified Management Accountants of Sri Lanka**

ஸ்ரீலங்கா சான்று செய்யப்பட்ட முகாமைக் கணக்காளர் நிறுவனம் 2009ஆம் ஆண்டு 23ஆம் இல பாராளுமன்றச் சட்டமூலத்தினால் கூட்டிணைக்கப்பட்டது.

2 வருடங்களில் நீங்கள் சான்று செய்யப்பட்ட முகாமைக் கணக்காளர் ஆகலாம்.

அடிப்படைத் தகைமை A/L 2 பாடங்களில் சித்தி.

கற்கைநெறி, தொழில்பயிற்சி பற்றிய வழிகாட்டல் கருத்தரங்கு 27ஆம் திகதி காலை 11-1 மணிவரை நடைபெறும்.

இடம்:
இல.140, பலாலி வீதி, திருநெல்வேலி.
(பரமேஸ்வரச் சந்தி பெற்றோல்செட் முன்பாக)

தொடர்பு:
0772479416
0212222478


## தவறிவிட்டன

விவாகப் பதிவு சான்றிதழ் மனோரங்கன் - தனுசா, பிறப் புப்பதிவும் சான்றிதழ் பொன்னம்பலம் - தனுசா, சத்தியமூர்த்தி -மனோரங்கன் என்பன சங்கத்தானைக்கும் அரியாலைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சாவகச்சேரி, பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

# நன்றி நவில்கின்றோம்

எமது பாடசாலையில் மிக அத்தியாவசிய தேவையான மின் இணைப்பைப் பெற்றுத் தந்தமைக்கு யாழ். அரச அதிபர்

**திருமதி இமெல்டா சுகுமார்**

அவர்களுக்கு மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அத்துடன் பாடசாலை முழுவதுக்குமான மின் விநியோகச் சுற்றோட்டத்தைச் செய்து உதவிய திரு. சிவானந்தன் மோகன் உட்பட அவரின் நண்பர்களுக்கும் எமது நன்றிகளை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்.*
யா/ மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம், கொடிகாமம்.

(சி/572540)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் அழைப்பும்

*தோற்றம்* 19 . 03 . 1965



*மறைவு* 05 . 12 . 2009

## ஆறுமுகம் ரவிச்சந்திரன்

திதி: சங்கடஹர சதுர்த்தி


உள்ளத்தால் உயர்வாகி வாழ்விற்கு வழிகாட்டி
இதயத்தில் இருக்கும் எங்கள் அன்புத் தெய்வமே!
தங்களின் ஆத்மசாந்திக்காக நித்தமும்
பிரார்த்திக்கின்றோம்

கடந்த 05.12.2009 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (25.11.2010) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.
T.P- 0776099298

*கல்லூரி வீதி, ஆத்தியடி, பருத்தித்துறை.* (106482)

# கண்ணீர் அஞ்சலி



நுணாவிற்குளம் கண்ணகை அம்மன் தேவஸ்தானத்தின் தர்மகர்த்தாவும், ஆலய பரிபாலன சபை ஆயுட்கால தலைவருமாகிய

## அமரர் செல்லையா குமாரசாமி

அவர்கள் 21.11.2010 அன்று சிவபதமடைந்த செய்தி கேட்டு துயரடைவதோடு, அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நுணாவிற்குளம் கண்ணகை அம்மன் தேவஸ்தான பரிபாலன சபையினர்,
*நுணாவில் சந்தி, சாவகச்சேரி.*

(106486)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சங்கக்கார சதம்; இலங்கை 294/5

## தொடரும் மழையால் நேற்றைய ஆட்டமும் பாதிப்பு



கொழும்பு, நவ. 25

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்டத்தில் தடுமாறிய இலங்கை அணி, அணித்தலைவர் சங்கக்காரவின் சதத்தின் உதவியுடன், நேற்றைய ஆட்டத்தில் சிறப்பானதோர் இலக்கை எட்டியது.

அதேவேளை, நேற்றும் மழை குறுக்கிட்டதால் ஆட்டம் தடைப்பட்டது.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கொழும்பில் ஆரம்பமானது.

இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, மூன்று விக்கெட்டுகள் இழப்புக்கு 84 ஓட்டங்களைச் சேர்த்திருந்தவேளை ஆட்டம் மழையால் தடைப்பட்டது.

சங்கக்கார 25 ஓட்டங்களுடனும் சமர வீர 26 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

நேற்று மீண்டும் தனது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை அணி சிறப்பான ஆட்டத்தை வெளிக்காட்டியது.

நிதானமாக நின்று ஆடிய சமரவீர, அரைச்சதம் (80) அடித்து சிறிது நேரத்தில் ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து வந்த மத்யூஸ் 25 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் ஆட்டமிழந்தார்.

ஒரு முனையில் விக்கெட்டுகள் வீழ்ந்தாலும் மறுமுனையில் சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த சங்கக்கார சதமடித்து அசத்தினார்.

இலங்கை அணி ஐந்து விக்கெட்டுகள் இழப்புக்கு 294 ஓட்டங்களைப் பெற்றவேளை, மழை குறுக்கிட்டது. இதனால் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

சங்கக்கார (135), பிரசன்ன ஜெயவர்த்தன (12) ஆகியோர் களத்தில் இருந்தனர்.

முந்தைய போட்டிபோலவே இந்தப் போட்டியிலும் மழை அடிக்கடி குறுக்கிட்டுக் குழப்புவதால் இந்தப் போட்டியும் சமனிலையில் முடியும் நிலையில் உள்ளது.

இன்று ஆட்டத்தின் மூன்றாம் நாள் ஆகும்.

# அபுதாபி டெஸ்ட் தொடர் சமனிலை

தென்னாபிரிக்கா - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியும் சமனி லையில் முடிந்ததால். டெஸ்ட் தொடரும் சமனி லையை எட்டியது.

தென்னாபிரிக்கா - பாகிஸ்தான் அணிகள் மோதும் இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் அபுதாபியில் நடைபெற்றது. இதன் முதலாவது போட்டி சமனிலையில் முடிந்தது.

இந்நிலையில் இரண்டாவது போட்டி நடைபெற்றது.

இதன் முதல் இன்னிங்ஸிற்காக தென்னாபிரிக்கா 584, ஓட்டங்களையும், பாகிஸ் தான் 434 ஓட்டங்களையும் பெற்றன.

பின்னர், தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி, நேற்று முன்தினம் ஆட்ட நேரம் முடியும்போது 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 173 ஓட்டங்களை பெற்றிருந்தது.

மீண்டும் நேற்றுத் தனது இன்னிங்ஸைத் தொடர்ந்த தென்னாபிரிக்க அணி 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 203 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத் தியது. பின்னர், 354 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கித் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி, நேற்றைய ஆட்ட நேரம் முடியும் போது 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 153 ஓட்டங்களைப் பெற்றது. இதனால் ஆட்டம் சமனிலையை எட்ட, தொட ரும் சமனிலையில் முடிந்தது. ஆட்டநாயகனாக டி வில்லியஸும், தொடர் நாயகனாக ஜக்கலிஸும் தெரிவுசெய்யப்பட்டனர்.

# சீன வீராங்கனைக்கு தங்கம்

குவாங்சு, நவ. 25

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் நடைபெற்ற நடைப் போட்டியில் சீன வீரங்கனையான ஹொங் டயூ தங்கம் வென்றார்.

சீனாவின் குவாங்சு நகரில் ஆசிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றுவருகின்றன.

இதில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 20 கிலோ மீற்றர் வேக நடைப் போட்டியில் சீன வீராங்கனையான ஹொங் டயூ தங்கம் வென்றார்.

# 'ஆஷஸ்' சமர் பிரிஸ்பேர்ணில் இன்று ஆரம்பம்

பிரிஸ்பேர்ண், நவ. 25

ஆஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 'ஆஷஸ்' டெஸ்ட் மோதல் பிரிஸ்பேர்ணில் இன்று ஆரம்பமாகிறது.

ஆஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகளுக்கிடையில் இரு ஆண்டுகளுக்கு ஒருமுறை பாரம்பரியம் மிக்க 5 போட்டிகளைக் கொண்ட 'ஆஷஸ்' (சாம்பல்) டெஸ்ட் தொடர் நடந்து வருகிறது.

இவ்விரு அணிகளும் மோதும் ஆஷஸ் தொடருக்கென்று ஒரு வரலாறே உண்டு.

1882இல் லண்டன் ஓவலில் நடந்த டெஸ்ட் போட்டியை யாரும் மறக்க முடியாது. இதில் அசுர வேகத்தில் பந்துவீசிய ஆஸி. வீரரான பிரட் ஸ்போபர்த் 14 விக்கெட்டுகளை வீழ்த்த, ஆஸ்திரேலிய அணி, இங்கிலாந்தை 7 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது. இதன் மூலம் இங்கிலாந்து மண்ணில் தனது முதல் வெற்றியைப் பதிவு செய்தது.

இது குறித்து லண்டன் 'ஸ்போர்ட்டிங் டைம்ஸ்' பத்திரிகையில் ரெஜினால்ட் ஷார்லி புரூக்ஸ் என்பவர் மிகவும் கேலியாக விமர்சனக் கட்டுரை எழுதினார்.

அதில்,

'1882 ஆம் ஆண்டு 29ஆம் திகதி ஓவல் மைதானத்தில் இங்கிலாந்து அணி மரணமடைந்து விட்டது. இதற்காக ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். அணியின் உடல் எரிக்கப்பட்டு, அதன் சாம்பல் ஆஸ்திரேலியாவுக்கு எடுத்துச் செல்லப் படுகிறது.'' - என கண்ணீர் அஞ்சலி போல குறிப்பிடப்பட்டிருந்தது.

**'ஆஷஸ்' பிறந்தது**

1882-83இல் இங்கிலாந்து அணி, ஆஸ்திரேலியா சென்றது. அப்போது இழந்த சாம்பலை (ஆஷஸ்) இங்கிலாந்து அணி மீட்குமா என்று ஊடகங்களில் கேள்விகள் எழுப்பப்பட்டிருந்தன.

இந்நிலையில், இவோ பிளிக் தலைமையிலான இங்கிலாந்து அணி தொடரை 2-1 என்ற கணக்கில் வென்று பதிலடி கொடுத்தது.

இதையடுத்து மெல்போர்னிலிருந்த சில பெண்கள் சேர்ந்து, மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தின்போது பயன்படுத்திய 'பெயில்ஸை' எரித்து, அதன் சாம்பலை சுமார் 6 அங்குல உயரமுள்ள செம்பழுப்புநிற மண்ணால் செய்யப்பட்ட கலசத்தில் போட்டு அணித்தலைவர் பிளிக்கிடம் கொடுத்தனர்.

எரிக்கப்பட்ட பொருள் குறித்து பல்வேறு செய்திகள் கூறப்படுகிறது.

சிலர், 'பெயில்ஸ்' அல்ல பந்து என்கின்றனர். ஒரு பெண்ணின் முகத்தை மூடியிருந்த துணி எரிக்கப்பட்டு, அதன் சாம்பல்தான் கலசத்தில் உள்ளது என பிளிக்கின் மனைவி குறிப்பிட்டிருந்தார்.

தற்போது லோர்ட்ஜில் உள்ள மெல்போன் கிரிக்கெட் கழகத்தின் அருங்காட்சியகத்தில் கிண்ணம் போன்ற அந்த சிறிய ஆஷஸ் கலசம் பத்திரமாக வைக்கப்பட்டுள்ளது.

இதற்குப் பின்னர் நடந்த இங்கிலாந்து - ஆஸ்திரேலிய அணிகள் மோதும் டெஸ்ட் போட்டிகள் 'ஆஷஸ்' தொடர் என அழைக்கப்பட்டன.

இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை 5 போட்டிகளைக் கொண்ட 'ஆஷஸ்' டெஸ்ட் தொடர் நடத்தப்படுகிறது.

கிரிக்கெட் உலகில், உலகக் கிண்ணத் தொடர் அளவுக்கு அனைவராலும் எதிர்பார்க்கப்படும் தொடராக இது கருதப்படுகிறது. வரலாற்று முக்கியத்துவமிக்க இத்தொடரில் விளையாடுவதை இரு அணி வீரர்களும் பெருமையாகக் கருதுகிறார்கள்.

இதுவரை நடந்துள்ள 301 ஆஷஸ் டெஸ்ட் போட்டிகளில் ஆஸ்திரேலியா 121இல் வென்று ஆதிக்கம் செலுத்துகிறது. இங்கிலாந்து 96இல் வென்றுள்ளது.

கடந்த (2009) டெஸ்டில் இங்கிலாந்து அணி தமது சொந்த மண்ணில் வைத்து ஆஷஸ் தொடரைக் கைப்பற்றியது.

இம்முறை சொந்த மண்ணில் பதிலடி கொடுக்க வேண்டிய கட்டாயத்தில் ஆஸ்திரேலியா களமிறங்குகிறது.

இரு அணி வீரர்களும் இத்தொடருக்காகத் தீவிர பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். அதேவேளை, தமக்கே இந்த முறை கிண்ணம் என ஆஸ்திரேலியர்களும், நாம் கிண்ணத்தைத் தக்கவைப்போம் என இங்கிலாந்துக் காரர்களும் கூறிவருகின்றனர்.

எனவே, இன்று ஆரம்பமாகும் இத் தொடரில், ரசிகர்கள் மீண்டும் ஒரு முறை ஆக்ரோஷமான மோதலை எதிர்பார்க்கலாம்.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சங்கானை நகரிலுள்ள நகைக்கடையில் திருட்டு

சங்கானை நகரில் அமைந்துள்ள நகைக் கடை ஒன்றில் நேற்றிரவு 1½ லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் திருப்பட்டுள்ளன.

கடையின் கூரையைப் பிரித்து உள்ளே நுழைந்த திருடர்கள் அங்கிருந்த நகைகளைத் திருடிச்சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது - பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஓ-10-29)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

### பிரகாசம் அன்ரனி

(அன்ரனி மாஸ்டர் - ஆசிரியர்)



தோற்றம் 11.10.1952

மறைவு 26.10.2010

அன்பும், அறிவும்
ஆழமாய்க் கொண்ட எம்
அன்புத் தெய்வமே!
உம் பிரிவால் நாம் இங்கு,
ஓலமிட்டு அழுகின்றோம்...
நீர் மட்டும் நிம்மதியாய்,
அன்னை மடிதனிலே
ஆறுதலாய்த் துயில்கின்றீர்,
என்றென்றும் உம் பிரிவு
எம்மை விட்டு நீங்காது.
உம் பிரிவால் துயருறும்

உடன் பிறந்தோர்,
மைத்துனர்கள், மைத்துனிகள்,
மருமக்கள், பெறாமக்கள்.

இல. 22, பேக்கரி லேன்,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (106492)

## ஆறாம் மாத நினைவஞ்சலி



### திருமதி இராஜமலர் எட்வின் ஜோசவ்

மண்ணில் 18.05.1946

விண்ணில் 25.05.2010

இல்லத்தின் இல்லத்தில் எங்கும்
இருள் நீக்கும் ஒளி விளக்காய்த் திகழ்ந்தீர் மம்மி!
இன்று ஒளி இழந்து இருளுக்குள் வாழ்ந்தது - ஆறு மாதங்களா?
மலர் என்ற நாமமும் அதற்கேற்றாற் போல்
மலர்ந்த முகத்துடனும் மாசற்ற நெஞ்சுடனும்
வார்த்தைக்குள் அடங்காத வனப்புமிகு தேவியாக
அன்பிற்கோர் அணிகலனாக அருளுக்கோர் உறைவிடமாக
பண்பிற்கோர் பகலவனாக; பாசத்திற்கோர் தெய்வமாக
குடும்பத்திற்கோர் குத்து விளக்காக!
வாழ்ந்து மணம் பரம்பிய மலரே மம்மி!
பிணி என்ற ஒன்று எம்மைப் பிரிக்குமென்று தெரிந்திருந்தால்
மண்ணுலக வாழ்வே வேண்டாமென்றிருப்போமே
எம்மோடு வாழ்ந்தது போதுமென்றெண்ணியதால்
எம்மையெல்லாம் தவிக்கவிட்டுப் பாதியிலே சென்றுவிட்டதால்
பாசக்கயிறறுந்து பரிதவிக்கும் கணவன்
காக்கின்ற கைகளின்றிக் கதறியழும் முப்பிள்ளைகள்
நாமும் கண்ணீரில் நனைகின்றோம்.
மம்மி என்றும் எம்மோடு வாழவேண்டுமென்று
வேண்டுகின்றோம் ஆண்டவனை.
நித்திய இளைப்பாற்றியை இவருக்கு அளித்தருளும்
ஆண்டவரே.

(சி/573105) கணவர், பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்



### முருகன் சின்னராசா

(PhotoGraper குமார்)

புதிய வீதி, கரவெட்டி தெற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகன் சின்னராசா 18.11.2010 வியாழக்கிழமை டோகாவில் காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வன்னேரிக்குளம்,
கிளிநொச்சி. (105708)

தகவல்:
க.செல்வராஜா (மைத்துனர்).

## எமக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முக்கியத்துவம் வாய்ந்த நாடாக உள்ளதால் இந்தியாவும் சீனாவும் இலங்கையில் அதிகாரப் போட்டியில் குதித்துள்ளன. இது தொடர்ந்தால் ஆப்கானிஸ்தான், சூடான் போன்ற நாடுகளில் ஏற்பட்டுள்ள நிலைமைதான் இலங்கையிலும் ஏற்படும்.

சீனா, இந்தியா போன்ற நாடுகளுடன் இலங்கை செய்யும் ஒப்பந்தங்களால் இங்கு சர்வதேச பயங்கரவாதமே தோன்றும். யுத்த காலத்தில் சீனா, இந்தியா மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகள் எமக்கு உதவியமைக்காக நாம் எமது நாட்டின் இறைமையை விட்டுக்கொடுக்கக் கூடாது.

இன்னும் 5,10 வருடங்களில் முஸ்லிம் மற்றும் தமிழ் மக்களின் சக்திகள் எழுந்து நிற்கும். சர்வதேச பயங்கரவாதத்தின் மிரட்டல் அதிகரிக்கும். இதை நினைக்கும் போது எனது உடம்பு நடுங்குகிறது. எனவே, சர்வதேச அதிகாரப் போட்டிக்கு இடம் அளிக்காதீர்கள்.

பௌத்தத்திற்குத் தலைசிறந்த நாடான தாய்லாந்து விபசாரத்தால் சீரழிந்து போகின்றது. தாய்லாந்து மற்றும் பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளைச் சேர்ந்த பெண்கள் விபசாரத்தில் ஈடுபடுவதற்காக இலங்கை வருகின்றனர். இந்த நிலைமை தொடர்ந்தால் தாய்லாந்தின் நிலைமைதான் இலங்கைக்கும் ஏற்படும். - என்றார்.


## தவறிவிட்டது

காங்கேசன்துறை என்னும் முகவரியுடைய ஆன்மிலே ஜெயந்திரன் (832986291V) தே.அ. அட்டை மற்றும் இராணுவ அடையாள அட்டையும் யாழ்ப்பாணத்துக்கும் ஆறுகால் மடத்துக்கும் இடையில் தவறிவிட்டது. இவற்றை கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் முகவரியுடன் தொடர்பு கொண்டு ஒப்படைத்துதவவும்.

1920 பவர் ரோட்சென்ரர், மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். T.P -0212226732

## சங்கீத வகுப்புகள்

இந்தியாவில் இசைக் கலைமணிப் பட்டம் பெற்ற, இந்திய சினிமாத் துறையால் சிலோன் ஜெகனி எனப் பட்டம் பெற்ற, ஆசிரியர் சண்முகநாதன் ஜெகனியால் புதிதாக சங்கீத வகுப்புகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பதிவுக்கு முந்துங்கள்

தொடர்பு-0778892226

## Yoga For You

பிரிய யோக பயிற்சி நிலையம்

புதிய வகுப்புகள் ஆரம்பம்

(27.11.2010) சனிக்கிழமை

காலை 7.00 - 8.00 am

மறைக்கல்வி நடுநிலையம்,
பிரதான வீதி,
யாழ்ப்பாணம். தொடர்பு-0773960311

## Grade Way & Achivement

இளைஞர்களுக்கு ஒரு அரிய சந்தர்ப்பம் சாவகச்சேரியில் அமைந்துள்ள Innovage (Multinational) கம்பனிக்கும் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள கிளைகளுக்கும் முகாமைத்துவத்துக்கான ஆள்சேர்ப்புக்கள் இடம்பெறுகின்றன. நீங்களும் O/L, A/L தகுதி பெற்றவர்களாயின் சர்வதேச ரீதியான பயிற்சியுடன் உயர்வான சம்பளமும் வழங்கப்படும்.

தொ.பே.இல: 0750438588, 0717494735

## நிஷா மொழி பெயர்ப்பாளர் வழங்கும்

ஆங்கில சிங்கள வகுப்புகள்

அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும்.

மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள்.

28/11/2010க்கு முன் பதிவுகள் மேற்கொள்ளப்படும்

தொடர்புக்கு:

27. புதுமை மாதா கிழக்கு வீதி
குருநகர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி:
0775948722

(106476)


## கோண்டாவில் இந்துவின் அஞ்சலி



எமது பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியையும், ஆசிரியர் நலன்புரிக் கழக தலைவரும், கற்பித்தல், மாணவர் நலனோம்பலில் தீவிர ஈடுபாடுடையவருமான திருமதி செந்தகுமாரி காமலச்சந்திரன் அவர்களின் அன்புத் தாய்

### சரஸ்வதி சண்முகராசா

அவர்களின் மறைவுச் செய்தி எம்மை எல்லாம் பெரும் துயரில் ஆழ்த்தியது. அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் குடும்பத்தினருக்கும் ஆறுதல் கூறுகின்றோம்

யா/கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### நல்லதம்பி பேரம்பலம்

(இளைப்பாறிய அதிபர், யா/அல்லாரை அ.த.க. பாடசாலை)



மீசாலை மேற்கு, மீசாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட நல்லதம்பி பேரம்பலம் நேற்றுமுன்தினம் (23.11.2010) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - பொன்னம்மா தம்பதியினரின் மூத்த மகனும் காலஞ்சென்ற யோகாம்பிகையின் அன்புக் கணவரும் மோகராணி, சக்திவேல், லவகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும் பொன்னம்பலம், சரஸ்வதி, வீரசிங்கம், தியாகராசா, தவமணி, வன்னியசிங்கம், நவரத்தினம், செல்வநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரரும் தெய்வேந்திரன், மனோறஞ்சிதம், ஆனந்தசபேசன் ஆகியோரின் அன்பு மாமனாரும் திரு.திருமதி சுதாகர், பிரியந்தா, பிரியந்தன், யோவனா, ஜக்ஷனா, ஜதுஷன், சௌமியா, கிருத்திகா ஆகியோரின் அன்புப் பேரனும் நண்ஷின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.11.2010) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணியளவில் திக்கம், அல்வாய் மேற்கில் உள்ள மகனது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திக்கம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திக்கம், அல்வாய் மேற்கு,
அல்வாய்.
T.P.0776064324

தகவல்:
சக்திவேல் (மகன்).

### செல்லத்துரை ஜெயவீரசிங்கம்



காரைநகர் பலகாட்டை பிறப்பிடமாகவும், இல.48, ஜின்னா வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை ஜெயவீரசிங்கம் 23.11.2010 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சிவபாக்கியம் தம்பதியரின் அன்புப் புதல்வரும், ஈஸ்வரியின் அன்புக் கணவரும், ஜெயக்குமார் (அமெரிக்கா), ஞானகுமார், சிவகுமார் (கட்டார்) ஆகியோரின் அன்புத் தந்தையும், இந்திராவதி, புஸ்பாதேவி, வசந்தாதேவி, மகேந்திரராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும், தியாகராசா, உருத்திரகுமார், காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் நிர்மலாதேவி, இராஜேஸ்வரி, சிவசம்பூ, இராசலக்சுமி, மகேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனனும், ஜெயந்தி, ஜெயராசா, ஜெயரஞ்சன், ஜெயப்பிரகாஸ், சிவலக்ஷி (கனடா), சிவகுமாரி ஆகியோரின் பாசமிகு மாமனும், தவசாந்தன், அருள்பாலினி, சுகந்தினி, பாலகுமார் (கனடா) ஆகியோரின் பாசமிகு பெரிய தந்தையும், சகானாவின் (கனடா) பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நிரந்தர வதிவிடம்: 74/1, நியூ கொழும்பு றோட், எட்டியாந்தோட்டை.
தற்காலிக வதிவிடம்: இல.48, ஜின்னா வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 0777072117

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி முருகேசு பகவதி



அல்வாய் வடக்கு, அல்வாய், " மயூரபதி " யைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு பகவதி நேற்று (24.11.2010) புதன் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமர் - தெய்வானை தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை மற்றும் பொன்னம்மா தம்பதியரின் மருமகளும் முருகேசின் (புத்திசிகாமணி) அன்பு மனைவியும், ஜெயபாரதி, இராசநாயகம் (அநாதரட்சகன் - உதவிக் கல்விப்பணிப்பாளர், முறைசாராக் கல்வி, யாழ். வலயம்), பகீரதன், ஜெயஸ்ரீதரன் (ஜீவா - Denmark), கருணாகரன் (Canada) ஆகியோரின் அன்புத் தாயாரும், பவானந்தன் (ஓய்வுபெற்ற மேலதிக மாவட்டப் பதிவாளர் - முல்லைத்தீவு), இன்பமதி, யோகேஸ்வரி, டெல்லிகா (Denmark), காயத்திரி (Canada), ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஜெயந்தன் (ஆசிரியர் மு/பாரதிபுரம், நெட்பானா), செந்தீரன், கீர்த்திகா - இந்திரலிங்கம், காலஞ்சென்ற பிரசன்னா, ஜனனி, பிரசாந்த் (Swiss), அருசாந் (மாணவன் - யாழ். இந்துக்கல்லூரி), எழிலன் (மாணவன் - யாழ். தொழில்நுட்பக் கல்லூரி), அனோஜா - துஷயந்தன், பிரசல்ஜா (Denmark), நிதூரி (Canada), நியன் (Canada) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், யதுநயன், அட்சயகீர்த்தன் ஆகியோரின் அன்புப் பூட்டியும், காலஞ்சென்றவர்களான மகாலிங்கம், திலகவதி, இராசலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.11.2010) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைக்காக அல்வாய், பங்கவம்படி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மயூரபதி, அல்வாய் வடக்கு,
அல்வாய். , T.P. 021-226 4508.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடகடலில் தொழில் செய்வதற்கு இந்திய மீனவர்களுக்கு அனுமதி மறுப்பு

## அவர்களின் கோரிக்கை நிராகரிப்பு என்கிறார் சமாசத் தலைவர்

யாழ்ப்பாணம், நவ.25

வாரத்தில் இரண்டு நாள்கள் இலங்கையின் வட பகுதிக் கடற்பரப்பில் இடையூறுகளின்றி கடற்தொழில் செய்ய அனுமதி வழங்கப்பட வேண்டும் என்ற இந்திய மீனவர்களின் கோரிக்கைக்கு தாம் மறுப்புத் தெரிவித்து விட்டதாக யாழ். மாவட்ட கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ்.தவரட்ணம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மன்னார் குடாவிலிருந்து பாக்கு நீரிணை வரையான எமது வட கடல் பரப்பில் கடல் வளத்தை அழிக்கும் உபகரணங்களைக் கொண்டு தொழில் செய்வதற்கு எவரையுமே நாம் அனுமதிக்கமாட்டோம். இந்திய மீனவர்கள் றோலர் படகு மற்றும் தடைசெய்யப்பட்ட வலைகளைக் கொண்டு எமது கடற்பரப்பில் தொழில் செய்வதற்கு நாம் மறுத்துள்ளோம்.

இலங்கை இந்திய இரு நாட்டு மீனவர்கள் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று அண்மையில் இந்தியாவில் இடம்பெற்ற போது எமது நிலைப்பாடு குறித்து எமது தரப்பினர் தெளிவுபடுத்தியிருந்தனர்.

இலங்கையின் வடகடலில் தடை செய்யப்பட்ட உபகரணங்களைக் கொண்டு தொழில் செய்வதற்கு இந்திய மீனவர்களுக்கு அனுமதி மறுத்தமையானது எமது கடற்தொழிலாளர்களின் ஏகமனதான தீர்மானத்துக்கு அமைவானதாகும். இந்தத் தீர்மானம் குறித்து கடற்றொழில் அமைச்சருக்கும் தெரியப்படுத்தவுள்ளோம் - என்றார். (ஒ-14)


## தேவை

பிரபல நிறுவனம் ஒன்றிற்கு வாடிக்கையாளர் உத்தியோகத்தர் தேவை. (சந்தைப்படுத்துநர்) 26 வயதிற்கு உட்பட்ட சுறுசுறுப்பாக வேலை செய்யக்கூடிய தகுதி உடையோர் இன்று முற்பகல் 9 மணிக்கும் 4 மணிக்கும் இடையில் கீழ்வரும் முகவரிக்கு சுயவிவரக் கோவையுடன் நேரில் வரவும்.

131, இராசாவின் தோட்டம்,
நல்லூர், யாழ்ப்பாணம்.

மேலதிக விவரங்களுக்கு ஹிரான் பீற்றர்
கிளைக் காரியாலயப் பொறுப்பாளர்.
0773427843


## பரீட்சை மண்டபம் இடமாற்றம்

இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையினால் கோரப்பட்ட விற்பனை ஊக்குவிப்பு முகாமையாளர் பதவிக்கான தெரிவுப்பரீட்சை நாளைமறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இப்பரீட்சை யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெறுமென அறிவிக்கப்பட்ட போதிலும் தவிர்க்க முடியாத காரணத்தினால் இடம்மாற்றப்பட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீட மற்றும் முகாமைத்துவ பீட பரீட்சை மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சை இலங்கை திறந்த பல்கலைக்கழகம் ஊடாக நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-319)

## நவாலியூர் அமரர் செ.சதீஷ் II ஆம் ஆண்டு ஞாபகம்



2008இல் மரணத்தில்
முடிந்த திருமணத்தின்
2 ஆம் ஆண்டில்
அமரர் செ.சதீஷ்
அவர்களை இன்று
(25.11.2010) நினைவு கூருகின்றோம்.

HSCMF நவாலி. குடும்பத்தினர்.

## உதைபந்தாட்டம்; இன்றைய போட்டிகள்

வலி.வடக்கு, நவ.25

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 13 வயதுப் பிரிவினர்களுக்கான உதைபந்தாட்ட இறுதி மற்றும் மூன்றாம் இடத்திற்கானபோட்டிகள் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இன்றைய ஆட்டங்களில்மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

**மூன்றாம் இடம்**

ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம் எதிர் மானிப்பாய் இந்துக் கல்லூரி.

**இறுதிப் போட்டி**

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி எதிர் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி.

(ஒ-86)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

### அமரர் சந்திரசேகரம் சூரியகுமாரன்



மலர்வு 07.07.1958

உதிர்வு 26.10.2010

அன்பே ஆருயிரே
எமது அருமை குலவிளக்கே
எமை எல்லாம் பரிதவிக்க விட்டு
எங்கையையா நீர் சென்றுவிட்டீர்
தேடி அலைகின்றோம் உம் உருவை நாடி
நீர் எம் முன்னே வரமாட்டீரோ?
உம் நினைவால் குடும்பத்தினர் எல்லோரும்
சிலையாகி விட்டோமே
மீண்டும் ஒருமுறை எங்கள் குல தலைவனாய்
வரமாட்டீரோ அன்புத் தெய்வமே!

அன்னாரின் மரணச் செய்திகேட்டு ஓடோடி வந்து உதவியவர்களுக்கும், ஆறுதல் கூறியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், மரணச்சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும், ஆறுதல் கூறி ஆகாரம் அளித்தவர்களுக்கும், யாழ்.போதனா வைத்தியசாலையில் அவருக்கு உதவியவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவி செய்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (25.11.2010) வியாழக்கிழமை காலை 7 மணிக்கு தெணியம்மன் ஆலய அந்தியேட்டி மடத்தில் கிரியைகள் நடைபெறும். தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் சபிண்டீகரணம் நடைபெற்று ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*அழைப்புக் கிடைக்கத் தவறியவர்கள் இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று நிகழ்வில் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.*

*ஒடக்கரை,*
*பருத்தித்துறை.*

குடும்பத்தினர்.


## வீடு வாடகைக்கு விடப்படும்

கோண்டாவில் மேற்கு நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு 0772093215

## மனோதத்துவ வைத்தியம் (GENERAL PSYCHOTHERAPHY)

பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம்

26.11.2010 முதல் 02.12.2010 வரை யாழில்

ஆரம்ப நிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்குத் திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய் கோளாறுகள், வெள்ளை போகுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள். எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவ ரீதியிலும் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாள்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

பதிவுக் கட்டணம் 250/=

காமல் ரூறிஸ்ற் இன்
(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோயிலுக்குமிடையில்)
(சிவதர்ஷன் எலக்ரோனிக் மேல்மாடி)
392, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 0719315664, 0777569205


## மரண அறிவித்தல்கள்

### செல்லத்துரை அன்னலிங்கம்



யாழ். மாவட்ட முன்னாள் மேலதிகப் பதிவாளரும், உடுவில் பிரிவின் முன்னாள் விவாகம், பிறப்பு, இறப்பு பதிவாளரும் கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், தாவடியை வசிப்பிடமாகக் கொண்ட செல்லத்துரை அன்னலிங்கம் நேற்று (24.11.2010) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*மானிப்பாய் வீதி,*
*கணேசன் கருணை, தாவடி.*
*021 3218551, 021 222 3522*

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி திருநாவுக்கரசு வள்ளியம்மை (பண்ணாகம்)

பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும், காரைநகர் வேதரடைப்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திருநாவுக்கரசு வள்ளியம்மை நேற்று (24.11.2010) புதன்கிழமை காரைநகர் வேதரடைப்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசைப்பிள்ளை திருநாவுக்கரசு அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான மாணிக்கவாசகர், பொன்னுத்துரை (பண்ணாகம்) மற்றும் பாய்க்கம் (பண்ணாகம்), பொன்னம்மா (பண்ணாகம்), பரமேஸ்வரி (நவாலி), இராசதுரை (பண்ணாகம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், து.நாகேஸ்வரி (மலாயன் பென்சனியர்), க.தவமலர் (கணக்காளர், ப.தெ.வ. அ. கூட்டுறவுச் சங்கம், சங்கானை) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற துரைராசா மற்றும் சி.கங்காதரன் (சமுர்த்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், காரைநகர்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், திருமாறன், மஞ்சு, தயானந்தா, மதிவதனி, யனகன் (மாணவன், தேசிய கல்வியியற் கல்லூரி, முதலாம் வருடம் கோப்பாய்), கமல்ராஜ், கௌரீசன், மீனாட்சி சுந்தர் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சேனாதீர (முதலாம் வருட மாணவன், விஞ்ஞான பீடம், யாழ். பல்கலைக்கழகம்), ரவி, சிறி, சஞ்சு, பவித்திரா, நிதர்சன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (25.11.2010) வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு வேதரடைப்பு காரைநகரில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வேதரடைப்பு,*
*காரைநகர்.* (சி/572552)

தகவல்: சி.கங்காதரன்
(மருமகன்) 0778435056


## உயர்தரமான இயற்கையான தோல் பாதுகாப்பு மற்றும் அழகுச்சாதன உற்பத்திப் பொருள்கள்

- நல்ல தோற்றம்!
- மகிழ்ச்சியாய் இருத்தல்!
- பணம் சம்பாதித்தல்!

இலவச அழகுச் செயற்திட்டம்.
- தோல் பாதுகாப்பு.
- தலைமுடி பராமரிப்பு.
- மற்றும் அழகுக் குறிப்புகள்.

அனுமதி இலவசம்

முடிவில்லா வருமானம் மற்றும் வேலை வாய்ப்புகள்
(வருமானம் 5,000 தொடக்கம் 50,000 வரை)

- 5 நண்பர்களுடன் வருபவர்களுக்கு பரிசில்கள் உண்டு.

திகதி : 27th Nov.2010
நேரம் : 1.30 p.m

இதில் பங்களிப்பதால் கிடைக்கக்கூடியவை -
- நீளமான தலைமுடி.
- ஆரோக்கியமான தோல்.
- அழகான சிரிப்பு.

தயவுசெய்து அன்புமலருடன் தொலைபேசிமூலம் உங்களுடைய ஆசனத்தை ஒதுக்கிக்கொள்ளுங்கள்.
(0212229832)

(சி/573104)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ ஆட்சியிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோய் வைத்தியசாலை, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஆகியவை உயர் பாதுகாப்பு வலயம் என்றழைக்கப்படும் பகுதியினுள்ளேயே அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வலிகாமம் வடக்கு, மண்டைதீவு, யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புத்துறை வரையான பகுதி, கரம்பகம், எழுதுமட்டுவாள் வடக்கு, தெற்கு, நாகர்கோவில், மற்றும் மறவன்புலோ ஆகிய பகுதிகளும் உயர் பாதுகாப்பு வலயம் என்றழைக்கப்படும் பகுதியினுள்ளேயே அமைந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. வலிகாமம் வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த 1,00,000 பேரும் தென்மராட்சியிலிருந்து இடம்பெயர்ந்த 1,00,000 பேரும் மீளவும் தங்கள் சொந்த இடங்களுக்குச் சென்று குடியமர்வதற்கு உயர் பாதுகாப்பு வலயம் என்றழைக்கப்படும் பிரகடனத்தின் காரணமாக அனுமதிக்கப்படவில்லை.

### யாழ்.அரச அதிபர் கூற்றுக்குக் கண்டனம்

இது தொடர்பாக மேல்நீதிமன்றத்தில் நாங்கள் தொடர்ந்த அடிப்படை உரிமை மீறல் வழக்கு இன்னும் விசாரணையில் உள்ள நிலையில் அண்மையில் யாழ். மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் ஜேர்மனியிலிருந்து வருகைதந்திருந்த பிரதிநிதிகளுடனான சந்திப்பொன்றில் யாழ்ப்பாணத்தில் உயர்பாதுகாப்பு வலயமென்று ஏதும் இல்லையென்றும் கண்ணிவெடி அகற்றப்பட வேண்டிய இடங்களே காணப்படுகின்றன என்றும் கூறியிருந்ததை இங்கு நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

அரச உயர் பதவியில் இருக்கும் ஒரு தமிழ்ப்பெண்மணி இவ்வாறு அப்பட்டமாகப் பொய் கூறிவரும் துர்ப்பாக்கிய நிலையையிட்டு நான் மிகவும் மனம் வருந்துகின்றேன். இனிமேலாவது அவர் வாயைத் திறக்குமுன்பு சரியான தகவல்களைத் தெரிந்துகொள்ள வேண்டும். ஒருவருடைய சொந்த இடத்தில் சென்று மீளக் குடியமர விடாது மறுப்பது அவருடைய அடிப்படை உரிமையை மீறும் செயலாகும்.

### மண்டை தீவு மக்களின் பரிதாப நிலை

மண்டைதீவில் பிரதான வீதியில் ஒரு கிலோமீற்றர் தூரம் தடைசெய்யப்பட்டுள்ளதுடன் முதலாம் வட்டாரத்திலிருந்து 5ஆம் வட்டாரம் வரையான பகுதிகள் உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளன. உயர் பாதுகாப்பு வலயம் என்றழைக்கப்படும் இப்பகுதியில் ஏறக்குறைய 75 வீடுகளில் கடற்படையினர் தொடர்ந்தும் குடியிருக்கின்றனர்.

ஏறக்குறைய 1,500 குடும்பங்கள் மண்டைதீவிலிருந்து இடம்பெயர்ந்து வன்னிக்குச் சென்றன. இப்பொழுது வன்னியில் இருந்து திரும்ப வந்தவர்களும், அகதிகளாக வந்தவர்களும் 6ஆம், 7ஆம் வட்டாரங்களில் உள்ள பொது நிறுவனங்களுக்குச் சொந்தமான கட்டடங்களிலேயே தங்கியுள்ளனர். இவர்கள் பரிதாபகரமான நிலையிலேயே அங்கு வாழ்கின்றனர். மண்டைதீவிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் அங்கேயே மீளக்குடியமர விரைவில் அனுமதிக்கப்படல் வேண்டும்.

### இராணுவத்தினரை வெளியேற்றுதல்

யுத்தம் நடைபெற்ற காலத்தில் ஏறக்குறைய ஒரு இலட்சம் படையினர் வடக்கில் நிலைகொண்டிருந்தனர். அவர்கள் இன்றும் அங்கேயே தொடர்ந்தும் நிலைகொண்டுள்ளனர். சீன அரசின் உதவியுடன் வடக்கிலே இவர்களுக்கு குடியிருப்புகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன என ஒரு பத்திரிகைச் செய்தியின் மூலமாக அறிகிறேன். ஆசியாவிலேயே இலங்கை மிகவும் இராணுவமயமாக்கப்பட்ட ஒரு நாடாகவே காணப்படுகின்றது. இயல்பு நிலையும், இராணுவ ஆட்சியிலிருந்து விடுதலையுமே இப்பொழுது தமிழர்களது தேவையாக உள்ளன. 1990ஆம் ஆண்டளவில் இருந்த நிலைக்கு அமைவாக படையினர் பின்னே சென்று வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில் மக்களை மீளக் குடியமர அனுமதிக்க வேண்டும்.

இலங்கை அரசைப் பொறுத்தவரையில் மில்லியன் கணக்கான தொகையை களியாட்டங்களிலேயே செலவுசெய்து வருகின்றது. அண்மையில் பல மில்லியன் ரூபா செலவில் நடத்தப்பட்ட திரைப்படக் களியாட்ட விழா இதற்கு ஓர் நல்ல உதாரணமாகும்.

எமது ஜனாதிபதி ஐக்கிய நாடுகள் சபைக்குச் சென்றபோது அவருடன் 37 பேர் கூடச் சென்றிருந்தனர். இவர்களுக்கு அங்கு என்ன தேவை இருந்தது? அரசைப் பொறுத்தவரையில் இவ்வாறான தேவையற்ற செலவினங்களை இயன்றளவு குறைத்துக்கொள்ள வேண்டும்.

### கலகத்தை உண்டு பண்ண முயற்சியா இது?

மேலும் அண்மையில் 350 சிங்களக் குடும்பத்தினர் யாழ்ப்பாணத்துக்குச் சென்று யாழ். ரயில் நிலையத்தில் தங்கியிருந்தனர் என்ற செய்திபற்றிக் குறிப்பிட விரும்புகின்றேன். பின்னர் அவர்கள் நாவற்குழிக்குச் சென்று அங்கு தற்காலிக கூடாரங்களை அமைத்து தங்கியிருக்கிறார்கள்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இது தொடர்பில் சில விசாரணைகளை நடத்தியிருந்ததும் அதன்போது இவர்கள் யாழ்ப்பாணத்தில் முன்னர் குடியிருந்ததாகவோ அல்லது யாழ்ப்பாணத்தில் இருந்து துரத்தப்பட்டவர்களோ அல்லர் என்பது தெரியவந்துள்ளது.

எங்களுக்கிடையில் கலகத்தை உண்டுபண்ண முனையும் சில குழுக்களே இவர்களை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி பிரச்சினைகளை உருவாக்குகின்றன. உண்மையில் அவர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து துரத்தப்பட்டவர்களாயின் அவர்கள் அங்கு மீளக்குடியேற்றப்படல் வேண்டும். ஆனால் இவர்கள் அவ்வாறானவர்கள் அல்லர். யாழ்ப்பாணத்தில் வசித்துவந்த சில முஸ்லிம்கள் ஒரு காலத்தில் விரட்டப்பட்டார்கள். ஆனால் இப்போது அவர்கள் முன்னர் குடியிருந்த இடங்களில் மீளக் குடியமர்த்தப்படுகிறார்கள்.

-இப்படி அவர் கூறினார்.(ஒ-சி)

# அரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு தனது பணிகளை மக்களுக்காக வழங்கிவந்தது. எனினும் தற்போது அரசு யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய இடங்களிலுள்ள எமது அலுவலகங்களை மூடும்படி கோரியுள்ளதால் அதற்கான கால அளவுபற்றித் தீர்மானிக்க வேண்டியுள்ளது. இதுதொடர்பாக விரைவில் உரிய அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு பேச உள்ளோம்.

நவம்பர் 29ஆம் திகதி மன்னாரிலுள்ள எமது அலுவலகத்தை மூடவுள்ளோம். அதன் பின்னரே யாழ்ப்பாணம், வவுனியாவிலுள்ள அலுவலகங்களை மூடுவதற்கான காலம் தீர்மானிக்கப்படும். இந்த அலுவலகங்கள் மூடப்பட்டாலும் கொழும்பிலுள்ள எமது தலைமையகத்தின் மூலம் எமது நடவடிக்கைகள் யாவும் முன்னெடுக்கப்படும்.

இதேவேளை வடபகுதி மக்களுக்கு விநியோகிக்கவென எம்மிடமுள்ள இருசக்கர உழவு இயந்திரங்கள் விவசாய மற்றும் கடற்றொழில் உபகரணங்கள் என்பவற்றை மாற்றுவழிமுறைத் தீர்வுகள் மூலம் விநியோகிக்க உள்ளோம். குறிப்பாக எமது சக பங்காளிக்குழுவான இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் மூலம் இவற்றை மேற்கொள்ள ஆலோசித்துவருகிறோம். அத்துடன் யாழ்ப்பாணத்திலுள்ள ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் பணிகளைத் தொடர்வதற்கும், தடுப்புக் காவலில் உள்ளவர்களை அவரது உறவினர்கள் சந்திப்பதற்கும் சர்வதேச செஞ்சிலுவைக்குழு தொடர்ந்தும் பாடுபடும் - என்றார். (எ)

# கொழும்புக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதே தினம் காலை 9 மணிக்கு இந்தியா இல்லத்தில் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவைச் சந்திக்கவுள்ளது.

இதேவேளை, அமைச்சரின் யாழ்ப்பாண விஜயத்துக்கான ஆயத்தங்கள், ஏற்பாடுகளைக் கவனிக்கும் முகமாக நேற்று இந்தியத் தூதரக அதிகாரிகள் இருவர் யாழ். நகர் வந்தனர். அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடியுள்ளனர்.

யாழ். நகரில் பிரதி இந்திய தூதரகத்தை இந்திய வெளிவிவகார அமைச்சர் 27 ஆம் திகதி சனிக்கிழமை திறந்து வைப்பார். யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறும் வைபவத்தில் 150 உழவு இயந்திரங்களை கமநல சேவை கள் திணைக்களம், விவசாயத் திணைக்களம் ஆகியவற்றிடம் கையளிக்கின்றார்.

இடம்பெயர்ந்து மீள்குடியமர்த்தப்படும் மக்களுக்கு இந்தியா நிர்மாணிக்கவுள்ள 50 ஆயிரம் வீடுகளில் முதற்கட்டமாக ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்கும் பணிகள் யாழ்ப்பாணம் அரியாலையில் ஆரம்பித்து வைக்கப்படும். அமைச்சர் கிருஷ்ணா சனிக்கிழமை காலை அரியாலையில் வீட்டுத் திட்டத்துக்கு அடிக்கல் நடுவார்.

இலங்கையில் தங்கியுள்ள நாட்களில் இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோர் தலைமையில் கூட்டு ஆலோசனைக் கூட்டமும் நடை பெறவுள்ளது. அவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் சந்தித்துப் பேசுவார் என இந்திய தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஒ-சி)

# இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருந்த போது, நலன்புரி முகாம்களில் தங்கியிருந்த சுமார் 30 ஆயிரம் பேர் இன்னும் அங்கேயே தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்ற செய்தி வேதனையளிக்கிறது.

நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களை அவர்களது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்ல அனுமதியளிப்பது தொடர்பாக இலங்கை அரசுக்கு பலமுறை வலியுறுத்தியும் இதுவரை உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

சொந்த நாட்டினுள் இடம்பெயர்ந்து வாழும் அவல நிலைக்கு உள்ளாகி பல்வேறு துயரங்களை எதிர்நோக்கி வரும் இலங்கைத் தமிழர்களின் துயரங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க, இலங்கை அரசு உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு இந்திய மத்திய அரசு வலியுறுத்த வேண்டும்.

மத்திய அரசின் நிதியுதவியுடன் இலங்கையில் யுத்தத்தினால் இடம்பெயர்ந்து நிரந்தர வீடுகளின்றி உள்ளவர்களுக்காக கட்டப்படவுள்ள 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகளைக் குறிப்பிட்ட காலத்துக்குள் நிறைவு செய்யவேண்டும். அதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசு மேற்கொள்ள வேண்டும்.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வும், அதிகாரப் பகிர்வும் கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கை இன்னும் ஆரம்ப கட்டத்திலேயே இருக்கின்றது. எனவே, இலங்கைத் தமிழர்கள் சம உரிமையுடனும், கண்ணியத்துடனும் வாழ வேண்டும். அதற்காக 'இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு முதலில் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும். - இப்படி முதல்வர் மு. கருணாநிதி தமது கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார். (எ-சி)

# இலங்கையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனிதாபிமான அடிப்படையில் தொண்டுகளை மேற்கொண்டு வரும் நிறுவனங்களும், தன்னார்வத் தொண்டர்களும் இலங்கை அரசின் நடவடிக்கைகளினால் நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இதைத் தவிர்த்து மனிதாபிமானத் தொண்டுகளை மேற்கொள்வதற்கு இலங்கை அரசு கூடுதலான ஆதரவை வழங்க வேண்டும்.

2010ஆம் ஆண்டின் முதல் அரையாண்டுப் பகுதியில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மனிதாபிமான தொண்டுகளை மேற்கொள்வது தொடர்பான கட்டுப்பாடுகளை இலங்கை அரசு ஓரளவு தளர்த்தியுள்ளது.

எனினும், இடம்பெயர் முகாம்களில் பணியாற்றுவதற்கு தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் பாதுகாப்பு அமைச்சிடம் அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும் மென்று நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான நிபந்தனைகளின் மூலம் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் சிக்கல்களை எதிர்நோக்கி வருகின்ற அதே வேளை, சில வகையான தொண்டுகளை மேற்கொள்வதற்கு மிகவும் வரையறுக்கப்பட்ட காலப் பகுதியே வழங்கப்படுவது போதுமானதல்ல .

- இப்படி ஐ.நா. செயலாளர் பான் கீ மூன் அவ்வறிக்கையில் தெரிவித்துள்ளார்.


பணிநிலை வேண்டுகை

கணினி பக்க வடிவமைப்பாளர் (ஆண்)
Graphics Designer

நேரச்சு பழகுநர் (ஆண்)
Offset Machine Helpers (KORD)

நிர்வாக உத்தியோகத்தர் (பெண்)
Office Clerk

இரவு நேரக் காவலாளி (ஆண்)
Night Security

அலுவலக உதவியாளர் (ஆண்)
Office Boy

புத்தகம் கட்டுநர் (பெண்)
Book Binder

முன்னனுபவம் உள்ளவர்கள் மட்டும்

(யாழ் மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்கள் மட்டும் )

விண்ணப்பதாரிகள் நவம்பர் 27,28 ஆம் திகதிகளில் நேரில் வரவும்

கரிகணன் பிறிண்டேர்ஸ்
424 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.



இணையத்தளப் பராமரிப்பாளர்கள்

25 உதயன் www.uthayan.com Online

www.uthayan.com,e-uthayan ஆகிய இணையத்தளங்களைத் தினமும் பராமரித்து விடயங்களைப் பதிவேற்றம் (Uploding) செய்வதற்குப் பொருத்தமான, தகுதியுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

தகுதி, அநுபவங்களின் அடிப்படையில் கவர்சிகரமான சம்பளம் - நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

ஆர்வமுடையவர்கள் இன்றும், நாளையும் நேரில் வரவும் :

முகாமையாளர்,
உதயன் - ஒன்லைன்,
347, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



SHAMROCK
ஈச்சமோட்டை, யாழ்.
A/L - 2012
பொருளியல்
"நெகிழ்ச்சிக் கோட்பாடு"
Mon, Fri - 5.30 P.m
Mr.V.ஞானவேல்
B.B.A (F.m Spl)



3 மாத சனி ஞாயிறு பயிற்சி
100% இலக்கணக்கற்றல், எழுத்துப்பயிற்சிகள் இல்லாத
ஆசிரியர்கள், அரச அலுவலர்கள், பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்
ஆரம்பம் : 27.11.2010
பிரிவுகள் : 8-9, 10-11, 1-2, 3-4, 4-5, 5-6
(3 மாத முடிவில் தமிழைப்போன்று சரளமாக ஆங்கிலம் பேச முடியும்)
MyWay 077 33 63 456
182, Stanley Rd, Jaffna



யாழ். நகரின் முன்னணி ஆசிரியர்
பொருளியல் திரு. NB.கஜீதரன்

| A/L-2011 | A/L-2012 |
| --- | --- |
| பணமும் வங்கியும் Paper Class | நெகிழ்ச்சிக் கோட்பாடு |

திங்கள், வெள்ளி → 3-6 P.m வரை
ஆரம்பம் 26.11.2010 வெள்ளி 3 மணி
தனிப்பாட அனுமதி உண்டு
BRAIN POWER INSTITUTE
(பாங்ஷால் வீதி - குருநகர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.11.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.